80—பக்கங்கள்.

ஓம் பரப்பிரம்மணே நம:

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும், ஆநந்தகரமான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்களும் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

கமலம்-9.	சென்னை பவ௵ ஆடிமீ 1௳	இதழ் 100.
Vol. 9.	1934 ம்௵ ஜூலைமீ 15௳	No. 100.

ஆநந்த  தரிசனம்

"நினைந்து நைந்து உள்கனைந்துருகி" பகவத் பக்தி செய்யாதவர்கள் அற்ப ஜீவியாய் பிறவித் துன்பத்தை நிவர்த்தித்துக்கொள்ள உபாயம் தேடாதவர்களாவர். இவர்களின் காலம் அஸந்துஷ்டியோடு கழியும். ஸம்ஸார ஸாகரத்தில் மூக்தனாய் முழுகிக் கிடக்கும் மந்த புத்தியுள்ள மனிதன் தன் ஜீவித காலத்தைத் துர்விநியோகப்படுத்தித் துரோகியாகிறான். சோற்றுக்குப் பாரமாய் உடலைத் தூக்கித் திரிபவனை நெருங்குவதும் நேசிப்பதும் பாபம். எவ்வளவு உயர்ந்த வாழ்வில் விளங்கினும், கடைசி காலத்தில் கடவுளின் தரிசனம் கிடைத்து, கடவுள் தியானத்தோடு உயிரை விடக்கூடிய அருளைப் பெற்றிருக்க வேண்டும். அவ்வித அருள் பெறாமல்—;அந்த அருளுக்கே தான் அருகனாகாதவரையில்,—அவன் வாழ்க்கை மனோநிம்மதியாகவோ நிறை செல்வத்துடன் கூடியிருந்ததாகவோ சொல்லிக்கொள்ள முடியாது. இவ்வுலகினில் எல்லாவற்றுள்ளும் பெருஞ் செல்வமாகிய மனோநிம்மதி என்பது கடவுள் தியானத்தால்தான்,—அந்தத் தியானமூலமாய்க் கடவுள் மனமிரங்கிக் கண்ணோக்கிடும் அருளால்தான்,—கிடைக்கப்பெறவேண்டும். அவ்விதம் பெறாதார் தமது காலமுடிவில் நரகக் குழிக்கே எல்லா வாயில்களையும்

நித்திரையினின்றும் விழித்தெழும்போது நமது எண்ணங்கள் அனைத்தும் எப்படி மறுபடியும் வெளிவருகின்றனவோ, அவ்வாறே இறக்குங் காலத்தில் மறைந்துபோகிற நமது மனோ எண்ணங்களனைத்தும், விழிப்பாகிய மறுஜென்ம ஆரம்பத்தில் தாமே வெளிவரும்.

திறந்து வைத்துக்கொண்டோராய்ப் பரிதபிக்கப்படும் நிலையினைச் சேர்வர் ஆதலின், என்றும் நாம் பகவத் பக்தி செய்யக்கடவோம்.

ஃ

"சொல்லினால் சொலப்படாது தோன்றுகின்ற சோதி" ஆன பகவானை நாம் எவ்விதமறிவது? பகவானுடைய அநந்த கல்யாண குணங்களை மனிதர் வர்ணித்து முடியாது. பகவத் ஸ்வரூபத்தை சாமான்யர்களால் எடுத்துச் சொல்ல இயலா. உலகத்தில் அநேக மதங்களிருக்கின்றன. ஒவ்வொரு மதத்தாரும் தெய்வத்தை யாராதிக்கிறார்கள். தங்கள் மதமொன்றே மோக்ஷத்தைக் கொடுக்குமென்று ஸாதிக்கின்றனர். பிரஸங்கத்தால் தெய்வத்தை யறிவது ஸாத்யமாகுமா? அனுபோகத்திலல்லவோ கண்டறிய வேண்டும். உயர்ந்த தின்பண்டங்களைப்பற்றி என்றும் தின்றறியாதவனிடத்தில் அவைகளின் ருசியை வர்ணித்தால் தெரிந்துகொள்வானா? அத்தகைய பதார்த்தங்களும் இருக்கின்றனவாவென்று ஸந்தோஷமடைந்து அவைகளை யடைய வழிதேடுபவனே விவேகியாவன். அவ்விதமே, பகவத் லக்ஷணத்தைச் சொன்னாலும் கேட்டாலும் போதாது. அதைப் பார்க்கப் பிரயாசைப்படவேண்டும். அதற்கென்ன வழி? சிறுவர், மத்யமர்கள், விருத்தர்கள் எல்லோருக்கும் படிப்படியாய் ஈஸ்வரனுடைய திவ்ய மங்கள ஸ்வரூபம் விளங்கும்படி கர்மம், பக்தி, ஞானமாகிய மூன்று வழிகளைக் காட்டியிருக்கிறார்கள். எவ்விதமாய்ப் பக்தி செய்தாலும் ஸர்வேசுவரன் அனுக்கிரகிப்பார்.

ஃ

"கர்மா வேறு, வாஸனை வேறு" ஒவ்வொருவரின் உள்ளத்திலும் இருவித நிலைகள் உள்ளன. அவை கர்மா, வாஸனை என்பவையாம். கர்மா என்பது இதற்கு முன்னெடுத்த மனுஷ்ய ஜன்மத்தில் புரிந்த நல்வினை தீவினைகள்; அவை செய்யும்போதே பதிவு ரூபமாய் உள்ளத்தில் பதிந்திருந்து மறு ஜன்மங்களில் தத்தம் பயனாகிய இன்ப துன்பங்களைத் தருகின்றன. அங்ஙனம் இன்ப துன்பங்களை மாத்திரம் தருவனவற்றையே கர்மங்களெனப்படுகின்றன. வாஸனையாவது, யாதாயினும் ஓர் காரியத்தைப் பலமுறை செய்தால், மீண்டும் அப்படிப்பட்ட காரியத்தையே செய்துகொண்டிருக்கவேண்டுமெனத் தோன்றச் செய்வதாகிய அப்பியாஸமாம். கர்மா, வாஸனை எனும் இரண்டும் இதற்கு முந்திய ஜன்மங்களில் செய்த செயல்களின் காரணமாகவே வந்தவையாகும். ஒரே ஓர் தடவையாக ஒரு காரியத்தைப் புரியினும் அது ஓர் கர்மாவாய்விடும். ஒரே காரியத்தைப் பலமுறை செய்தாலொழிய வாஸனை ஏற்படாது. கர்மாவினால் வரும் இன்ப துன்பங்களை அனுபவிக்காமல் தீராது. வாஸனையோ அவ்விதமன்று. வாஸனையால் ஏற்படும் நினைவுகளை விவேக பலத்தால் ஜெயித்துவிடலாம்.

ஃ

அறிக்கை:—பத்திரிகைக்கு வியாசங்கள், மதிப்புரைக்கு நூல்கள், அவை சம்பந்தமான கடிதங்கள் முதலியன யாவும் ஸ்ரீரங்கத்திற்குப் பத்திராசிரியருக்கே நேராக அனுப்புக. வியாசங்கள் திருப்பி யனுப்பப்படமாட்டா. ☞ ஆசிரியர்—"அமிர்த குணபோதினி"

"ஸ்ரீரங்க நிலயம்" 617, மேலடையவளஞ்சான் தெரு, ஸ்ரீரங்கம்

"வாஸனை இருவகை" அவை சுபம், அசுபம் என்பனவாம். முன் ஜன்மத்தில் பாவ காரியங்களையே மிகுதியாகப் புரிந்திருப்பின் அசுபவாஸனையும், புண்ணிய கருமங்களையே அதிகமாகச் செய்திருப்பின் சுபவாஸனையும் உண்டாகி அவை மனதில் பதிந்துபோய், அந்த பூர்வ பதிவு இந்த ஜன்மத்திலும் தோன்றி, அந்தந்த வாஸனைகளுக்கேற்ப நல்லது கெட்டது என்ற இரு வகையான ஆவலாதிகளை எழுப்புவிக்கும். பூர்வஜன்மத்தில் சுபவாஸனையே விசேஷமாய் ஏற்பட்டிருந்தாலும் இந்த ஜன்மத்தில் செய்கிற தீய ஸகவாசம் முதலியவைகளால் அது அசுபவாஸனை யாகிவிடலாம். அவ்விதமே, முன் ஜென்மத்தில் அசுப வாஸனையே அதிகம் ஏற்பட்டிருப்பினும், இந்த ஜன்மத்தில் ஸத்ஸகவாஸம், விவேகம், வைராக்கியம் முதலியவற்றால் அசுபத்தின் தோஷத்தை யகற்றி சுபவாஸனை வீசவும் செய்துவிடலாம்.

ஃ

"ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும்" ஞானிகள் இருவகையினர். உலகையே முற்றும் துறந்து பரப்பிரம்மத்தினிடத்திலேயே தமது மனதைச் செலுத்தி யாவற்றையும் மறந்திருப்பவர் ஒருசாரார். இன்னோருக்கு விரதம், நோன்பு வர்ணாச்ரம தர்மங்கள் எதுவுமில்லை. யாவற்றையும் கடந்து சென்றுவிட்டவராவர். மற்றொரு வகையினரோ சிஷ்யர்களோடும் கூடி, உலக வியவகாரங்களில் சம்பந்தப்பட்டவர்கள் போன்றும் தோற்றி, அந்தரங்கத்தில் ஸகல பற்றுக்களையும் விட்டிருப்பவர்கள். இவ்வாறான ஜீவன்முக்தர்கள் தம்மைப் பார்த்து மற்றவர்களும் அனுசரிக்கும்படியாகத் தமது வர்ணாச்ரம தர்மங்களையும் நோன்பு விரதாதிகளையும் நடத்திக்கொண்டு உலகுக்குத் தாங்கள் ஒரு வழிகாட்டியாக நிற்பர். இவர்களே உலகைக் கடைத்தேற்றுவிக்கச் செய்பவர்கள்.

ஃ

"ஸூக்ஷமம், ஸ்தூலம்" எந்த வஸ்துவைக் கவனித்தாலும் ஸூக்ஷ்மம், ஸ்தூலம் என்று இரு பிரிவினதா யிருக்கும். ஸூக்ஷ்மம் என்பது வெளிப்படாமல் மறைந்து நிற்கும் சக்தி. ஸ்தூலமோ நம் கண்ணெதிரிற் காணப்படுவது. விதையில் மரம் ஸூக்ஷ்மமாய் மறைந்து நின்று, அந்த விதை முளைத்த பின்னர் ஸ்தூலமாய் (வெளிப்படையாய்) மரம் கண்ணுக்குத் தோன்றுகின்றது. வித்வானுடைய ஹிருதயத்தில் மறைந்திருக்கும் கவிகள் ஸூக்ஷ்மமானவை. பிறகு அந்த வித்வானால் நூல் வடிவமாக வெளியிடப்படும் கவிகள் ஸ்தூலமாய்த் தெரியக்கூடியவை. இவ்விதமே சாஸ்திரங்களுக்குப் பொருள் கூறுகையில் வெளிப்படையாயுள்ள ஸ்தூல அர்த்தமொன்றும், இலை மறைந்த காய்போன்றும் தோன்றியும் தோன்றாமலுமுள்ள சூக்ஷ்ம அர்த்தமொன்று மிருக்கும். ஆகவே, வெளிக்குத் தோன்றும் சாமான்யமான

ஆங்கில மொழியின் அமைதியும் செந்தமிழ்மொழியின் அமைதியும் பல வகையால் மாறுபட்டுநிற்றலின், அவ்வாங்கிலத்திற் கிடந்த அரிய நூல்பொருளை ஆண்டு நின்றவாறே எடுத்துச் செந்தமிழில் மொழிபெயர்த்தல் செந்தமிழறிஞர்க்கு இன்பம் பயவாதாய் ஒழியும். ஆகவே, அம்மொழி நூலில் மிகவும் சுவைப்பதாய் விளங்கும் பொருளைச் செந்தமிழ் இயல்புக்கு இணங்குமாற்றான் சிறுபான்மை திரித்தும், வேறுசில சேர்த்தியும் இயற்றுதல் வேண்டும்.

கருத்தைக்கொண்டு தவருன அபிப்பிராயம் கொள்ளாமல், ஸூக்ஷமமான அர்த்தத்தைப் பெரியோர்களிடம் கேட்டு ஸந்தேகங்களை நிவர்த்தித்துக் கொள்ளவேண்டும்.

ஃ

"ஆனைக்கும் அடி சறுக்கும்" என்ற பழமொழி பொய்யல்ல. எவ்வளவு பொறுமை யிருப்பினும், ஒவ்வொரு ஸமயத்தில் கோபமுண்டாவது மனிதரின் இயற்கை. மனிதனுக்குக் கோபமுண்டாகக் காரணமென்ன? தன்னுடைய ஸந்தோஷத்திற்குக் கேடுதலுண்டாவதனுல் கோபம் உதிக்கிறது. உதாரணமாகத் தான் ஆசைப்பட்டுத் தேடிய பொருளை ஒருவன் கொண்டு போனுல், அவனைத் திருடன் என்றெண்ணிக் கோபிக்கிருன். அவனை சிக்ஷிக்க முயல்கிருன். தான் கற்பித்த பாடத்தை சிஷ்யன் படிக்கவில்லையே; தன்னுடைய முயற்சியும் காலமும் வியர்த்தமாயிற்றே; சிஷ்யன் கல்வி கற்ருனென்று ஸந்தோஷத்தை யடையாதபடி அவன் தடை செய்தானே யென்று கோபமடைகிருன். இப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களிலெல்லாம் மனுஷ்யன் தன்னுடைய ஆநந்தத்தையே பெரிதாக மதிப்பதால் கோபம் ஜனிக்கிறது. அதனுல் பொறுமை என்னும் அருமையான குணம் அற்றுப் போகிறது. இதற்காக விவேகிகள் தம்முடைய ஸந்தோஷத்தைக் கவனியாமல் "எல்லாம் ஈசன் செயல்" என்று கூறிச் சும்மா விருக்கின்றனர். அப்பொழுது கோபமும் எழுவதில்லை! நற்கருமத்தை மட்டும் செய்து, அதன் பலனைக் கருதாமலிரு என்று பெரியோர்கள் கூறும் வார்த்தை எத்தனை சுககரம்!

ஃ

"பகவத் பிரார்த்தனை"—ஓ' சர்வ வல்லபா! நின்னை எற்றித் துதிசெய்து நினது அநந்த காருண்யங்களை உத்ஸாகமான உள்ளத்தோடும் உரைக்கக் கடவோம். நின் ஸங்கற்பத்தின்படி சூரியன் எமக்கு ஒளியும் வெப்பமும் கொடுக்கின்றனன். திங்களும் தனது குளிர்ந்த சந்திரிகையை வீசிக் கண் வளர அழைக்கின்றது. நினது ஆணையின்படி எண்ணிறந்த கோளங்களும் ஆகாயத்தை அளாவுகின்றன. அளவற்ற விளைவோடு அழகிய புலங்களும் புன்னகை கூர்கின்றன. அண்டபிண்ட சராசரமான யாவற்றையும் நினது அருளின் ஒளியால் வெளியில் தங்கச் செய்கின்றனை. எமக்கு ஆடை ஆகாரம் முதலிய அநேக சரீரக் காப்புகளையும் அருளினை. நாங்கள் இன்ப பரிபூரணமாய் வாழ்க்கை நடத்துவதும் நின் ஆசிர்வாதமே. எவ்விடம் பார்க்கினும் நின்னருள் மயமே விளங்குகின்றது. ஒவ்வொரு கணமும் நின் விசித்திர நன்மைகளையே விரிக்கா நின்றது. ஓ! கர்த்தனே! எந்தப்பொழுதும் நினது அளவற்ற நன்றியையே யறிவித்து நின்னை எற்றித்துதிக்கச் செய்கின்றது. எமது உயிர்க்குயிரே! எமது போஷணையும் ஆநந்தமும் நினதருளே யல்லவா? எம்மைப் பசித்தபோது ஊட்டுகின்றனை. களைத்த போது உறங்கச் செய்கின்றனை. துக்கத்திலும் துன்பத்திலும் நாங்கள் வருந்துகையிலே எங்கள் கண்ணீரைத் துடைக்கின்றனை. யாங்கள் பக்தி

ஒருவர் எழுதிக் கொண்டிருக்கும்பொழுதே இன்னொருவர் அருகிலிருந்து தொண தொணவென்று இடையிடையே பேசவருவதானுல், அதைவிட சித்திரவதை வேறில்லை. அவர்களின் மூளையிலே களிமண் அடைத்துக்கொண்டிருக்கிறதோ என்னவோ?

யின்மையால் தமோற்றமுறின் எமது மனதைத் தேற்றிப் பக்குவப்படுத்திப் புது புது ஆசைகளைப் புகட்டுகின்றனை. யாங்கள் ஆதரவற்று அல்லற்படும் வேளையில் எமக்கு உதவி செய்து ஆட்கொண்டருள்கின்றனை. யாங்கள் பழிபாவத்தில் மூழ்குங்காலே, தக்ஷணமே நினதருள் பெற்று உய்யும்படி எமது மனதைக் கணந்தோறும் தாக்குகின்றாய். யாங்கள் உன்னை மறந்து தேடாவிட்டாலும் எம்மை நின் கருணை நிழலிலிருத்தி நன்மையே செய்கின்றனை. ஓ! எங்கள் இறைவா! கர்த்தனே! தேவே! நின் காருண்ணியப் பெருக்கை எடுத்துரைக்க யாரால் முடியும்? நினதன்பு அநந்தம். நின் பிதிரு வாச்சல்யமோ அளவிறந்தது. நினது ஆணை பூமண்டலமெங்கும் செல்லத் தக்கது. சத்தியமாகிய நின் மதம் உலகெங்கும் பிரகாசித்து யாவரும் உண்மையான நினையே தொழுவாராக. எமது நாவானது என்றும் உன்னைப் புகழக் கடவது. எமது ஆன்மா நன்றியுணர்ந்து என்றும் உன்னை வணங்கக் கடவது. எம் குடும்பத்தாரும் எத்தேசத்தாரும் உன் திருநாம சங்கீர்த்தனஞ் செய்வாராக. பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டும் எமைப் பிரியாத கர்த்தனே! ஜகத்ரக்ஷகா! எங்கும் நிறைகின்ற நின் பிரபாவம் எல்லாராலும் உணரப்பட்டுக் கொண்டாடப்படுவதாக. ஓம் தத்ஸத்.

நீ அலக்ஷியஞ் செய்தவரே உனக்கு இப்போது ஆதரவு.

பிந்திய காலத்தின் சந்திப்பு எவ்வெவ்விதமிருக்குமோ யார் கண்டார்? எப்போதுமே ஒருவர் வேண்டியவராகவோ—வேண்டாதவராகவோ இருந்துவிடுவதில்லை. எவ்வளவோ வேண்டியவர்களும், நாம் ஆசை வைத்தவர்களும் பிரிந்தோ, நம்மை மறந்தோ, பகைத்தோ, அவமதித்தோ, விலகியோ போனார்கள். நாம் வேண்டாமென்று அலக்ஷியம் செய்தவர்களே இன்று நமக்கு உதவுகிறார்கள். அவர்கள் நமது வீட்டுக்கு வந்தபோது தங்க இடம் தருவதற்கோ அன்ன மிடுவதற்கோ அந்த சமயம் எவ்வளவோ தடைகள் நேர்ந்து போய்விட்டன. அவர்களும் தனியே இருந்து சமைத்துண்டு சென்றனர். இப்போது அவர்களின் வீட்டிலேயே நாம் வியாதிப்படுக்கையுடன் தங்கும்படி நேர்வது எவ்வளவு மனோவாதனை? அவர்களின் வீட்டை விட்டால் வெளியூரில் வேறிடமில்லை. அவர்களும் மனம் கோணாது நம்மை உப சரிப்பதும் நமது நற்காலமே. இதனால் நம்மைவிட அவர்கள் குணத்தில் உயர்ந்த தங்கக்கட்டிகளாகிவிடுகிறார்கள்.

எவ்வளவு சிறிய வீடாயினும் ஒரு புத்தகபீரோவ் அங்கு இருக்குமாயின் அதுதான் கடவுள் ஆசீர்வதித்த வீடு.

"அறிந்தவன் துணியலாம்."

அமிர்தகுணபோதினி

பவ௵ ஆடி௴ 1௳

ரஸவாத வீண்பெருமையின் விபரீதம்.

ஆசைகள் மூன்றில், மண், பொன் எனும் இரண்டும் வெளியாசை (புறத்தாசை) எனவும், பெண் என்பது பாசபந்தங்களைப் பெருக்குவதனால் அதை உள்ளாசை (அகத்தாசை) எனவும் கூறுவர். இதில் பொன்னாசையிலேதான் உலகம் மயங்குவது அதிகம். பொன் இருப்பின் மண்ணும் பெண்ணும் எளிதிற் கைவசமாமென்பர். இப்பொன்னாசை காரணமாக, செம்பு இரும்பு முதலிய அற்ப உலோகங்களைத் தங்கமாக்கிக் கொடுப்பதாக ஏமாற்றும் ரஸவாதப் பித்தலாட்டங்களை அடிக்கடி கேள்வியுற்றிருக்கலாம். ரஸவாதம் என்பதை முற்றிலும் பொய்யென்றும் நினைப்பதற்கில்லை. கடவுளுடைய படைப்பிலுள்ள பல புதுமைகளுள் இதுவும் ஒன்றா யிருக்கக்கூடுந்தான். இரும்பைப் பொன்னாக மாற்றவல்ல சில மூலிகைகளைக் கடவுள் சிருஷ்டித்திருக்கலாகாதா? சிருஷ்டித்தே யிருக்கலாம். ஆயினும், அதைத் தெரிந்து கொண்டவரே யில்லையோ, தெரிந்து கொண்ட யாரோ சில யோகிகள் அதன் உண்மையை வெளியிடுவதில்லையோ, யாது காரணமோ அது ஒருவர்க்கும் பயன்படவில்லை.

ஃ

அது எவ்வாறிருப்பினும், ரஸவாதத்தின் உண்மை இத்தன்மையதெனத் தெரிந்து கொள்ளாமல் ரஸவாதிகளென்று வேஷமிட்டுக்கொண்டு தங்களின் வீண் ஆடம்பரமான அஸ்தலாகவங்களால் மயக்கித் திரியும் வஞ்சகர்கள் நமது தேசத்தில் மாத்திரமல்ல; ஐரோப்பா முதலிய நாடுகளிலும் நெடுநாளாக விசேஷமாயுண்டு. இன்னோர் இருவகைப்படுவர். ஒரு சார்பினர் பிறரை ஏமாற்றித் திரிபவர்களாவர்; மற்றொரு பிரிவினரோ ரஸவாதத்திலுள்ள ஏதோ ஒரு நுட்பத்தைத் தெரிந்துகொண்டு, தாம் அதைக் கண்டறிய வேண்டுமென்று தம் வாழ்நாள் முழுதும் அந்த முயற்சியிலேயே

சிலர் எங்கு போயினும், அங்கிருந்து ஒன்றைப்பறித்துக் கொண்டுபோக முயல்வதால், அவர்களைக் காணும்போதே இந்தத் தடவைக்கு என்னென்ன தூக்கித்தந்து அனுப்பவேண்டுமோவென்று கவலைப்படும்படியாகிறது.

ஒழித்து விடுபவர்களாவர். இப்படிப்பட்டவர்கள் பிறரை மோசம் செய்பவர்களல்ல; தம்மைத் தாமே மோசம் செய்து கொள்கின்றவர்கள். இத்தகையோர் தங்கள் முயற்சியில் முற்றும் வெற்றி பெருமற் போயினும், வெகுவாய் வைத்தியத்தில் தேறுவதுண்டு. "வாதி கெட்டால் வைத்தியனுவான்" என்பது பழமொழி. இவ் வண்ணமே ஐரோப்பாவில் ஏறக்குறைய 250-வருஷங்களுக்கு முன் ஜர்மனி தேசத்தில் பெர்லின் நகரத்துக்கு அருகிலுள்ள ஷிலீஸ் என்னும் கிராமத்தில் பாட்கர் என்ற ஒருவன் ரஸவாதம் செய்யப்புகுந்து அத் தொழிலில் சித்தி பெருமல், தனது வீண் பெருமையால் தாங்கொணுத் தொல்லைகளை அனுபவித்து, கடைசியில் பீங்கான் செய்யும் உபாயத்தைக் கண்டறிந்தான். அதன் வரலாற்றை இங்கு சுருக்கமாய்த் தருகிறோம். வீண் பெருமையால் ஸம்பவித்த பொல்லாப்பும் பாட்கரின் சரித்திரத்தால் நன்கு விளங்கும்.

ஃ

பாட்கர் தனது பன்னிரண்டு வயதில் பெர்லின் நகரத்தில் மருந்து வகை செய்து விற்கும் ஒருவனிடத்தில் தொழில் பழக அமர்ந்தான். அவனுக்கு இளமையிலேயே ரஸாயன வித்தையில் அதிக வாஞ்சை உண்டெனத் தோன்றுகிறது. ஏனெனில், அவகாசம் கிடைக்குந்தோறும் அவன் ரஸாயனப் பரீக்ஷை செய்து கொண்டு வருவான். அப்பரீக்ஷைகளில் பெரும்பாலவை ரஸவாதம் ஒன்றையே சார்ந்தவைகள். சில வருஷ காலம் சென்றதன் மேல் லோஹவர்க்கம் அனைத்தையும் கரைக்கத்தக்க பொருள் ஒன்றைக் கண்டு பிடித்ததாகவும், அதன் உதவியால் பொன் உண்டாக்க வகை அறிந்ததாகவும் பாட்கர் வீண் பெருமையாக வீம்புக்குச் சொன்னுன். அந்தப் பொருள் இன்னின்ன அதிசயங்களைச் செய்யவல்லதென்று அவன் தனக்கு மருந்து செய்யும் முறை கற்பித்த ஜார்ன் என்பவருக்குப் பரீக்ஷை செய்து காட்டினுன். இரும்பைப் பொன்னுக்கினுனென்று அந்த உபாத்தியாயரும் பிறரும் நெஞ்சார நம்பத்தக்கதாக அவன் ஏதோ ஒரு சூது காட்டினுன்.

ஃ

ஒருவரிடத்தில் அமர்ந்து மருந்து செய்யப் பழகின வித்தியார்த்தி ரஸவாதத்தினது நுட்பத்தைக் கண்டறிந்தானென்று ஊரெங்

கல்விச் சிறப்பு:—

வல்லாரே ஆயினும் வாய்ந்தகலை கல்லாரேல்
மல்லோருந் தூற்றிப் பழித்திடுவர்—நல்லாய்!—கேள்
கல்வியைப்போல் மேலாங் கருந்தனமொன் றில்லையென்றே
எல்லரும் சொன்னுர் இசைந்து.

கும் வதந்தி பிறந்து உலாவியது. பொன் சமைப்பவனாகிய அவ்வற்புத வாலிபனைக் கண் களிகூறக் காணும் ஆசையால் மருந்துக் கடையில் கும்பு திரளாய்க் கூடிற்று. அவனைக் கண்டு பேசும் விருப்பத்தை அரசரும் வெளியிட்டார். செம்பைப் பொன்னாக்கியதான துண்டு என்று ஒரு துண்டை அரசருக்குக் காணிக்கையாகக் கொண்டுபோய்க் கொடுத்த பொழுது, அவர், இனி நமக்கு என்ன குறைவு வரப்போகின்றது; மனம் தெவிட்டுமளவும் பொன்னை எளிதில் செய்வித்துக் கொள்ளலாம் என்று எண்ணி நெஞ்சம் பூரித்து, பாட்கரை வசப்படுத்தி அரணான ஸ்பாண்டெலி கோட்டைக்குள் அவனை வெகு பத்திரமாய் வைத்துப் பொன் செய்விக்க நிர்ணயித்தார். பாட்கரின் வீண்பெருமை, அந்தோ! அவனை ஒரு கைதி போன்றும் பாதுகாப்பில் இருக்கும்படி செய்து விடும்போலிருந்தது! பாட்கர் உலக கௌரவம் தேடப்போய் பேராபத்தில் சிக்கிக் கொண்டவன்!! அப்பொழுது ப்ருஷியா துரைத்தனத்தார் செலவிற்குத் திரவியம் கிடைக்காமல் மெத்தவும் முட்டுப்பட்டார்கள். அரசனின் அபிப்பிராயத்தை அவ்வாலிபன் அறிந்தவனாய்த் தன் சூது வெளிப்படப்போகிறதென்று அஞ்சிக் கண்ணுக்கு எட்டாத தூரத்தில் ஓடிப் பிழைக்கத் தீர்மானித்து, அந்நாட்டு எல்லையைத் தாண்டி ஸாக்ஸனிக்குப் போய்த் தப்பித்துக் கொண்டான்.

ஃ

பாட்கரைக் கண்டுபிடித்து ஒப்புவிப்பவர்க்கு ஆயிரம் தாலர் வெகுமதி கொடுப்பதாக விளம்பரம் பிறந்தது. அப்போதும் அவன் அகப்படவில்லை. அவன் உவிற்றென்பர்க்கில் போய்ச் சேர்ந்து, ஸாக்ஸனி இலெக்டர் எனும் மன்னனிடத்தில் அடைக்கலம் புகுந்தான். அம்மன்னன் 'வலியுடையோன்' என மறு நாமம் தரித்த போலண்ட் அரசனாகிய 1-வது ப்ரேட்ரிக் அகஸ்தஸ். அச்சமயத்தில் அந்த ப்ரெட்ரிக்கும் செலவிற்குப் பணம் அகப்படாமல் தட்டுக்கெட்டிருந்தான். ஆனதன்மையால், ரஸவாத சூக்ஷமம் கண்ட அவ்வாலிபனைத் துணைக்கொண்டு வேண்டுமளவிற்குப் பொன் செய்து கொள்ளச் சமயம் கிட்டியதை நினைத்து மகிழ்ந்து, தன் சேவகரை அனுப்பி, பாட்கரை அந்தரங்கமாய் ட்ரேஸ்டனுக்கு வரவழைத்தான். பாட்கர் உவிற்றென்பர்க்கை விட்டுப் புறப்படவும் புருஷியா தேசத்துக் காவலாட் சேவகர் வாசலில் நெருங்கி அந்த ரஸவாதியைத் தங்கள் வசம் ஒப்புவித்திடக் கேட்டார்கள். ஆனால், சமயம் முந்திப்போயிற்று. பாட்கர் அதற்குள்ளே ட்ரெஸ்டெனில்

சிலரிடம் பேச்சுகளில் எச்சரிக்கையாக இல்லாவிட்டால், பெண்களைப் பற்றிய பேச்சுகளை எடுத்துக்கொண்டு மிக்க அசங்கிதமான முறையில் ஆரம்பித்துவிடுகிறார்கள். தக்ஷணமே அவர்களை விட்டுத் தூரப் போய்விட நேர்கிறது.

போய்ச் சேர்ந்து அரசனதுமாளிகையில் இருக்க இடம் பெற்றான். அங்கு அவ்வாலிபனுக்குக் கனத்த உபசாரம் நடந்ததெனினும், அவனைத் தப்பவிடாமல் கட்டுக்காவல் செய்தார்கள். பெண்ணொருத்தி ஒருவனை நம்பிக் கற்பு கெட்டுப் பின் அவனால் கைவிடப்பட, அதை அவள் அவனது நண்பர்களிடம் முறையிட்டுக் கொள்ளச் சென்றபோது, அவர்களில் ஒவ்வொருவனும் அப்பெண்ணைச் சுகித்து அனுபவித்துவிட்டுத் தேறுதல் புகன்று கண்ணைத் துடைத்து அனுப்பிய கதையாய் பாட்கரின் சங்கதியும் முடிந்தது. ஒரு அரசனின் சிறைக்குத் தப்பி மற்றோர் மன்னனிடம் அடைக்கலம் புக, அங்கும் காவற் கைதியானான்! பொன்னும் பெண்ணும் உலகை யாட்டுவிக்குங் கூற்று சொல்லற்பாற்றோ?

ஃ

போலண்ட் அரசன் அப்பொழுது தன் நாட்டில் அராஜகம் எங்கும் பரவி யிருந்தமையின் உவார்ஸா இராஜதானிக்கு ரகசியமாகச் சென்று தங்குவதானான். அங்கிருந்துகொண்டு, பொன் செய்யும் நுட்பத்தைத் தனக்கு வெளியிடும்படி தான் விட்டு விட்டு வந்த அரண்மனையிலுள்ள பாட்கருக்குக் கடிதம் எழுதிக் கேட்டான். இப்படி நெருக்கிக் கேட்டதனால் அந்த ரஸவாதி சிறு குப்பியில் ஏதோ சிவப்பான திராவகம் விட்டு அடைத்து அனுப்பி, இரும்பு செப்பு முதலிய எந்த லோகத்தையும் உருக்கி அந்தத் திராவகத்தில் ஒரு துளி விட்டால், உடனே அது பொன்னாகுமென்று கடித மூலமாய்த் தெரிவித்தான். குப்பி கண்டவுடன் அரசன் பரீக்ஷை பார்க்கத் தீர்மானித்து, தானும் குமாரனும் அரண்மனையில் அந்தரங்கமான ஓர் அறைக்குள் பிரவேசித்துக் கதவைப் பூட்டுப் போட்டுத் தாமே சொர்ணபாகம் செய்வதற்கு இடுப்பில் தூசி தாங்கும் தோல் கட்டிக்கொண்டு செம்பை உருக்கி பாட்கர் அனுப்பிய திரவத்திற் சிறிது ஊற்றினார்கள்; பரீக்ஷை வாய்க்கவில்லை. பின்னும் நன்றாய் ஊற்றிக் கலந்து பார்த்தார்கள்; பிரயோஜனப் படவில்லை. என்ன பக்குவம் செய்தும் செம்பு செம்பாகவே இருந்தது. அரசன் ரஸவாதி எழுதியனுப்பிய முறையைக் கூர்மையாகப் பார்வையிட்டான். அதில் "நாடிய கருமம் கைகூடவேண்டில், அந்தத் திரவத்தை மெத்தவும் சித்த சுத்தியாய் விடவேண்டு" மென்று எழுதியிருந்தது. அன்று மாலைவேளையில் அரசன் தகாதவர்களுடன் சகவாசம் செய்ததை நினைந்து, அதுதான் பரீக்ஷை தவறியதற்கு நிமித்தமென்று எண்ணி, மறு பரீக்ஷை செய்து பார்த்தான். அதுவும் பலிக்கவில்லை. அரசனுக்கு அப்பொழுது மிகுந்த கோபம்

பரிசுத்தமான ஒரு உள்ளத்திற்குக் குற்றம் கற்பித்துத் தாழ்த்த நினைப்போரைப் பார்த்துக் கடவுள் புன்னகை கொள்கின்றார். அவர்களின் முயற்சி பலிப்பதில்லை.

உண்டாயிற்று. இரண்டாவது பரீக்ஷை தொடங்குமுன் குரு முன்னிலையில் கிறிஸ்துவ ஸம்பிரதாயப்படி பாவ அறிக்கை செய்து மன்னிப்புப் பெற்று பின்பு பரீக்ஷை செய்தான். அவ்வாறு செய்தும் கருமம் சிதறியதினாலே அரசனுக்குக் கோபாக்கினி பற்றி எரிந்தது. இது மலடி பிள்ளை பெறவில்லை யென்று சினங்கொண்டது போலாம்!

ஃ

பணமுட்டு வரவர அதிகரித்து அதைத் தீர்க்க வகை ஒன்றும் தோன்றாததனால் பொன் செய்யும் நுட்பத்தை பாட்கர் வாக்கினின்றும் பலாத்காரமாய் வெளியிடுவிக்க அரசன் தீர்மானித்தான். அந்த ரஸவாதியோ அரசனின் நிர்ப்பந்தத்திற்கு அஞ்சி அங்கிருந்து ஒளித்தோட நிர்ணயித்து, காவற்சேவகர் கண்காணாமல் நழுவி வெளிப்பட்டு, இராப்பகல் மூன்றுநாள் ஓய்வற நடந்து ஔஸ்திரியாவைச் சேர்ந்த என்ஸ் எனும் ஊர் போய்ச் சேர்ந்து அங்கு அச்சம் இல்லை யென்று இருந்தான். ராமேசுவரம் போயும் சனீசுவரன் அவனை விடவில்லை. அரசன் அவனைப் பிடித்துவர அனுப்பிய தூதர் பொன்மானை வால்பிடி தோள்பிடியாகத் தொடரும் வேட்டை நாய்களைப் போல ஓடித் தொடர்ந்து அடிபிடித்துப்போய் படுத்த படுக்கையில் அவனைக் கைது செய்தனர். அவனோ மீண்டும் தப்புவிக்க ஆமளவிற்குத் திமிறிப் பார்த்தான்; சமயத்தில் தன்னைத் தப்புவித்து உதவும்படி ஔஸ்திரியா துரைத்தனத்தாரையும் கெஞ்சிக் கேட்டான். அவன் சாமர்த்தியம் ஒன்றும் நிறைவேறவில்லை. அவர்கள் அவனைக் கைநிகழ விடாமல் பிடித்த பிடியாய்க் கட்டுக்காவல் செய்து கனிங்ஸ்தின் கோட்டையில் வைத்தார்கள். அவன் அங்கிருக்கையில், ராஜாவின் தனச்சாலையில் பணம் கட்டோடே இல்லையென்றும், நெடுநாள் சம்பளம் பாக்கியாயுள்ள போலாந்தியர் பட்டாளத்தாருக்குச் சம்பளம் கொடுக்க நீ பொன் செய்து தந்தாலன்றி வேறு வகை இல்லை யென்றும் அவனுக்கு அறிக்கை செய்யப்பட்டது. ஒரு நாள் அரசன் தானே சிறைச்சாலைக்குச் சென்று பாட்கரைக் கண்டு, "இந்த க்ஷணமே நீ பொன் செய்யத் தொடங்கவேண்டும்; இல்லாவிடில் தூக்கில் போடப்படுவாய் எனக் கொரேமாய்ப் புகன்றான். இவ்வளவும் பாட்கரின் வீண் பெருமையால் விளைந்த கேடு.

ஃ

மேலும் ஐந்து வருஷங்கள் சென்றன. பாட்கர் பொன் செய்யவுமில்லை, அரசன் கற்பனைப்படி தூக்கிடப்படவுமில்லை. பாட்கர் எத்தனைநாட் செல்லினும் தூக்குமரமே தன் பங்கென்று ஏக்கம் பிடி

"திருட்டு" என்ற பதத்தை "இரவல்" என்று சிலர் மாற்றிக்கொண்டு பகிரங்கக் கள்வராகின்றனர். இவர்களின் மோசம் வெகு பெரிது.

த்திருந்தான். அக்காலத்தில் போர்த்யுகல் தேசத்தார் சீனுவிலிருந்து விந்தையான வேலைப்பாடுள்ள பீங்கான் சாமான்களைச் சீமைக்குக் கொண்டுபோய் எடைக்கு எடையினும் அதிகமான பொன்னுக்கு விற்ருர்கள். இதைக் கவனித்திருந்த திர்ஷ்டியந்திரம் நிர்மிப்பவனும் ரஸவாதியுமாகிய உவால்த்தர் வன் ஷிர்நாஸ் என்பவன் பாட்கரைக் கண்டு, "பொன் செய்ய உன்னுல் ஆகாதானுல், மற்றேதாயினும் ஒன்றை வருந்தி வகை அறிந்து செய்யலாமே; பீங்கான் செய்" என்று அவனுக்குச் சமயோசிதமான உபாயம் சொல்லிக் கொடுத்தான்.

ஃ

ரஸவாதியென்று பெயரெடுத்து ஏமாறிப்போன பாட்கர் இந்தக் குறிப்பைச் சிந்தையிற்கொண்டு, அன்றுதொட்டு அல்லும் பகலும் அலுப்பற உழைத்துப் பரீட்சை செய்துவந்தான். பீங்கான் செய்யும் முறை அறியும் தொழிலில் நெடுநாள் இளைக்காமல் முயன்று கடைசியில் செங்களிமண்ணின் துணையால் செம்பீங்கான் வனையும் முறையைத் தற்செயலாய்க் கண்டறிந்தான். ஆயினும், வெளிக்குப் பீங்கானைப் போன்றிருந்தும், உள்ளுக்கு மண்ணுகவே யிருந்தது. நாணயமான பீங்கானுக்குரிய வர்ணம் செம்மையல்லவென்றும் வெண்மை யென்றும் தெரிந்து வெள்ளைப்பீங்கான் செய்யும் சூக்ஷ்மம் அறியப் பிரயாசைப்பட்டான். 1707-ம் வருஷத்தில் ஒருநாள் தன்னுடைய மயிர் கனத்தது கண்டு, பரிமளத்திற்காகத் தூவிய பொடியே அதற்குக் காரணமெனத் தனது வேலையாளால் தெரிந்துகொண்டான். அக்காலத்தில் மயிருக்கு இடும் பரிமள பஸ்பமாக வழங்கியது ஒருவித மண். நுட்பபுத்தியுள்ள பாட்கருக்குத் தான் கண்டறிய நாடுவது இவ்வெண் மணற்பொடியோவென்று ஐயம் உதித்து பரீக்ஷை செய்து பார்த்த அளவில், மேற்குறித்த பரிமளப் பொடியில் சேரும் வஸ்துக்களில் பிரதானமானது கோயலின் (Kaolin) என்ற பொருள் எனத் தெரியவந்தது. அது இல்லாத குறைதான் இத்தனைகாலம் தான் நாடிய கருமம் கைகூடுதற்குப் பெருந் தடையா யிருந்ததெனக் கண்டுணர்ந்தான்.

ஃ

இந்த மர்மம் கண்ட பாட்கர் என்ன சாமானியனு?—மகா விசேஷமான தேர்ச்சியுள்ளவன். அத்தகைமையுள்ள அவன் இதைக் கண்டதனுல் விளைந்த பெருஞ்சித்தி ஒன்றல்ல—பல. 1707-ம் வருஷம் அக்டோபர் மாதம் அவன் முதல் முதல் வனைந்த பீங்கானை அரசனுக்குக் காணிக்கையாக அளித்தான். அதைக் காண அரசனுக்கு அதிக ஆநந்தமாயிருந்தது. அரசன் உடனே ஒரு பெரிய

இன்னெருவன் தூஷிப்பதிலிருந்தும் அவனது குணத்தைச் செவ்வனே தெரிந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

தொழிற்சாலையை அமைத்துக்கொடுத்து எல்லா உதவிகளையும் செய்தான். பாட்கர் தனது ரஸவாத முயற்சியைக் கட்டோடே கைவிட்டு பீங்கான் தொழில் செய்யத் தொடங்கினான். தனது தொழிற்சாலையின் வாசலில் "எல்லாம் வல்ல ஈசன், யாவையும் படைத்த பகவன் ரஸவாதியைக் குலாலனாக்கினார்" எனச் சிலையில் அறிக்கை செதுக்குவித்து வைத்தான்.

ஃ

எனினும், பாட்கரின் பீடை தொலையவில்லை. அவன் அறிந்த அந்தரங்கத்தைப் பிறருக்குச் சொல்வானென்றும், தன் வசத்தினின்றும் ஓடிப்போவானென்றும் அரசன் கருதி முன்போல் அவனைக் கட்டுக் காவல் செய்வித்தான். அவனுக்கு நூதனமாகக் கட்டுவித்துக் கொடுத்த தொழிற்சாலைகளுக்கும் சூளைகளுக்கும்கூட ராணுவ சேவகரைக் காவல் வைத்தான். அன்றியும், பாட்கரைத் தப்பவிடாமல் காத்துக்கொள்ளும் பாரத்தை மேலான ராணுவ உத்தியோகஸ்தர்கள் ஆறு பேர் மீது சுமத்திவைத்தான். பாட்கர் வளைந்த பீங்கானை நாணயமானதென்று பலர் விலைஏறக் கொடுத்து வாங்கினாலும், பாட்கர் இரு உத்தியோகஸ்தர்களின் கீழ் கேவலம் மேஸ்திரிபோலவே இருக்க நேர்ந்ததுமட்டுமல்ல; பகலில் பாட்கரின் வேலைகள் எல்லாம் முடிந்தபின்பு இரவில் அவனை ஒரு அறைக்குள் விட்டுக் கதவைப் பூட்டுவிப்பதாயினர். இந்த நிர்ப்பந்தம் எல்லாம் பட்டுப்பட்டு வருந்தி அவன் மனம் குன்றிப் போயிற்று. அவன் தன்னை விடுவிக்கும்படி எவ்வளவோ வேண்டியும் அரசன் செவி கொடுக்கவில்லை. அவனுக்கு அரசன் பரன் எனும் பிரபு பட்டம் சூட்டினானென்றும், வேண்டிய திரவியம் தரவும் உபகாரம் செய்யவும் மாத்திரம் சித்தமா யிருந்தானென்றும், சிறை நீக்கமட்டும் மனம் ஒப்பவில்லையென்றும் சொல்லப்படுகிறது. பாட்கர் இந்த நிர்ப்பந்தங்களில் துன்புற்று நோய்கொண்டு அதிவாலிபத்தில் 35-வயதிலேயே மரணமடைந்தான். இவ்வாறு அவன் பல துன்பங்கள் அனுபவிக்கும்படி நேர்ந்ததானது, அவன் தான் ரஸவாதி யென்று வீண் பிரதிஷ்டை பேசிக்கொண்டதனாலேயே யன்றி வேறல்ல. ஆயினும், அவனது விடாமுயற்சியால் உலகத்துக்குப் பல நன்மைகள் உண்டாயின. பொதுவாகவே, லோகோபகாரிகளாய் விளங்கினோரிற் பலர், தமது ஜீவிய காலத்தில் சித்திரவதைக்கொப்பான எண்ணற்ற துன்பங்களி னுழன்றும், வறுமை—சோதனை—எதிர்ப்பு—பகை முதலியவற்றின் வாய்ப்பட்டும் கதறியவர்களாகவே உள்ளார்களென்பது உலகத்தின் ஒரு தனி அனுபவமாம்.

எந்த சங்கதியிலும் ஒரு பழிப்பாகப் பேச ஆரம்பிக்கிறவர்களின் கண்ணுக்கு அமிர்தமும் நஞ்சுபோலவே தோற்றும்.

குழந்தைகள் பக்கம்

எலிகள் பிடித்த பூனை.



உயர்திரு சேனாவீரரான பெரிய எலியார் ஒரு வாரமாக விஷ ஜ்வரத்தால் வருந்திக் காலஞ் சென்றார். அதற்காக மற்ற எலிகளெல்லாம் துக்கங் கொண்டாட வந்திருந்தன. இறந்த பெரிய எலியாரைச் சொக்காய் போட்டுத் தலைப்பாகை கட்டி நாற்காலியிலே உட்காரவைத்துக் கீழே மற்ற எலிகளெல்லாம் ஒன்றின் கழுத்திலொன்று கையிட்டபடி ஒப்பாரி பாடிக்கொண்டு அழுத வாறிருந்தன.

ஃ

அவற்றில் ஒரு எலி எழுந்து, இறந்த பெரிய எலியாரின் ஆத்மத் திருப்திக்கு ஏதாவது செய்தாகவேண்டுமென்றும், காலஞ் சென்ற எலிப் பெரியார் நம்மைக் கொல்லும் பூனையை நாம் எல்லோரும் சேர்ந்து பிடித்து விடவேண்டுமென்று ஒரு காலத்தில் எலிகள் மகா சபையில் தீர்மானம் கொண்டு வந்த வீரர் என்றும், அவரது விருப்பம் நிறைவேறவேயில்லை யென்றும் கூறிற்று.

ஃ

எலிகளெல்லாம் கூடி இதைப்பற்றி யோசித்தன. பூனையை எப்படிப் பிடிப்பதென்று மறுபடியும் பழய பிரேரணை ஆலோசனைக்கு வந்தது. ஒரு எலி எழுந்து பெருச்சாளி பிடிக்கிற பெரிய போன் ஒன்று அவ்வீட்டில் இருப்பதாயும், இறந்த எலிப் பெரியாரை போனுக்குள் இருக்கிற கம்பியில் மாட்டிவிட்டு போனைத் திறந்து வைத்து விட்டால், எலி பிடிப்பதற்காகப் பூனையார் உள்ளே நுழைந்து எலியைத் தின்னப் போகும் போது போனின் கதவு மூடிக்கொண்டு பூனையாரும் சிக்கிக் கொள்வார் என்று தனது ஆலோசனையைத்




தெரிவித்தது. எல்லா எலிகளும் வெகு சந்தோஷத்துடன் ஒப்புக்கொண்டு பெருச்சாளி போனைத் தூக்கி வந்து, போனுக்குள் இருக்கிற சூக்ஷ்மக் கம்பியில் இறந்த எலிப் பெரியாரை மாட்டிப் போனைத் திறந்தவாறு வைத்திருந்தன.

ஃ

உயர் திருவாளர் பூனைப் பெரியார் சிறிது நேரத்தில் அங்கு வந்தார். போனுக்குள் எலியைக் கண்டார். உடனே போனுக்குள் புகுந்து கம்பியில் மாட்டிக்கிடந்த எலிப் பெரியாரைத் தொட்டு இழுத்தார். தக்ஷணமே கம்பி விடுபட்டுக் கதவு மூடிக்கொண்டது. பூனையார் உள்ளே அகப்பட்டுக் கொண்டு மியா மியா என்றார். உடனே எலிகள் எல்லாம் ஓடி வந்து பூனையைப் பார்த்துக் கேலி செய்து கும்மி கோலாட்டம் போட்டுக் குதித்தன. பூனையார் உறுமுகிறார். உறுமி என் செய்ய?

ஃ



பிறகு மற்றொரு யோசனை எழுந்தது. இறந்த எலிப் பெரியாரின் ஆத்மா திருப்தியடைவதற்காக அவரோடு சேர்த்துப் பூனையையும் அனுப்ப வேண்டுமென்று முடிவு செய்தன. உடனே ஒரு வைக்கோல் வடத்தை இழுத்துக்கொண்டு வந்து போனைச் சுற்றிலும் வைத்து, தீக்குச்சியைக் கிழித்து நெருப்பு வைத்து விட்டன. போனைச் சுற்றிலும் நெருப்பின் ஜ்வாலை பரவிக் கொள்ளவே பூனை அதில் வெந்து எலிப்பெரியாருடன் சொர்க்கலோகத்திற்கு எழுந்தருளிற்று.

தனியா யிருக்கப் பிரியப்படுகை.

தனியே ஏகாந்தமா யிருக்கையில்தான் கடவுளின் சமீபத்துக்கு நெருங்க முடிகிறது; கடவுளது அருட்சக்தியின் தரிசனங்கள் அச்சமயம் உள்ளத்தினிடையே தோற்றமாகின்றன. புதிய புதிய எண்ணங்களை எட்டிப் பிடித்து எழுதவும், எழுதுந்தோறும் புதுச்சரக்குகள் கிடைத்துக் கொண்டிருக்கவும், நமது வேலையை அற்புதமாய்ச் சரிவரச் செய்யவும் முடிகிறது. ஒரு விஷயத்தை நன்றாக யோசிக்கவும், ஒரு நிச்சய தீர்மானத்துக்கு வரவும் சாத்தியமாகிறது. தனியே யிருக்கையில்தான் மனோ சக்தி அதிகப்படுகின்றது. தனிமை ஒரு தனி இன்பமாம்; சக்தி நிலையமாம்.

ஐம்பொறிகளின் அற்புதம்.

மானிடர்களுக்கு உண்டாகும் ஸகலமான ஞானங்களுக்கும் ஆதாரம் மெய்—வாய்—கண்—மூக்கு—செவி என்னும் ஐந்து இந்திரியங்களே. நம் மனதிற்கு ஏதாவது ஒரு கருத்தை எட்டும்படி செய்பவையும் இவ்விந்திரியங்களே. "கண்ணைக் கெடுத்த தெய்வம் மதியைக் கொடுத்ததாம்" என்று சொல்லும் உலக வழக்கப்படி, ஒருவனுக்கு இந்த ஐந்து இந்திரியங்களுள் ஏதாவது ஒன்று குறைவுபடுமானால், மற்ற இந்திரியங்களுக்குப் பின்னும் அதிக சுறுசுறுப்பு உண்டாகப் பல திருஷ்டாந்தங்கள் கண்டிருக்கிறோம். அதேனெனில், கெட்டுப் போனது போக பாக்கியுள்ள மற்ற இந்திரியங்களையே அதிகம்நம்பியிருப்பதுபற்றியும், நம்பிவிடுவதுபற்றியும், —அந்த நம்பிக்கையின் காரணமாக, —அப்படி யாகின்றது. ஆயினும் அப்படி ஏதாவது ஒரு இந்திரியம் இல்லாமற் போமானால், அதற்கேற்றபடி ஏறத்தாழ அறிவு குறைவுபடுகிறதென்பது பிரத்தியக்ஷமாய்த் தெரிய வருகின்றது. அந்தக் குறைவுபாட்டையே உலகினர் ஒரு தூஷணைப் பதமாகவும் கொண்டு பிரயோகிக்கத் தொடங்குகின்றனர்.

ஃ

பிறவிக் குருடனா யிருக்கும் ஒருவன் மற்ற மெய்—வாய்—மூக்கு—செவி இவைகளுள் எந்த இந்திரியத்தாலாயினும் ஒளி, நிறம் முதலியவற்றின் தன்மை இப்படிப்பட்டதென எவ்வளவும் கண்டுகொள்ள மாட்டான். இவ்வண்ணமே எப்போதும் செவிடாக இருப்பவன் சத்தம் இத்தன்மையதெனத் திருந்தத் தெரிந்துகொள்ளமாட்டான். ஒருவன் பிறவிச் செவிடனா யிருப்பானானால், அந்தத் துன்பம் அவ்வொன்றோடு ஒழிவதில்லை. அது பேசுந் திறத்தையும் அடக்கிவிடுகின்றது. ஆதலால், அவ்விதமான ஊமைச் செவிடன் எவ்வளவு வல்லவனாயினும், எப்போதும் பார்த்துப் பரிதபிக்கத்தக்கவனாகிறான்.

ஃ

இந்த ஐந்து இந்திரியங்களின் நன்மை பெருமைகள் அவற்றுள் ஒன்றினுடைய உதவியை இழந்துவிடும் பொழுதுதான் அருமையாகப் புலப்படும். பசியுள்ளவனுக்கே போஜனத்தின் அவசியமும் அருமையும் தெரியும். நேத்திரமில்லாதார்க்கு உலகக் காட்சிகளில்லை. எதனையுமே அவர் காணார். பார்வை குறைந்தோர் மூக்குக் கண்ணாடி யிட்டுக்கொண்டு படும்பாடும், ஒருவர் கண்ணாடி மற்றவர்க்குப் பொருந்தாத தவிப்பும் பெரிது பெரிதே. காதின் சப்தம் அற்றுவிடின் சங்கீதம் முதலிய விநோத நாதங்கள் பாஷைகள் முதலியவற்றைக் கேட்க முடிகிறதில்லை. ரசனேந்திரியம் இல்லாதிருக்குமானால், புசிக்கக்கூடாதென்று தடுக்கப் பட்டவைகளையும் புசித்துக் கெடுதி விளைவித்துக் கொள்வோம். அப்ப

பெண்—தன்னைக் கற்பழித்துவிட இயலாத ஸ்திரீவர்க்கத்தையே தனக்குத் துணையாக விரும்புவது ஒரு விநோதமே.

டியே கிராணேந்திரியமும் இல்லா திருக்குமானுல் விஷக்காற்று முதலியவைகளை மோந்து உயிரை அழித்துக்கொள்வோம். பரிசேந்திரியம்அற்ருல் அதனுல் விளையும் தீங்கையும் எடுத் துரைக்கவேண்டுமோ? நமது தேகத்தில் உயிர் இருக்கிறதென்பதையே நாம் கண்டுகொள்ள மாட்டோம். பரிசேந்திரியம் இல்லாவிடில் ஸ்திரீ புருஷக் கவர்ச்சியும் உணர்ச்சியும் இன்பமும் தோன்றமாட்டாது. இவ்விந்திரியங்கள் இல்லாதவர்கள் படுகிற சங்கடத்தைப் பார்த்து நாம் எவ்வளவு பரிதாபப்படுகிருேமோ, அவ்வளவுக்கு அவ்வளவு, இவ்விந்திரியங்களை நமக்கு இல்லை யென்ற குறைவு வைக்காமல் அளித்து நம்மை சம்ரக்ஷிக்கின்ற கடவுளுடைய காருணியத்தைக் கொண்டாடக்கடவோம். முக்கியமாக இதில் ஒன்று கவனிக்கத்தக்கது. இந்திரியக் குறையுள்ளவர்களைப் பார்த்துப் பழிப்போர் துரதிர்ஷ்டவசமாய் அந்தக் குறையைப் பிற்காலமொன்றில் தாங்களும் அடைந்து தவிக்கும்படியாவதே. பழித்ததிலிருந்துதான் வந்ததோ, முன் வினையால் ஏற்படுகிறதோ யாதோ!

ஃ

கண் கெட்டுப்போனவர்கள் செவியின் துணைகொண்டு கேட்டு அறிந்து மகிழ்வர். செவியில்லாதோர் தமது கண்களின் உதவியால் பார்த்துப் பார்த்து நிம்மதியடைவர். கண், காது இரண்டுமில்லாதோர் கதி அந்தோ மிகு பரிதாபம்தான். இவற்றேடு பேச வாயும் இல்லாவிடில் இவ்வுலக இன்பமே இழந்தமாதிரியே. இவ்விதமானவர்களுக்குப் பரிசேந்திரியமும், கிராணேந்திரியமும், ரசனேந்திரியமுமே விசேஷமாகப் பயன்படுகின்றன. கடவுள் கொடுத்த வரையில் லாபம் என்று பெற்றுக்கொள்வதைத் தவிர வேறு என் செய்ய? யாவும் ஊழ்வினையின் அமைப்பாம்.

மனத்தோற்றங்களை உடனே எழுதிவிடு.

ஒரு முக்கியமும் அவசரமுமான வேலையைச் செய்ய வேண்டிய நேரத்தில் உன் மனத்திடையே ஒரு புதிய தோற்றம் எதிர்படுகின்றது. அதை அப்பொழுதே எழுதி ஒரு முடிவுக்குக் கொண்டுவந்துவிடு. நீ ஆச்சரியப்படக் கூடிய ஒரு மனிதனின் விலகுதலையோ, ஒரு நட்பின் பிரிவையோ, ஒரு மனிதனின் விசித்திரச் செய்கையையோ, உன் உள்ளம் நோவதான ஒருஸம்பவத்தையோ நீ பார்க்கையில் அப்பொழுதே அதைப்பற்றி எழுதிவிடு. ஆனுல், அதை அச்சுக்கு அனுப்பாதே. சிலநாள் ஆறப்போட்டுவிடு. பிறகு அதைப்பற்றி முடிவு செய்யலாம். எழுத்துமூலமாகக் காகிதத்திற்கு அந்தச் சரக்கு வந்து உனக்குச் சொந்தமாய் விடுவதே இப்போது நீ கவனிக்கவேண்டிய முதல் வேலை. அதை முதலில்தானே செய்து திருப்தி பெறு.



1. ஒரு கையை மட்டும் ஆட்டினால் எப்படி சப்தம் ஏற்படாதோ அதுபோல ஒருவர் நம்மிடம் கோபமாகப் பேசும்பொழுது பதில் பேசாமலிருப்பதே உத்தமம். அவர் தன் கோபம் தணியும்வரை பிதற்றிக் கொண்டேயிருக்கட்டும். அவர் தனக்குத்தானே புத்தி கற்றுக் கொள்ள இது ஒரு சிறந்த மார்க்கம்.

2. உலகத்தில் பெண்மணிகள் இறந்துபோவதினும், ஆண்கள் இறப்பதே அதிக கவலைக்கிடமாகிறது. பெண்கள் தனித்து, பலவித கஷ்டங்களுடன் தம் வாழ்நாளைக் கழிக்க நேரிடுகிறது. அதிலும் கர்ப்பவதியாயிருப்பின் வேறு வினையே தேவையில்லை.

3. தலைக்கு வரும் கல்லினின்றும் தப்பத் தலையைத் தாழ்த்து. எதிர்த்து நிற்காதே. அதுபோல, உன்னிடம் எதிர்த்துப் பேசும் உன் எதிரியிடம் எதிர்த்துப் பேசாது மௌனம் சாதி. பிறகு அவன் அடங்கின காலத்தில் உன் திமிரை ஜாடையிற் காட்டியபடியே யிருந்தால் அதுதான் வெகு வேலை செய்யும்.

4. தன் கண்ணில் தன் கை பட்டமைக்குக் கோபிப்பதுபோல தன் இனத்தார் சொல்லும் புண்பட்ட வார்த்தைகளைத் தாளாது பிரிந்து தனிக் குடும்பம் நடத்த, இதைக்கண்ட அயலார்கள் இதுவே சமயமென வந்து வந்து குந்தி, நமக்கு நன்மையே செய்வோர்போல, நம் கக்ஷியை ஆதரித்துப்பேசி, பிறகு நம்மையே தூற்றவும் ஆரம்பித்து விடுகிறார்கள். இதைவிட நம் இனத்தார் வார்த்தைகளே மேல்.

5. மாதம் பிறந்து 5-தேதி யாகிவிட்டது. இன்னும் சம்பளம் வரவில்லை. அவனால், இவனால், என்று மேலதிகாரிகளைக் கடிந்துகொண்டு, பின்னர் சம்பளம் பெற்று, 5, 6, தினங்களுக்குள், பழைய கடன்களைத் தீர்த்து, திரும்பவும் காலக்ஷேபம் செய்யப் புதிய கடன்களை சிருஷ்டி செய்வதும், மறுபடியும் சம்பளம் வரவில்லையே என்ற பல்லவியைப் பாடுவதும் புத்தி யின்மை.

6. வெளியூர்சளிலிருந்து பிழைக்கவரும் சிலர் தங்சளுக்கு எதேஷ்டமான சொத்துக்களிருக்கின்றனவென்றும், சிலர் தங்களுக்கு மோட்டார்கள் ஓடுகின்றனவென்றும், சிலர் என் தமையன் கொக்காயிபுரம் தாலூகாவில் தாசில்தார் என்றும் பலவாறு பிரலாபித்துக் கொள்கின்றனர். ஆனால், இங்கு அமர்ந்திருக்கும் உத்தியோகமோ, கோயில்பூஜை, அண்டா உருட்டல் போன்றவைகளில் தான். இவர்கள் தங்களைக் கேட்பவர்களை முட்டாள்களாக நினைத்து விடுகிறார்கள் போலும்.

சிலரைப்பற்றித் தாழ்வாகப் பத்திரிகையில் ஒரு செய்தி வந்துவிட்ட அளவிலேயே அவர்களுடைய மதிப்புத் தாழ்ந்து விடுவதில்லை. மதிப்பவர்கள் எப்போதுமே மதிக்கிறார்கள். தாழ்த்தியவர்களின் குறுகிய புத்திக்கும் ஒரு சிரிப்பு சிரிக்கிறார்கள்.

7. சில நண்பர்கள் வரக்கூடாத அறைகளிலெல்லாம் தாராளமாக நுழைந்தும், நேசமாயிருந்து கொண்டே நம் குடும்ப அந்தரங்கங்களை அறிந்த பின்னர் நம்மைத் தூற்றவும், மரியாதையற்று நடந்து கொள்ளவும் தலைப்படுகின்றனர். இவர்களிடம் ஜாக்கிரதை வேண்டும்.

8. எல்லாம் தெரிந்தவர்கள் போல் ஒன்றைக் குறித்து, இப்படி அப்படி என்று பேசுபவர்கள் தாங்களே அவ்வக்காரியங்களில் பிரவேசித்துவிட்டால்தான் எதிரியின் கஷ்டம் தெரியும்.

எஸ். குருசாமி ஐயர்.

பகைத்தவருக்கும் நலமே கருதுதல்.

தன்னை யொருவர் பகைத்தாலும், பிரிந்தாலும், தான் அவரைப் பகைக்காமலும், மனத்தாற் பிரியாமலும் இருப்போர் சிலர் உளர். தன்னைப் பகைத்த அறியாமைக்கு இரங்குவதன்றி வேறு தீங்கு நினையார். எவ்வெப்போதுகளிலும் நன்றாக வாழ்ந்திடட்டுமென்றே கருதிடுவார். தன்னை விட்டுப் பிரிந்தாரையும் சினங்கொண்டு தூற்றார். தமது தூய்மையை யுணராது பிரிந்த பேதமைக்கே பரிதபிப்பர். இங்ஙனம் எங்கும் அன்பின் அமிர்தமே வார்ப்பாரொருவரிடத்தில் இன்னொருவர் சென்று, உன்னைவிட்டுப் பிரிந்தவர் பெரிய உயர்பதவி ஏற்றாரென்றும், அவர் சம்பளம் அதிகமாயிற்றென்றும் கூறின், அதற்கவர் சந்தோஷமே கொள்வோராகி எவ்வாறேனும் க்ஷேமமாயிருக்கட்டுமென்கிறார். பிரிந்தாரைப்பற்றித் தான் கூறுவதிலே, அந்தப் பிரிந்தார்மேல் வெறுப்பும் ஆத்திரமும் கொள்ளக்கூடுமென்றே மற்றவர் கருதிவந்து சொல்லப்போக, இவரோ அவரது உயர்வுக்கு சந்தோஷப்படுவதைக் கண்டு ஏமாறுகிறார். பரிசுத்த உள்ளம் பிறருக்கு என்றும் நலமே நாடிடும்.

தீங்கிழைப்பவனுக்கும் என்னாலாகிய நன்மையைச் செய்வேன். ஒரு சிறிதும் அவனை வெறுக்கமாட்டேன். வெறுப்பை வெறுப்பினால் ஜெயிக்கமுடியாது. அன்பினால் ஜெயிக்கலாம். தீமையை நன்மையால் வெல். பேராசை பிடித்தவர்களிடம் தாராள குணத்தைக் காட்டு. பொய்யனுக்கு உண்மையின் உயர்வை உபதேசம் செய். பதிலுக்குப் பதில் தீமை புரிபவர்களுடைய குணம் எப்போதும் சுத்தமாகாது. கொடியோன் புரியும் தீச்செயல்கள் எப்போதும் விருத்தியாவது போலவே, நாம் அவனுக்கு இயற்றும் நற்றொழில்கள், உபசாரங்கள் அதிகமாகவேண்டும்.—புத்தர்.

பிறரைக் கண்ணீர்விட வைத்தவர்கள் தாங்களும் அதற்குப் பதிலாகக் கண்ணீர் விடும்படி தெய்வாக்கினையால் தண்டிக்கப் படுதல் தப்புவதேயில்லை.



தமிழகம்.

வாழிய அன்னாய்! வாழிய அன்னாய்!
தொழுதுனை வழுத்தினம் தூயசீர் அன்னாய்!
மிடியிருள் நீங்கி விடியல்வந் துற்றது!
என்னினித் துயில்வது? எழுந்துமுன் பாராய்!
நின்புகழ்க் கதிரவன் நேரவந் துற்றனன்!
அன்புருஉக் கொண்ட அன்னாய் எழுக!
எம்மனங் குடிகொளும் இறைவியே எழுக!
எம்வாய் புகழ்தர இனியைநீ எழுக!
எங்கரங் குவிதர ஏற்பாய் எழுக!
நின்னுடைச் சீரெலாம் நேரிதில் யாங்கள்
பிள்ளை முறையினிற் பெறுதலும் இலமோ?
பண்டு நின் சிறப்பெலாம் பரிக்கும் அடியேம்
மறந்துனைத் துறப்பமோ? மயங்கல அன்னாய்!
வான்மீன் திரியினும், வானம் பொய்ப்பினும்;
நின்னருந் தொண்டினை நீங்கலம் அம்ம!
களைக! களைக! கடுந்துயிற் பிணியினை!
எழுக! எழுக! எறுக ஆதனம்!
கவிக! கவிக! காமர்வெண் குடைநிழல்!
ஓங்குக தமிழ் மணம்! உயர்கநின் குடிகளே!

II

அழகு எது?

கல்விக் கழகு கசடறவே மொழிதல்
சொல்லுக் கழகு சொல்லின் வாய்மை—இல்லுக்
கழகாகும் கற்புடையாள் அன்பர்க் கழகு
பழகாத தேவஞ்சம் பார்.



ஹாஸ்ய சஞ்சீவினி



மனைவி:—(தன் புருஷனோடுசண்பிட்டுக்கொண்டிருக்கையில்) என்னைக் கலியாணம் செய்து கொடுக்கமாட்டேனென்று கூறி அனுப்பிவிட்ட வாலிபர்கள் எல்லோரும் இப்போது அதிக பணக்காரர்களா யிருக்கிறார்கள். என் தலை விதி இந்தத் தரித்திர கட்டையை மணக்கும்படியாயிற்று

புருஷன்:—உன்னைக் கலியாணம் செய்து கொள்ளாததால் தான் அவர்கள். அப்படிப் பணக்காரர்களா யிருக்கிறார்கள். என் பாவம் உன்னை விவாகம் செய்துகொண்டு தரித்திரப்பட்டதுடன் நித்தமும் பிடுங்கலாயிருக்கிறது.

ஃ

பையன்:—இந்த நெருப்புப் பெட்டி இப்போதுதான் வாங்கியது; இது நன்றாய்க் கிழிக்க வரவில்லை என்று என் தாயார் தங்களிடம் கொடுத்துவிட்டுக் காசை வாங்கிவரச் சொல்லிற்று.

கடைக்காரன்:—(தன் சராயின் மீது கிழித்துக்காட்டி) இதோ பார் எவ்வளவு நன்றாய்க்கிழிக்க வருகின்றன; எடுத்துக்கொண்டுபோ.

பையன்:—(போய்த் திரும்பி வந்து) ஒவ்வொருதரமும் உன்னுடைய சராயில் வந்து கிழித்துக்கொண்டு போக எங்களால் முடியாதாகையால் இது வேண்டாம் என்று என் தாய் கூறிக் காசை வாங்கிவரச் சொல்

(259-ம் பக்கத் தொடர்ச்சி.)

பார்த்திபர்க்குச் செங்கோன்மை பார்க்கி னழகாகும்
சீர்த்திக் கழகு செழுகோடையே—சீர்த்திபெறும்
செல்வர்க் கழகு செழுங்கிளையைத் தாங்கிடுதல்
எல்லாவர்க்குங் கல்வி அழகே. (2)

ஏசாதிருத்தல் இனத்திற் கழகாகும்
ஆசானுக் கன்பே அழகாகும்—கூசாமை
வேசிக் கழகாகும் வேண்டாமை யேயழகாம்
போசிப்போர்க் கென்றே உணர். (3)

உணர்வோர்க் கழகாகும் உண்மை வழிச் சேரல்
குணத்தோர்க் கழகின்சொற் கூறல்—மனத்திற்
கழகு சுமங்கலியே ஆய்தற் கழகு
கிழவோரை அண்டியவர்க் *கேட்பு. (4)

கேட்புக் கழகு கெடுதி நினையாமை
பாட்டுக் கழகு பகரிசையே—தாட்டீகத்
தன்மைக் கழகு தவறாமை சாட்சிகளுக்
கண்மையுரை யாமை அழகு.

---

*கேட்பு—கேள்வி.)

விற்று என்முன். (கடைக்காரன் காசைத் தந்தனுப்பினன்.)

ஃ

அடுத்த வீட்டுக்காரர்:— (தன் புருஷனைத் துடைப்பத்தால் ஓயாது அடிக்கும் பெண்ணைப் பார்த்துத் தடுத்து) மூடக்கழுதையே இதுவா மரியாதை? இப்படிக் கொண்ட கணவனை அடிக்கிற பாவம் விடுமோ? சிச்சீ!

அடியுண்ட கணவன்:—ஓய் என் காணும் என் மனைவியை வைகிறீர்? உம்மை யார் இங்கு அழைத்தது? என் பெண்ஜாதி அடித்தால் எனக்குப் பிரியம்; அதற்காக அவளை ஏன் நீங்கள் திட்டுகிறீர்கள்? சீ! வெளியே போம்.

ஃ

அவன்:—பஞ்சபாண்டவர்கள் எத்தனை பேர்?

இவன்:—இது தெரியாதா? கட்டிலின் கால்களைப்போல மூன்று பேர்.

ஃ

அவர்:—(இரண்டு காலணு கொடுத்து) ஒரு காலணுவுக்குத் தேனும், ஒரு காலணுவுக்கு சுக்கும் வாங்கிவா.

சிறுவன்:-(போய்த் திரும்பி வந்து) மறந்து விட்டேன்; இதில் எந்தக் காலணுவுக்குத் தேனும், எந்தக் காலணுவுக்கு சுக்கும் வாங்கிவருகிற தென்பதைச் சொல்லுங்கள்.

ஃ

குறும்பர்கள் இருவர்:— (வழியில் ஒரு வீட்டுத்திண்ணையில் உட்கார்ந்திருந்தவனைப்பழித்துப்பேசஎண்ணி) இந்த வழியாக ஒரு வண்டி நிறையக் குரங்குகளை ஏற்றிக்கொண்டு போனார்களே, நீ பார்த்தாயா?

திண்ணையிலிருப்பவன்: (தன்னைப் பரிகசிப்பதையறிந்து) ஆகா! பார்த்தேன். நீங்கள் இருவரும் அந்த வண்டியிலிருந்து தவறி விழுந்து விட்டீர்களா?

ஃ

கல்விமான்களிடத்தி லிருந்தும் மூடர்கள் ஒன்றும் கற்கமாட்டார்கள். ஆனல், மூடர்களிடமிருந்து கல்விமான்கள் அநேக விஷயங்களைக் கற்றுப் புதிய அனுபவம் பெறுவார்கள்.

ஃ

சாப்பிட்டுவிட்டபின் அன்னமிட்டவர்களை நீங்கள் என்ன ஜாதி என்று ஒருவன் கேட்டானும்.

ஃ

உபாத்தியாயர்:—நீ பார்த்த மிருகங்களில் பத்து சொல்லுக.

பையன்:—ஐந்து யானை, ஐந்து புலி.

ஃ

ராமன்:—உன் எஜமானருக்கு உடம்பு எப்படியிருக்கிறது?

சோமன்:—நான் இதுவரையில் எத்தனையோ டாக்டர்களை யழைத்தேன். வருவதில் பலனில்லை போ என்றுஎல்லோரும்சொல்லுகிறார்கள்.

ராமன்:—ஐயோ பாவம்! அவ்வளவுக்கு அதிக நோயா?

சோமன்:—நோய் அதிகமல்ல, அவர் டாக்டர்களுக்கு சீக்கிரம் பணம்

தன் கணவனிடம் குறித்த காலத்தின்படியே தான் போயிருந்த இடத்திலிருந்து திரும்பித் தன் வீடு வந்துசேருதல் வாழ்க்கையிலே காட்டவேண்டிய முதல் ஒழுங்காகும்.

கொடுப்பதில்லையாதலால் யாரும் வரமாட்டேனென்கிறார்கள்.

ஃ

நாவல் எழுதுபவர்:— (கடைக் காரனைப்பார்த்து) என்னுடைய நாவலின் பெயரை உங்களுடைய ஜாபிதாவில் வைத்திய புஸ்தகங்களின் கீழ் என் போட்டிருக்கிறீர்கள்?

கடைக்காரன்:— ஜனங்களுக்கு அது ஆக்கத்தைக் கொடுக்கிற ஓர் சஞ்சீவிபோலிருக்கிறபடியால் அவ்வாறு செய்தேன்.

ஃ

அவள்:— (ரயில் வண்டியில்) அம்மா உனக்கு எத்தனை பிள்ளைகள்?

மற்றவள்:—ஒரு ஆண் குழந்தை மட்டும் உண்டு.

அவள்:—அவன் சுருட்டு, பீடி பிடிக்கிறானா? நாடகம் பார்க்கப் போகிறானா?

மற்றவள்:—இல்லையம்மா, குழந்தை பிறந்து இப்போதுதான் ஒரு வருஷமாகிறது. இனிமேல்தான் எல்லாம் தெரியும்.

ஃ

அதிக சிக்கன வியாபாரி:—(தன் குமாஸ்தாவைப் பார்த்து) நீ இனிமேல் எழுதும்போது த. ந. ழ. பு. முதலிய பல எழுத்துகளுக்குக் காலை அதிகமாக இழுக்காதே, அதனால் மை (Ink) அதிகம் செலவாய் விடுகிறது (என்றான்.)

ஃ

வண்டிக்காரன்:—ஐயா, நாலணா கொடும், வண்டியை விடுகிறேன்.

பிரயாணி:—என் மூட்டைக்கு என்ன கேட்பாய்?

வண்டிக்காரன்:—அதற்கு ஒன்றும் தரவேண்டாம். உங்களை ஏற்றிப் போகமட்டுமே நாலணா.

பிரயாணி:— அப்படியா; சந்தோஷம், என் மூட்டையை மட்டும் வண்டியிலேற்றிக் கொள், நான் நடந்து வருகிறேன், அப்போது நாலணாதரவேண்டியதில்லையல்லவா?

ஃ

ஜோஷ்யன்:—எனக்கு எட்டணா கொடு, உன் ஆயுள்வரையில் நீ சாகிறவரைக்கும் நடக்கப்போகிற காரியங்களைச் சொல்லுகிறேன்.

வாலிபன்:— (நகைத்து) இவ்வளவுதானா? நீ எனக்கு இரண்டணா கொடுத்தால் நீ இறந்துவிட்டபின்பும் உனக்கு என்னென்ன நடக்குமென்பதை நான் கூறுகிறேன்.

ஜோஷ்யன்:— (அதிசயித்து இரண்டணாதந்து) எங்கே உன் ஜோஷ்யத்தைக் கூறு பார்ப்போம்.

வாலிபன்:—கூறுகிறேன், கவனமாய்க் கேள், நீ இறந்துவிட்டபின்பு

புராதன பாரதத்தின் மகளிர் நிலை:—பூர்வ காலத்து ஸ்திரீகளின் உத்தமமான நடவடிக்கைகளை இப்பொழுதிருக்கும் ஸ்திரீகள் அனுஷ்டித்து வராததினால், நமது ஸ்திரீகளின் நிலைமை இவ்வளவு தாழ்ந்த ஸ்திதிக்கு வந்து விட்டதென்று இப்பொழுதுதான் நமது ஜனங்கள் அறிந்து கொண்டிருக்கிறார்கள். பூர்வகாலத்து ஸ்திரீகளின் காலத்தில் இந்தியா மகோன்னத ஸ்திதியை அடைந்திருந்தது. வேதம் உபநிஷத்துகள் ஏற்பட்ட பிரக்யாதி பெற்ற சிறந்த காலத்தில் இந்திய ஸ்திரீகளின் நிலைமை மகோன்னத ஸ்திதியிலிருந்தது. அவ்வளவு உன்னதபதவியை உலகத்திலுள்ள எந்த தேசத்து ஸ்திரீகளும் அடைந்ததில்லை.

உன்னை நீட்டிவைத்து நாமம் சாத்தி, உற்றார் பெற்றார் மேல்விழுந்தழுது, கழுவி குளிப்பாட்டி, உன்னைப் பாடை மீதேற்றி மசானத்திற்கு எடுத்துச்சென்று கட்டை விரட்டி மீதடுக்கி நெருப்பிட்டுக் கொளுத்தி சாம்பலாக்குவார்கள்.

ஜோஷ்யன்:—நன்றாய்ச் சொன்னா யப்பா! வெகு நல்ல சோதிடம்.

வாலிபன்:—இரு இரு, என் சோதிடம் இன்னும் முடியவில்லை. சாம்பலாக்கிய பின்பு மறுநாள் உனக்குப் பால் தெளித்து, மூன்றாம் நாள் துக்கம், ஏழாம் நாள் துக்கம் என்பதெல்லாம் செய்து, நடப்பும் கருமாதியும் முடித்து மறுநாள் உன்னைப் பெரியோர்களில் ஒருவராய்ச் சேர்த்து, ஒரு வருஷம் ஆனதும் உனக்குத்திதிகொடுப்பார்கள். (சோதிடன் அவமானத்துடன் சென்றான்.)

ஃ

உபாத்தியாயர்:— இப்போது உனக்கு நூறு ரூபாய் கொடுத்தால் என்ன செய்வாய்?

மாணவன்:-நான் அதைச் சரியாய் இருக்கிறதாவென்று முதலில் எண்ணிப் பார்ப்பேன்.

ஃ

சேஷி:— இந்த அரைப்பவுன் காசைவைத்துக்கொண்டு ஐந்துரூபா கொடு. வட்டி போட்டுத் தருகிறேன்.

காமு:—வட்டியும் வேண்டாம், அரைப்பவுனும் வேண்டாம், சும்மா வாங்கிப்போ.

சேஷி;—அப்படிச் சொல்லாதே, உன்னிடம் என் அரைப்பவுன் இருந்தால்தான், நான் கடன் வாங்கினேனென்று என் வீட்டுக்காரர் நம்புவார். அதைத் திருப்பப் பணமும் தருவார். இல்லாவிடில் நம்பமாட்டார்.

தூர்த்த வார்த்தைகளில் சம்பாஷணை.

தங்களின் துர்க்குணங்களையும் ஈனப் பிரவர்த்திகளையும் மறைத்துக்கொண்டு எவ்வளவு சமர்த்தாக வார்த்தையாடினும், இடையிடையே தூர்த்த வார்த்தைகளில் சம்பாஷணைகளைத் தொடங்கிவிடுகிறார்கள். தன் எதிரிலிருப்பவர் பெண்ணாசை பிடித்து அலைந்தவரென்றும், இப்போது எதற்குமே சக்தியற்றவரென்றும் இவ்விதம் தாழ்த்திப் பேசுகிற வழியில் தங்களின் பேச்சுப் போக்கைத் திருப்புகிறார்கள். உடனே ஜாக்கிரதைப்பட்டு மானம் காத்துக்கொள்வதற்காக அவ்விடத்தை விட்டு எழுந்திருக்கவோ, வெறுப்புடன் விலகி மௌனமாகவோ நேர்ந்துவிடுகிறது. எப்பொழுதும் ஸம்பாஷணை கௌரவமாயிருக்கவேண்டும். “நேற்று உமக்கு சாந்திநடந்ததே” என்று ஸம்பாஷணையை ஆரம்பிப்பதிலும் கேடுகெட்ட இழிதன்மை வேறில்லை.

விதைகளுக்குள் உயிர்.

ஏதாவது ஒரு செடியின் விதையைக் கையிலெடுத்துப் பார்க்கும்போது, அதனுள் உயிர் அமைந்திருக்கிறதென்பதை நாம் எந்த விதத்திலும் கண்டு கொள்வது கடினம். ஆயினும், அந்தச் சிறு விதைக்குள் ஓர் உயிர் அமைக்கப்பட்டிருக்கின்றது. அவ்வுயிர்க்கு அவ்வித்தினின்றும் வெளிப்பட வழிமாத்திர முண்டானால், அப்பொழுதுதான் அதன் பெருமையெல்லாம் புலப்படும். ஒரு சிறு மாங்கொட்டையைப் பூமிக்குள் புதைப்போமானால், அது சாகோபசாகமாய் ஆகாய மளாவி வளர்ந்து வசந்த காலத்தில் சிறந்த பூக்களும் காய்களும் பழங்களும் நிறைந்து மிகவும் மேன்மை பெறும்.

ஃ

விதைகளுக்குள் அமைந்திருக்கும் உயிர் அதற்குள்ளேயே அநேக வருஷம் வரையில் அழியாது நிலை பெற்றிருக்கும். எரிமலை வெள்ளத்தின் கீழ்ப் புதையுண்டுபோன ஒரு பட்டணத்தைப் பல நூற்றாண்டுகட்குப் பின்பு வெட்டிப் பார்த்த போது, வீடுகளெல்லாம் நெருப்பு வெள்ளம் வருவது கண்டு ஜனங்கள் ஓடும்போது எப்படி விட்டுப் போனார்களோ, அப்படியே காணப்பட்டன. அவ்வீடுகளில் காணப்பட்ட பல பொருள்களுள் தோட்ட விதைகள் நிறைந்த சில கோணிகளும் அகப்பட்டன. அவற்றை எடுத்து விதைத்தார்கள். அவை சுமார் 1700-வருஷ காலம் பூமிக்குள் புதைப்பட்டிருந்தனவாயினும், செம்மையாக முளைத்துத் தழைத்தோங்கி விசேஷமாய்ப் புஷ்பித்துப் பழங்களும் தந்தன.

ஃ

ஆயினும், மரம் செடி முதலியவற்றினின்று விழுகிற விதைகள் யாவும் பூமியில் வேர் பற்றி முளைத்தெழுவதில்லை. அப்படி எல்லா விதைகளும் முளைப்பதென்றால், இப்பூமியில் அவற்றிற்கு இடமே அகப்படாதல்லவா? சில விதைகள் பூமியிலேயே நசித்துப் போகின்றன விதைகளுள் விசேஷ பாகம் அநேகமாயிரம் உயிர்களுக்கு உணவாகின்றது.

ஃ

இவை போகப் பூமியில் முளைக்கின்ற விதைகளுள் மரத்தினின்றும் எவை எங்கெந்த இடத்தில் விழுகின்றனவோ அந்தந்த இடத்திலேயே அவை முளைப்பதில்லை. அப்படியானால், இப்பூமியில் ஓரிடத்தில் புளிய மரந்தானிருக்கும்; மற்றோரிடத்தில் மாமரந்தானிருக்கும்; வேறொரு இடத்தில் தேக்கு மரந்தான் காணப்படும். இப்படியாக ஒவ்வொரு இடத்திற்கு ஒவ்வொரு மரமே உரியதாகிவிடும். இது மனி

நிருபர்கள் அனுப்புகிற விஷயங்களில் சரியில்லாததைப் பத்திராசிரியர்கள் குப்பைத் தொட்டியில் எறிய, இந்தப் பத்திராசிரியர்கள் எழுதிய விஷயங்களிற் சிலவற்றையும் சிலர் தங்களுக்குப் பிடிக்காமல் அதைப் படியாமலே அடுத்த பக்கம் திருப்புகின்றனர்.

தர்களுக்கு மிகவும் அசௌக்கியத்திற்கு இடமல்லவா?

ஃ

அப்படியில்லாமல் எல்லாம் அறிந்தவரும் அருளாழியானுமான கடவுள் இப்பூமியில் ஒவ்வோரிடத்திலும் பிராணிகளுக்கு வேண்டிய பல விதமான மரஞ் செடிகளும் முளைக்கும்படி சங்கற்பித்து, அப்படியே விதைகளை எங்கும் பரவச் செய்திருக்கிறார்.

ஃ

அவற்றுள்ளும் பிராணிகளுக்கு மிகவும் உபயோகமானவை எவையோ அவற்றைப் பின்னும் விசேஷமாக விருத்தியாகும்படி செய்திருக்கிறார். புல் பூண்டு முதலியன சகலமான பிராணிகளுக்கும் இரையாவதனால், அவையே எல்லாவற்றுள்ளும் முக்கியமானவையாம். ஆனது பற்றியே, இப்பூமியில் எந்த இடத்திலும் அவை விசேஷமாக விருத்தியாகும்படி நியமித்திருக்கிறார். இப்பூமியில் எந்த இடத்திலாயினும் கடவுளால் படைக்கப்பட்ட பிராணிகள் உணவில்லாமல் அழிந்து போகின்றனவென்பது கிடையாதல்லவா? இப்படித் துணையுதவுங் கருணைக்கடலான கடவுளை நாம் என்றும் பணிந்து ஒரு குறையுமின்றி நம்மைக் காத்தருளும்படிப் பிரார்த்திக்கக்கடவோம்.

பிறரது தவிப்பை யுணர்தல்.

எப்பொழுதும் பிறரது கஷ்டத்தில் உன் மனத்தை வைத்துப் பார். பெற்ற தந்தையேயாயினும்கூட தனது குமார்த்தியின் தவிப்பைத் தீர்க்க முடியாமற் போவதுண்டு. ஆனால், தன் புத்திரியின் தவிப்பை அந்தத் தந்தை யுணருகிறார். அவரது வறுமையில் அதிகச் செலவுக்கு சாத்தியப்படாமற் போய் தவிப்பை யுணருகிற அவ்வளவோடு மட்டும் நின்றுகொள்ள வேண்டியவராகிறார். இவ்விதமே குடும்பத்தில் சில தேவைகளைக் கட்டாயமாய் வாங்கித்தந்து பூர்த்தி செய்யவேண்டியிருக்கிறது. அந்தத் தவிப்பைக் குடும்பத்துத் தலைவன் நன்றாகவே உணருகிறார். உணர்ந்தும் பணமில்லாத குறையில் மிக்க கசப்போடு பொறுக்கவேண்டியிருக்கிறது. வேறு சிலருக்குத் தமது தவிப்பும் அவசரமும் பெரிதாகத் தோற்றுகிறதே யன்றிப் பிறரது தவிப்பை யுணராமல் அதை மிகு அலக்ஷியமாகவே எண்ணிவிடுகிறார்கள். இது பசித்திருப்போரைத் திண்ணையில் கிடக்கவிட்டுத் தாங்கள் மட்டும் திருப்தியாக உண்பதுபோலாம்.

புண்பட்ட மனதிற்கு யதார்த்த அன்பினரது ஆறுதலான வார்த்தைகள் பொன் போன்ற மருந்தாக உதவும்.

மோகன சந்திரனின் அதிர்ஷ்டம்.



மோகனசந்திரன் தேசாடனம் செய்ய வெண்ணிப் பம்பாய் நகருக்கு வந்தான். அவன் புறப்படும்போது கல்கத்தாவிலிருந்து தன் ஸ்நேகிதன் மூலமாய் பம்பாய் நகரவாஸியான ஒரு பெரிய மனிதனுக்குக் கடிதம் எழுதிக்கொண்டு வந்திருந்ததால், அந்தத் தைரியத்தால் அவன் வீட்டுக்குப் போகலானான். வழியில் ஒரு தேவாலயத்தில் மங்களஹார்த்தி நடந்துகொண்டிருந்தது. மோகனன் குதூகலபரிதனாய் அத்தேவ மந்திரத்துக்குள் சென்றான். அவ்விடத்தில் அவன் பார்த்த காக்ஷி அத்யந்த பிரீதிவாத்ஸல்யத்தை விளைத்தது. தேவாலயத்தில் பரம ஸௌந்தர்ய ரூபவதிகளான ரமணீமணிகள் நின்றுகொண்டிருந்தனர். மங்களஹார்த்தி முடிந்ததும், அந்த ஸௌந்தர்ய ரமணிகளுக்கு ராணியோ என்பதுபோல் ஒரு ஸ்திரீரத்னம் வீணையைத் திக்கரிக்கும் ஸ்வர்க்கீயமான ஸங்கீதத்தால் ஸமஸ்த ஜனங்களையும் ஸ்தம்பிக்கச் செய்தாள். அதைக் கண்ட மோகனசந்திரன் தன்னையே மறந்து நின்றான்.




ஃ

பிறகு, தான் கடிதம் கொண்டுவந்தவரின் வீட்டுக்குச் சென்றான். அப்பெரிய மனிதனின் பெயர் கோபிநாத ராவ். அவன் அதிக ஐசுவர்யாதிபதியாய்ப் பிரஸித்தி பெற்றிருந்தான். அவனது யசஸ்ஸௌ கியாதி முதலியவைகள் பம்பாயில் மாத்திரமேயல்ல; பாரத வருஷத்தில் எங்கும் பரவியிருந்தது. இவன் மகாராஷ்டிர பிராமணன். கோபிநாதராவின் தயாளகுணம்

ஆப்பிரிக்காவாசிகள் ஒரு பெரிய மீனையோ நாயையோ எடுத்து அதன் வயிறு நிறைய சுண்ணாம்பை வைத்துத் தைத்து முதலைகள் உள்ள இடத்தில் ஜலத்தில் மிதக்க விட்டு வைப்பார்களாம். நீரோட்டம் அடித்துப் போகாதவாறு ஒரு கயிற்றால் கட்டித் தொங்க விடுவாராம். அதை முதலைகள் விழுங்கிவிட, அதிலுள்ள சுண்ணாம்பு முதலையின் வயிற்றை வெந்துவிடச் செய்ய அதனால் முதலை இறக்கும்படி செய்வாராம்.

எவர்க்கும் வராது. அவன் சர்வஜனப்பிரியனுயிருந்தான். மோகனசந்திரன் தான் வந்திருக்கும் சமாசாரத்தைச் சொல்லியனுப்பவே, ஒரு சேவகன் ஓடி வந்து இவனை அதிஸம்பிரமத்தோடு மாடிக்கு அழைத்துப் போனான். கோபிநாதராவ் மோகனசந்திரன் கொணர்ந்த கடிதத்தைப் படித்து அதிக ஸந்தோஷமடைந்து, "ஐயா! உம் வரவு எனக்குப் பரம லாபமாயிற்று. எனது நண்பரின் மித்திரனானதால் நீங்கள் எனக்கு அதிப்ரிய ஸ்நேகிதனாய்விட்டீர். என்னால் பெறவேண்டிய சகாயத்தைச் சொன்னால், நிறைவேற்றித் தர ஸித்தமாயிருக்கிறேன்" என்றான். மோகனசந்திரன் விசேஷ ஆநந்தபரிதனாய், "உங்கள் பெயரையும் பிரக்யாதியையும் வெகுநாளாய்க் கேள்விப்பட்டிருந்தேன். இன்று தங்கள் ஸந்தர்சன லாபத்தால் வெகு ஆநந்திதனானேன். தாங்கள் அத்யந்த தயாள குணத்தோடு எனக்குக் காட்டிய பக்ஷமானது என் ஹிருதயத்தில் அதிக ஸந்தோஷத்தை விளைவிக்கிறது" என்றான். கோபிநாதராவும் யுவா புருஷன்; மோகனசந்திரனும் அப்படியே.



ஃ

கோபிநாதராவ்:—நீங்கள் என் கிருகத்திலேயே வசிக்கலாம். இந்நகரத்தை முழுவதும் பார்வையிட்டீர்களா?

மோகனசந்திரன்:—ஐயா! நான் ஒரு ஆச்சரியம் கண்டேன். வழியில் ஒரு தேவாலயத்தில் அமிருதமயமான ஒரு ஸ்திரீரத்தினத்தையும் அவள் சங்கீதத்தையும் கண்டு ஆநந்தம் பொங்கினேன்.

கோபிநாதராவ்:—நீங்கள் எந்த தேவாலயத்தில் அந்த ஸ்திரீயைக் கண்டீர்கள்?

மோகனசந்திரன்:—லக்ஷ்மீ தேவாலயத்தில் தான். அதற்குள்ளிருக்கும் தேவமூர்த்தியையும் நான் பார்வையிடவில்லை. ஈசனுக்கு வணக்கம் செய்யக்கூட மறந்துபோனேன். அந்த ஸ்திரீயின் முன்பாக மற்றொரு ஸ்திரீ நிற்கவும் சகியேன். அவளது ஸௌந்தரமான வதனமண்டலம் அதிக சோபிதமாயிருந்தது.

கோபிநாதராவ்:—உங்களுடைய முகமும், கண்களும், ஹிருதயமும் அதி உல்லாஸத்துடன் இருக்கின்றன. நீங்கள் உங்கள் பிராணனைவிட அந்த யுவதியை அதிகமாய் மதிக்கிறீர்களல்லவா?

ஃ

மோகனன் லஜ்ஜையோடு தலையைக் குனிந்துகொண்டான். மறு நிமிஷத்தில் பிராணனையும், மனதையும் கவரும் மதுரமான ஸங்கீதம்

மோகனனின் காதில் விழுந்தது. ஸங்கீதம் முடியும்வரை மோகனன் மௌனியாய் தான் ஸ்வப்பனம் காண்பதாய் எண்ணிப் பிரமித்தான். கோபிநாதராவ் சிரித்துக்கொண்டே, "நீங்கள் தேவமந்திரத்தில் கேட்ட சங்கீதம் இதுதானேவென, மோகனனும் ஆம் என்றான். கோபிநாதராவ் புன்னகையோடு "எனக்குப் பிரீதிபாத்ரையான ரமணியையே நீங்களும் குறிப்பிட்டீர்கள்; உங்கள் ஆசை வியர்த்தம்; அவள் ஹிருதயத்திலுள்ள அநந்தமான பிரீதிக்கு நான் ஒருவன்தான் அதிகாரி. ஏனெனில் அவள் என் பத்தினி" என்றான். மோகனசந்திரனுக்கு ஹிருதயத்தில் சூலத்தைப் போட்டது போலாகி லஜ்ஜையால் தலை குனிந்தவனானான்.

ஃ

இதைக் கண்ணுற்ற கோபிநாதராவ், "மோகனசந்திரா! நீ உன் மனதில் கவலைபடையாதே. உன் வாக்கியத்தால் உன் மனதின் ஸரள ஸ்வபாவம் பிரகாஸமாயிற்று. நீ ஸங்கோசப் படவேண்டாம். நீ யாரைக் கண்டு மோஹிதனானாயோ அப்பேர்ப்பட்ட ரமணியோடு நீ ஸம்பாஷிப்பாயானால் உன் மனதுக்கு ஸாந்தம் கிடைக்கும். எழுந்திரு" என்று அவனை யழைத்துக்கொண்டு தன் மனைவியின் அறைக்குட் சென்றான். மோகனசந்திரன் அந்த ஸ்திரீரத்னத்தைக் கண்டதும், அவள் ஸாக்ஷாத் தேவிஸ்வரூபமென்றே மதித்தான். கோபிநாதராவ் தன் மனைவியாகிய ஸுவர்ணவதனியைப் பார்த்து, "ஸுவர்ணீ! இவர் என்னுடைய பரம ஸ்நேகிதர்; நமது நகரத்தைப் பார்க்க வந்திருக்கிறார்; இவருக்குச் சரியான உபசாரங்களை நீ செய்துவரவேண்டியது" என்றான். ஸுவர்ணவதனி சிரித்துக்கொண்டு, அப்ஸர கண்டத்தை நிந்திக்கும் கண்டத்தோடு, "தாங்கள் வங்க தேசத்தாரென்று தோன்றுகிறது; தங்கள் நாமதேயமென்ன?" என்றாள். மோகனன் பேசநாணினான். கோபிநாதராவ் அவளது பிரச்னத்துக்கு உத்தரமாய் "இவர் பெயர் மோகனசந்திரதாஸ்; வங்கதேச வாஸி; ஒரு பெரிய குடும்பத்திற் பிறந்த ஸத்குல பிராமணர்" என்றான்.

ஃ

அந்த சமயத்தில் பதினேழு வயதுள்ள ஒரு பெண் அவ்விடம் வந்தாள். அவளைக் கண்ட ஸுவர்ணவதனி, "ஸ்ரீமணி! இவர் உன் சுதேசத்தார்" என்றாள். ஸ்ரீமணி மோகனசந்திரனைத் திருஷ்டித்துப் பார்த்தவண்ணமாயிருந்தாள். கோபிநாதராவ், "மோகன்! இந்த ஸ்ரீமணி பி ஏ பரீக்ஷையில் தேறி இங்குள்ள ஸ்திரீ வித்யாலயத்தில் படிக்க வந்திருக்கிறாள்" என்றான். அதன்பின் மோகனசந்திரனும் அவ்விடமே தங்குவதானான். ஸ்ரீமணி ஸதா காலமும் மோகன சந்திரனைப் பார்த்துப் பெருமூச் செறிவாள். சஞ்சல திருஷ்டியோடு மோகனனை நோக்குவாள். இவ்விதமாய் ஒரு வாரம் சென்றது. கோபிநாதராவ் ஒரு விசேஷ காரியார்த்தமாய் வெளியூருக்குப் புறப்பட்டான். மோகனசந்திரன் "தாங்கள் இல்லாத ஸமயத்தில் நான் வீட்டி

ஒருவனுக்குக் கஷ்டம் வரும்பொழுது தனது எந்தத் தீவினையின் காரணமாக அது நேர்ந்ததென்று சற்று யோசித்துப் பார்ப்பானானால் நல்ல புத்தி பெற்றுத் தன் தவறு திருத்திக் கொள்ளக்கூடும் ஆனால், அப்படி நினைக்கிற புத்தியில்லையே.

விருப்பது நன்றுயிராது; எனக்கும் விடை கொடுங்கள்'' என்றான். கோபிநாதராவ் அதை மறுத்து, "உனக்கும் என் பத்நியிடத்தில் விசுவாசம், அவளும் உன் ரூப யௌவனத்துக்கு மதிக்கிறாள். அவளுக்குத் துணையாக இரு. நான் பத்து நாட்களில் வந்து விடுகிறேன்'' என்றான். மோகனசுந்திரன் ஆச்சரியத்தோடு ஸ்தம்பிதனாய் கோபிநாதராவின் முகத்தைப் பார்த்தான். யாதொரு வித்யாஸமும் காணப்படாததால் ஸம்மதித்துக்கொண்டான். வீட்டின் ஸேவகனான பாலாஜியிடத்தில் தான் இல்லாத காலத்தில் நடத்தவேண்டிய விவரங்களைத் தெரிவித்துவிட்டு கோபிநாதராவ் புறப்பட்டுச் சென்றான் ஸுவர்ணவதனி தன் பதியின் உத்திரவுப்படி மோகனசுந்திரனுக்கு வேண்டிய சுசுரூஷைகள் செய்து வந்தாள்.

ஃ

ஸ்ரீமணியின் மனமெல்லாம் மோகனசந்திரனின் மீது சென்றது. இதை ஒரு தடவையாவது மோஹனன் அறிந்தவனல்ல. மோகனன் ஸுவர்ணவதனியிடமே அதிகம் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு அஸூயை கொண்டாள். ஒருநாள் இரவு மோகனனின் சயன கிருகத்திற்குச் சென்று, "நான் உன்னிடம் அனுராகிணியா யிருக்கிறேன்; என் மனம், பிராணன், ரூபம், யௌவனம், ஸமஸ்தமும் உனக்கு அர்ப்பணம் செய்திருக்கிறேன்; மோகனசந்திரா! நீயே என் மனோ நாயகன்; இனி உன்னை யாரும் வசப்படுத்த முடியாது'' என்றாள். மோகனசந்திரன் நடுங்கினான். "என் பெயரைக் கெடுக்காதே, போய்விடு; நீ க்ஷணகாலமாவது இங்கு நில்லாதே. கோபிநாதர் இதை அறிந்தாரானால் என்னவென்றெண்ணுவார்?'' என்றான். ஸ்ரீமணி, "நான் பாபிஷ்டை, என்னைத் திரஸ்கரிப்பது தர்மமல்ல'' என்று கூறி வணங்கிச் சென்றாள்.



ஃ

ஒருதினம் ஸுவர்ணவதனியும் மோகனசந்திரனும் ஸமுத்திர தீரத்துக்குச் சென்றார்கள். ஸுவர்ணவதனி அதிக உத்ஸாகத்துடனும் பாடவாரம்பித்தாள். மோகனனின் ஹிருதயம் ஸ்ரீமணியின் மீதே தியானமாயிருந்ததால், வெறுப்புடன் ஸங்கீதத்தைக் கவனிக்கவில்லை. ஸுவர்ணவதனி ஸங்கீதத்தை நிறுத்திச் சிரித்தவண்ணமாய், "ஒரு காலத்தில் எந்த மனிதன் என் ஸங்கீதத்தைக் கேட்டு மோகபரவசனாய் விளங்கினானோ, அதே யுவா புரு


ஷன் இன்றையதினம் வெறுப்பு கொள்ளுகிறவன் போலிருக்கிற" தென்றாள். இதைக்கேட்ட மோகனன் "அமிர்தம் யாருக்குத்தான் ருசியாயிராது" என்று ஏதோ வார்த்தையைச் சொல்லவெண்ணியிருந்தவன் திடீரென்று மௌனியானான். அவனது மௌனத்தைக் கண்ட ஸுவர்ணவதனி கோபத்துடன் வேறு பக்கம் திரும்



பும் ஸமயத்தில் அப்பொழுது ஓடிவந்த பெரிய அலையிற் சிக்கி ஸமுத்திரத்தில் விழுந்து விட்டாள். அதற்குள் மோகனன் ஸமுத்திரத்தில் குதித்து ஸுவர்ணவதனியைக் கரைக்குங் கொண்டு வந்தான். ஸுவர்ணவதனி மிக்க நன்றியுடன் "ஐயா! உங்கள் பிராணனைத் திருணமாய்மதித்துஎன்னை ஸம்ரக்ஷித்த உங்களை நான் வீர புருஷரென்று கௌரவிக்கிறேன்" என்றாள். மோகனசந்திரன் அதி ஸந்தோஷத்தோடு இது ஒரு பெரிதல்ல என்றான். இவ்விதம் இருவரும் பேசிக்கொண்டே வீடுபோய்ச் சேர்ந்தனர். மோகனன் தன்னை அபாயத்திலிருந்தும் ரக்ஷித்ததை ஸுவர்ணவதனி எல்லோரிடமும் சொல்லிச்சொல்லி ஸந்தோஷமடைந்தாள். ஸ்ரீமணி மாத்திரம் பொறாமை கொண்டாள். அவள் மிக்க விசனகிரந்தையாய்த் தனது ஸம்சயத்தைப் பற்றிக் கோபிநாத ராவுக்கு ஒரு கடிதம் தபாலில் அனுப்பினாள்.

ஃ

மூன்று தினங்கள் சென்றன. மோகனசந்திரன் தன் அறையில் நித்திரை செய்துகொண்டிருக்கையில், ஒரு தாதி அவனை எழுப்பி ஒரு கடிதத்தைக் கொடுத்தாள். ஸுவர்ணவதனி அந்த நடுராத்திரியில் தன்னிடம் உடனே வருமாறு அக்கடிதத்தில் வேண்டிக்கொண்டிருந்தாள். மோகனன் ஸ்தம்பிதனாய் நின்று, போகலாமா வேண்டாமாவென்று பலதரம் யோசித்தான். கடைசியில் போய்தான் பார்த்துவருவோமென்று திடசித்தனாய் அந்த ஸ்திரீயோடு சென்றான். இதற்குள் ஒரு ஸ்திரீ மற்றொரு புருஷனுக்கு மோகனசந்திரன் போவதைக் காட்டிக்கொண்டிருந்தாள். "என் கடிதம் உண்மையாயிற்றா இப்போதாவது நம்புவீர்களா?" என்று அந்த ஸ்திரீ கூற, தீர்க்க நிச்வாசத்தோடு அந்த புருஷன் "இன்னும் ஸம்சயம் உண்டோ? இதோ கொன்றுவிடுகிறேன்" என்றான்.



மோகனனைக் கண்ட ஸௌந்தர்யவதியான ஸுவர்ணவதனி, "மோகனரே, என் லஜ்ஜையோடிருக்கிறீர்? இந்த வேளையில் ஸங்கோஷத்தைவிட்டு என்னுடன் உட்கார்ந்து ரமிக்க வாருங்கள்" என்றாள். மோகனன் ஒன்றும் பேசாமல் மௌனியா யிருந்தான்.

ஸுவர்ணவதனி:—ஏன் இந்த மௌனமோ? உங்கள்மேல் நான் அதிக பிரியம் வைத்திருக்கிறபடியால் நீங்கள் இந்த வேளையில் என் இஷ்டத்தை நிறைவேற்றவேண்டும். போகம் தருவதில் பாகம் தவறாதவாறு மகிழ்விப்பேன். உங்களை நான் அநேகம் தடவை பரீக்ஷித்திருக்கிறேன். தங்களின் நிர்மல ஹிருதயம் ஆச்சரியகரமானது. அன்று நான் ஸமுத்திரத்தில் விழுந்தது கூட உங்களின் அன்பைப் பரீக்ஷை செய்யவெண்ணியேதான் என்று மோகனனின் கரத்தைப்பற்றினாள். மோகனன் உடனே விலகித் தூர நின்றான்.



மோகன சந்திரன்:—(ஆச்சரியத்துடன்) வேண்டுமென்றா நீங்கள் ஸமுத்திரத்தில் விழுந்தீர்கள்? நான் உங்களை இதுவரையில் ஈசுவரி என்று நினைத்திருந்தேன். இன்று உங்களை ரூபலாவண்யத்தில் மட்டும் ஈசுவரி யென்று சொல்வேன். உங்களின் தகாத கிருத்யமானது என் ஹிருதயத்தைப் பிளக்கிறது. நான் விச்வாஸகாதகனாய் என் நண்பருக்குத் துரோகம் நினைப்பேனா? என்னை நம்பி அவர் வெளியூருக்குச் சென்றார். நீங்கள் ஒருவருக்கு விவாகிதையான பத்தினி. உங்கள் ஸ்வாமியானவர் ரூபகுணஸம்பன்னர். அவரை வஞ்சித்துத் தாங்கள் இந்த நீச காரியத்தில் பிரவேசித்தது ஆச்சரியம். நான் உங்களின் கடிதத்தைக் கண்டு காமபரவசனாய் வந்தவனல்ல. உங்களுக்கு நற்போதனை சொல்வதற்காகவே வந்தேன். அநேகம் தடவை உங்கள் ரூபத்தில் மயங்கி நான் என் மனதோடு யுத்தம் செய்து தூர்பலனானது ஸத்யம். ஆனால், இப்போது என் மனதைப் பூரண உறுதியோடும் வைத்து, நான் அதைத் தூஷிக்க ஸமர்த்தனாயிருக்கிறேன். இப்பொழுது நீங்கள் எனக்கு மாதா. நான் உங்கள் வயிற்றில் பிறந்த புத்திரனாவேன். என்னை க்ஷமியுங்கள் என்று வணங்கினான்.

ஃ

அதே ஸமயம், "மோகனசந்திரா! நீ உத்தமன், மோகனசந்திரா! நீயே ஸத்தியன்" என்று உச்ச ஸ்வரத்தோடு கூவிக்கொண்டு கோபிநாதராவ்

ஆணும் பெண்ணும் எதிர்படினோ, நெருங்கினோ எவ்வளவோ உணர்ச்சி யுண்டாகிறது. அந்த உணர்ச்சி ஆடவனுடன் ஆடவனாவது, பெண்ணுடன் பெண்ணாவது எதிர்படினோ நெருங்கினோ உண்டாவதில்லையே?—ஏன்?

ஸ்ரீமணியுடன் ஓடிவந்து மோகனனைத் தழுவிக்கொண்டாள். இந்த எதிர்பாராத வரவைக்கண்டுமோகனன் ஸ்தம்பிதனுய்விட்டான். ஆனுல், ஸுவர்ணவதனி பயம் முதலிய சின்னங்களைக் காட்டிக்கொள்ளவில்லை. கோபிநாதராவ் சிரித்துக்கொண்டு, 'ஸ்ரீமணி! உன் ஸம்சயம் நிவர்த்தியாயிற்ருே?" என்ருன். அவள் லஜ்ஜையோடு தலைகுனிந்தவளாஞள்.

ஃ

ஸ்ரீமணி:—என் கடிதத்தின் வாக்கியங்கள் பொய்க்காது. மோகனன் உத்தமரென்பது தெளிவாயிற்று. ஆனுல், உங்கள் மனைவி அவரைக் காதலிக்கும் விஷயம் ஸம்பூர்ணமான நிஜமாய் ருசுவாயிற்றன்ருே?

கோபிநாதராவ்:—அவள் விஷயத்திலும் உன் வார்த்தை ஸம்பூர்ணமான அபத்தம். உன் ஸம்சய கடிதத்தைக் கண்டபின்பு இந்த மோகனசந்திரனைப் பரீக்ஷை செய்வதற்காகவே, நான் ரகசியமாய்க் கடிதம் எழுதிச் சொல்லிக்கொடுத்த விதமாக என் ஸுவர்ணவதனி அக்ஷரமும் தப்பாமல் நடத்தியிருக்கிருள். இதனுல் வெளிப்பார்வைக்குப் பிறர் எதாவது நினைக்கக்கூடும். என் ஸுவர்ணி ஒருக்காலும் அவிசுவாசியல்ல. அவள் உத்தமியே.

இதைக் கேட்ட மோகனனுக்கு ஆச்சர்யம் அதிகரித்தது. ஸ்ரீமணி மௌனமாய் அவ்வறையைவிட்டு அகன்ருள். எல்லோருடைய மனதும் சாந்த நர்த்தனம் செய்ய ஆரம்பித்தது.

ஃ

மோகனசந்திரன்:—ஸ்திரீகளுக்கு இவ்வளவு ஸ்வதந்திரம் கூடாது. ஸுவர்ணவதனி மகா பரிசுத்தையாயினுங்கூட, அவள் இந்த நரோத்திரியில் என் மோகத்தைத் தூண்டிவிட்ட நிலையில், நானும் காமியாய் விசுவாஸ காதகனுய் மீறிச் சென்றிருந்தால் எவ்வளவு அநர்த்தம் ஸம்பவித்திருக்கும்? சொல்லுங்கள்.

கோபிநாதராவ்:—(ஸுவர்ணியைப் பார்த்து,) ஒரு வேளை மோகனன் சொல்வதுபோல் அவன் காம பரவசனுகி உன்னைப் பலாத்கரிக்க நெருங்கியிருந்தால் என்னவாயிருக்கும் சொல்.

அந்த க்ஷணத்தில் ஸுவர்ணவதனி தன் தலையிலிருந்து ஒரு கூரிய கத்தியை எடுத்து, "அப்படி நடந்திருக்குமாயின், இந்தக் கத்தியால் விசுவாஸ காதகனுடைய ஹிருதய ரத்தத்தை வரவழைத்திருப்பே" னென்ருள்.

மோகனன்:—(வியப்புடன்) நான் எதை ரத்னஹம்ஸ ஆபரணமென்று இது வரையில் நினைத்திருந்தேனே! அவ்வாபரணமானது கேவலம் அலங்காரத்துக்கு மாத்திரமல்ல, அதனுல் சத்துருநாசமும், செய்யலாம் போலிருக்கிறது. ஆகிலும், நான் சிலாகிக்கமாட்டேன். நான் ஸுவர்ணவதனியின்

எவரிடமும் அதிக வார்த்தை வைத்துக்கொள்ளாமல் எப்பொழுதும் ஒதுங்கியிருப்பதானது தனது மரியாதையைக் காத்துக்கொள்ளும் நிமித்தமாகத்தான். சற்று நெருங்கிப் பழகின் மற்றவர்கள் சாமான்யமாக நினைத்து அலக்ஷியத்துக்கு ஆரம்பித்து விடுகின்றனர்.

கைகளைப் பிடித்துக் கொண்டிருப்பேனாகில் ஆயுதத்தால் என்ன பிரயோசன மாகுமோ?

கோபிநாதராவ்:—(சிரித்து) மோகனா! அப்படி நேரும்போது பாலாஜி ஓடிவர மாட்டானா? நான் இங்கு வந்தது எதற்காக? ஸுவர்ணி என் உத்திர வில்லாமல் எதையாவது செய்வாளா? ஆதிமுதற்கொண்டு அவள் உன்னை நெருங்கி ஸம்பாஷிக்கத் தொடங்கிய அத்தனையும் அவ்வப்போது நான் சொல்லிக் கொடுத்த மாதிரியே அவள் செய்து வந்தாளென்று தெரிந்து கொள்.

மோகனன்:—(அதி ஆச்சரிய மடைந்து) ஐயா! இக்காரியத்தில் தங்களுக்கு என்ன ஆநந்தம்? அதைச் சொல்லுங்கள்.

கோபிநாதராவ்:—நீ ஆரம்பத்தில் ஸுவர்ணவதனியின் லாவண்யராசிகளிலே அத்யந்த மோகிதனா யிருந்ததைக் கவனித்தேன். எனினும், நீ மனோவுறுதி யுள்ளவனென்றும், பரநாரீ ஸகோதரனென்றும் உன் நிஷ்களங்கமான வதனத்திலிருந்தும் கிரகித்தேன். உன்னிடம் ஸகோதரப் பிரேமையுடன் விசுவாஸமாய் நடந்து கொள்ளும்படி ஸுவர்ணிக்குப் போதித்தேன். உங்கள் இருவரின் பிரேமை அதிகரிப்பதற்கே தனியாக உங்களை விட்டு வெளியூர் சென்றேன். கூடிய மட்டில் எச்சரிக்கையா யிருக்குமாறு ஸுவர்ணிக்கும் பாலாஜிக்கும் கற்பித்துவிட்டே புறப்பட்டேன். நேற்று ஸ்ரீமணியிடத்திலிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. நீங்களிருவரும் மிக்க மோஹிதர்களாய் நடந்து கொள்வதாக எழுதியிருந்தாள். அதை நான் நம்பவில்லை. ஆயினும், ஸ்ரீமணிக்கு உனது பரிசுத்தத்தை நேருக்கு நேராக விளக்கவேண்டுமென்று உடனே புறப்பட்டு வந்தேன். கடிதமூலம் ஸுவர்ணிக்குத் தெரிவித்து உன்னைப் பலாத்கரிக்கும்படி ஏற்பாடு செய்தேன். உனது நிர்மல ஹிருதயத்தை இப்பொழுது ஸ்ரீமணி கண்டு கொண்டாள்.

மோகனன்:—ஸ்ரீமணி எதற்காக இவ்விதம் உங்களுக்குக் கடிதம் எழுதித் தூண்டினாள்?

கோபிநாதராவ்:—இதைக்கூட உனக்குக் கிரகிக்க சக்தி யில்லையா? ஸ்ரீமணி உன்னிடத்தில் பரிசுத்தமான காதல் கொண்டுவிட்டாள். தான் விரும்பிய மனோகரன் மற்றொரு ஸ்திரீயை நேசிப்பதாகக் கண்டால் ஸ்திரீகளின் மனதில் பொறாமை யுண்டாவது ஸகஜம். அதனாலேயே ஸ்ரீமணி ஆத்திரப்பட்டு எனக்கு ஸம்சயக் கடிதம் வரைவதானாள்.

ஃ

மோகனசுந்திரன் மௌனமாய் ஆநந்திதனாய் ஸ்ரீமணியைத் தியானித்தபடி நின்றான். கோபிநாதராவ் ஸ்ரீமணியை அழைத்து மோகனனின் கையோடு அவள் கையையும் சேர்த்து வைத்து ஆசீர்வதித்தான் ஸுவர்ணவதனி மோகனின் மற்றொரு கரத்தைப் பற்றிக்கொண்டு, "மோகனா! நீ வீணாக வருத்தப்படாதே. ஈசுவர கிருபையால் உன்னை இப்பொழுது என்

அப்பா! அப்படி முதுகில் குத்தித் தட்டிப் பேசவராதே. அதற்குத் தகுந்தவர்களைத் தேடிக்கொண்டு அவர்களிடம் உன் கைவரிசைகளைக் காட்டு. என்னிடம் வேண்டாம்; எனக்கு அப்படி வழக்கமுமில்லை என்றார் ஒருவர்.

ஸகோதரனை யடைந்தேன். என் தாய்க்கு நான் ஒரே பெண். எனக்கு வெகு நாளாய் ஸகோதரனில்லாத குறை அதிகமாயிருந்தது. இன்று என் கோரிக்கை நிறைவேறியது. தங்கையின் அபராதத்தை க்ஷமிக்க வேண்டுகிறேன்'' என்று நமஸ்கரித்தாள். இவளது நமஸ்காரத்தை மோகனசந்திரன் ஏற்றுக்கொண்டு, தங்காய்! என் அன்புள்ள தங்காய்! என்று அதி ஆசையோடு கூவினான். என் தங்காய்! நான் ஒரு உடன்பிறப்பான தமக்கையைப் பெற்று எவ்வளவோ ஆநந்தத்துடனிருந்து, திடீரென்று அந்தப் பாக்கியத்தை இழந்தவன். இப்பொழுது தமக்கை கிடையாவிடினும், அன்புள்ள தங்கை கிடைத்திருப்பது எனது பூர்வ புண்ணிய விசேஷமே என்றான். கோபிநாதராவ் இந்தப் புதிய பிரேம ரூபிகளான அண்ணனையும் தங்கையையும் மனஸ்பூர்வமாக ஆசீர்வதித்தார். ஸ்ரீமணி தனது அவிவேகத்தனமான செய்கையை க்ஷமிக்கும்படி ஸுவர்ணவதனியை நமஸ்கரிக்க, அவள் ஆநந்தத்துடன் ஸ்ரீமணியை ஆலிங்கனம் செய்து கொண்டாள்.

ஃ

மோகனசந்திரனின் பம்பாய் யாத்திரை அதிர்ஷ்ட ரூபமாய் முடிந்தது. ஸ்ரீமணிக்கும் மோகனசந்திரனுக்கும் பம்பாயிலேயே விவாகமாயிற்று. விவாகச் செலவுகள் யாவற்றையும் கோபிநாதராவ் தாமே செய்தார். ஸுவர்ணவதனி விவாகத்தின் தலைமையை வகித்தாள். ஸ்ரீமணி, மோகனசந்திரன் இவர்களின் பிரீதி வாத்ஸல்யம் தினே தினே அதிகரித்து வந்தது. அத்தகைய ஸதிபதிகளின் பிரீதியைப்போல், நமது நாட்டு ஸ்திரீ புருஷர்களுக்கும் உண்டாகுமாறு ஈசுவரனைப் பிரார்த்தனை செய்கிறோம்.

வீட்டின் பிரிவும், அது பற்றியிழுக்கும் கவர்ச்சியும்.

சரீரம் வெளியூரில் கிடக்கிறது. உயிரோ தன் ஊரிலுள்ள தன் வீட்டினரைத் தாவி வாடுகிறது. குழந்தைகளின் ஞாபகமோ நமது ஆத்மாவைப் பற்றி இழுக்கின்றது. கபடற்ற நிஷ்களங்கமான குழந்தைகளின் வதனம் நம் ஆவியைக் கொள்ளை கொள்கின்றது. எல்லோரும் க்ஷேமமாயிருக்க நாம் ஓயாது பிரார்த்தனை செய்தவாறுள்ளோம். வீட்டின் கடிதங்களை எவ்வளவோ ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். நாம் படுகிற பிரிவுத் துயர் நாம் போயிருக்கிற ஊராருக்குத்தெரிகிறதா? வாய்விட்டுக் கூறினோ சுத்த "பைத்தியக்காரன்" என்ற பட்டமே வரும். அவரவர் ஏக்கம் அவரவர் நெஞ்சிலேயேயாகி, வெளிக்குமட்டும் கவலையற்ற முகமாய்த்தோற்றுவித்துக்கொள்ளப் பிரயாசைப்படுகிறோம்.

தியாக வாழ்வின் முதிர்ச்சிதான் சந்யாச ஆசிரமம். 'சுதந்திரச்சங்கு'

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்ரதாபன்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

துள்ளி விழுகிற புராணம்!



யாரப்பா துள்ளி விழுந்தது?

எவன் துள்ளி விழுந்ததாகச் சொன்னது? எதற்காகத் துள்ளி விழுகிறார்கள்? ஏன் துள்ளுகிறார்கள்? எங்கெங்கே துள்ளுகிறார்கள்? எப்போது துள்ளுகிறார்கள்? துள்ளி விழுவதாக எவரெவரைச் சொல்லலாம்? யார் யார் துள்ளி விழவில்லை? துள்ளி விழாததற்கு என்ன காரணம்? விகடன் இந்தத் துள்ளுகிற புராணக் குப்பையைக் கொஞ்சம் கிளறிப் பார்க்கப் புறப்பட்டுக் கொண்டேன்! நீங்களும் கூட இருந்து குந்திக் கவனியுங்கள்.

ஃ

அய்யனே! கேட்கிறீர்களா! துள்ளி விழுவதிலே எத்தனையோ தினுசுகள் விதங்கள் இருக்கின்றன! குழந்தை பிறந்ததென்று கேட்டதும் சந்தோஷத்தால் துள்ளி விழுதல் ஒரு தினுசு! தங்களுக்கு உத்தியோகம் கிடைத்ததற்காகவும், மேல் பதவியில் உயர்த்தப்பட்டதற்காகவும், தாங்கள் கோரி வந்த காரியம் சித்தித்ததற்காகவும், தனக்கு விவாகம் கைகூடிற்றென்பதற்காகவும், தனது குமாரன் குமாரத்திக்கு விவாகம் நிச்சயமானதற்காகவும், ஒரு புதுக்கடை வைத்து உட்கார்ந்து கொண்டதற்காகவும், புது நகை, வஸ்திரம் தரித்துக் கொண்டதற்காகவும், ஆநந்தத்தால் துள்ளுகிறார்கள்! காதலர்கள் ஒருவரையொருவர் காணும்போதும், உள்ளன்பு வாய்ந்தவர்கள் பரஸ்பரம் சந்தித்துக் கொள்ளும்போதும், நினையாமல் முன்வந்து நிற்பவர்களைப் பார்க்கும்போதும், ஆத்ம பரவசத்தால் ஒரு துள்ளு துள்ளிக் குதிக்கிறார்கள்! பிழைக்க வெளியூர்சென்று வெகுகாலத்துக்குப்பின் தன் ஊரின் மண்ணை மிதித்துத் தன் வீட்டுக்கு வரும்போது, "இது என் சொந்த ஊர், இது என் பிறப்பிடம்" என்று சொல்லிக்கொண்டு துள்ளுகிறார்கள்! ஒருவருக்காகச் சென்று காத்திருந்து பிறகு அந்த மனுஷ்யன் வருவதைக் கண்டபோதும், தான் பணத்துக்கு எதிர்பார்த்திருந்து கைநிறைய அதைப் பெறுகிறபோதும், ரயில் வண்டியில் ஒருவரை எதிர்ப்பார்த்து, ஸ்டேஷனுக்கு ரயில் வந்ததும் அதில் அந்த மனுஷ்யர்கள் இருக்கிறதைக் கண்டபோதும் களிப்பு மிகுந்து

துள்ளுகிறார்கள்! கோயில்களில் இறைவனைத் துதிக்கும்பொழுது தங்களையே மெய்மறந்துபோய்த் துள்ளிக் குதிக்கிறார்கள்! அந்தபகவத் தரிசனத்திலேயே நிலைத்துவிடுகிறார்கள்! ஆநந்தக் கண்ணீர் விடுகிறார்கள்! விருந்தினர்கள் தன் வீட்டிலே கூடியிருக்கும்போதும், தான் விருந்தினனாய் மற்றவர் வீட்டிலிருக்கும் போதும், ஒரு புது நூலை வாசித்து மகிழும்போதும் துள்ளி விழுதல் ஒரு தினுசு! இவ்விதமான துள்ளுதலிலெல்லாம் கள்ளம் கபடு வித்தியாஸம் எதுவுமே யில்லை. உற்சாகமே அதிகரித்துப் பொங்குகிறது!

ஃ

இனிக் குழந்தைகள் துள்ளி விளையாடுகிறார்களே! ஹா! அது எத்தனை கவலையற்ற விளையாட்டு! விசாரமில்லாத பொழுதுபோக்கு! அந்தப் பால்யகாலத்துச் சுகம் பிறகு மனிதனுடைய வாழ்நாளில் எப்போதேனும் உண்டா? "துள்ளித் திரிகின்ற காலத்திலே என் துடுக்கடக்கிப் பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே!" என்று ஒருவன் தான் இளமையிலே கல்வி கற்காமற் போனதைக்குறித்து ஏங்கி நொந்தானும்! துள்ளி விழுவதிலே முக்கியமான காரியத்தை மறந்து போவதும் அதிலே தொட்டுக்கொண்டுள்ள ஒரு குறையாகும்! சிலர் அற்பத்துக்கெல்லாம் துள்ளிப்போகிறார்கள்! ஒருவனுடைய வாழ்வைக் கெடுத்துச் சிலர் துள்ளுகிறார்கள்!! தனக்குக் கத்தியாக வந்து நிற்பவனையே சிலர் நம்பிக்கொண்டு துள்ளுகிறார்கள்! சிலர் வஞ்சகப் பாவிகளை சத்தியவந்தர்களென்று நம்பிக் கொண்டு அவர்களால் தங்களின் காரியங்களெல்லாம் ஆகிவிடுமென்று துள்ளுகிறார்கள்! அந்த வஞ்சகர்களோ நடு வேலையில் பிரிந்து கைவிட்டு ஒதுங்கிப்போய், அவனுக்கு அப்படித்தான் நஷ்டம் வரவேண்டுமென்று துள்ளுகிறார்கள்!

ஃ

ஒரு வேலையைத் தொட்டுக் கொண்டவுடனே மகிழ்ந்துபோய்த் துள்ளுகிறார்கள்! வக்கீல் வீட்டுக்குப் போய் பிராதைக் கொடுத்தவுடனே வியாஜ்யம் ஜெயித்து விட்டதாகத் துள்ளுகிறார்கள்! புது மனைவியுடன் வீட்டுக்குள் புகுந்தளவிலேயே எல்லாம் ஆண்டு அனுபவித்து விட்ட மாதிரியிலே சுமை தெரியாமல் துள்ளிப்போகிறார்கள்! பையன் மேல் வகுப்பு மாறிப் புதுப் புத்தகங்களைத் தங்களின் தந்தையர் வாங்கி வந்ததும் அதைக் கண்டு துள்ளிப்போகிறார்கள்! அந்தப் புஸ்தகங்கள் இவர்களை எவ்வளவு வேலைகள் அடிகள் வருஷ முழுதுக்கும் வாங்கி உபத்திரவிக்கப்போகிறதென்பதை மறந்துவிடுகிறார்கள்! ஊருக்குப் பயணம் என்னும்போது துள்ளுதல்! ஆற்றுக்கு, கோயிலுக்கு, கலியாண வீட்டிற்கு, விருந்துக்கு, உல்லாஸமாய் உலாவி வருவதற்கு, ஒரு புது விசேஷம் காட்சிகளைக் காணச் செல்லுவதற்கு இதற்கெல்லாம் துள்ளுதல்! புது வீட்டிற்குக் குடி போகும்போது துள்ளுதல்! புதுவீடு கட்டிக் கிரகப் பிரவேசத்தின்போது துள்ளுதல்! பள்ளிக்கூடத்திலே இன்றைக்கு வாத்தியார் வரமாட்டாரென்னும்

தங்கள் பெட்டியிலிருந்து ஏதேனும் ரூபாய்கள் காணமற்போனால், மனம் சமாதானம் அடையும்பொருட்டு மறுதினமுதல் எந்த யுகத்திலோ போக்கடித்ததாக மனோபாவம் செய்துகொள்ளுதல் சிலரது வழக்கம்.

போது, பாடம் படிக்காமல் நன்ருய்க் குதிக்கலாமென்று துள்ளுதல்! இவையெல்லாம் ஒரு தினுசாகும்.

ஃ

சிலர் தங்களின் புது வாழ்விலே புதுப்பெருமை பிடித்துப்போய்த் துள்ளி விழுகிருர்கள்! மட்டுக்கு மிஞ்சிக் கடன் வாங்கித் தங்களின் புதுமைப் பெருமைகளைக் காப்பாற்றிக்கொள்ளப்பார்க்கிருர்கள்! அதிலே எல்லை மீறி அளவுமீறிப் போய்விடுகிருர்கள்! அந்த சமயத்தில் அவர்களின் ஒரு கையெழுத்துக்கு எவ்வளவோ மதிப்பாய் எத்தனை ஆயிரம் ரூபா சரக்குகளானுலும் வீட்டு வாசலிலே வந்து குவிந்துவிடுகிறது! அவர்களின் பேருக்கும் சொல்லுக்கும் எவ்வளவோ மதிப்பேற்பட்டு விடுகிறது! கடைசியிலே இவ்வளவையும் சமாளித்துத் தாங்க முடியாமலே போய் இடுப்பு முறிந்து விழுந்துவிடுகிருர்கள்! இது அளவு சுளுவு நிதானம் தெரியாமல் கை நனைத்துக்கொண்ட சங்கதிகளின் முடிவாகும்! இத்தகையோரைப் பார்த்து, "துள்ளாதே துள்ளாதே குள்ளா, பக்கத்திலே பள்ளம் அடா" என்று எவர் சொன்னபோதிலும், அந்த சமயத்திலே அது தெரியாமல், பிறகு பள்ளத்தில் விழுந்தபோதுதான் தன்னறிவு தனக்கு உண்டாகிறது!

ஃ

ஒருவன் தனக்கு ஆண் குழந்தைகளில்லாமற்போக, தன் சகோதரியின் குமாரனையே தனதுகுமாரன்போலும் கொண்டு வளர்த்துக் கல்வி பயிற்றுவித்துத் தனது குமார்த்தியையும் விவாகம் செய்து தந்து உலகத்திலே ஒரு மனுஷனுக்கிவிடுகிருன்! இவ்வளவு நன்மைகளையும் பெற்றுக்கொண்ட அவன் தன் தாய்மாமனின் குமார்த்தியான தன் மனைவி யிறந்து, இரண்டாவதாக வேருெரு பெண்ணை விவாகம்செய்துகொண்டதும் தன்னை வளர்த்து எல்லா சொத்துக்களும் தனக்கே தந்திட்ட தன் தாய் மாமனை எதிர்த்துக்கொண்டு துள்ளி விழுகிருன்! இந்த துரோகத்தைக் காணும்போது தாய்மாமன் "துள்ளாதே துள்ளாதே ஆட்டுக்குட்டி, என் கையில் இருக்கிறது சூரிக்கத்தி" என்கிருன்! இந்தச் சூரிக்கத்தி என்ன தெரியுமா? தன்னுடைய சகல சொத்துக்களையும் தன் குமார்த்திக்குப் பத்திரம் மூலமாக உயில் எழுதி வைத்தபோது தனக்கு ஆண் குழத்தைகள் உண்டாய் விட்டால் தன் சொத்தில் முக்கால் பாகம் ஆண் குழந்தைகளுக்கும் கால் பாகம் மட்டுமே தன் குமார்த்திக்கும் சொந்தமாக வேண்டு மென்றும், அந்தக் கால் பாகமும் பின்னுல் விவகாரத்துக்கு இடமில்லாதபடி இன்னின்ன சொத்துகள் சேர்ந்தது கால்பாகமென்றும் அந்தப் பத்திரத்திலேயே முன்கூட்டித் தெளிவாய் எழுதி வைத்திருந்ததுதான்! இப்போதோ தாய்மாமனுக்கு ஆண் சந்ததி யுண்டாகிவிட்டது! பத்திரத்தின்படி முக்கால்பாக சொத்தும் அந்த ஆண் குழந்தைக்குச் சொந்தமாகிவிட, பாக்கிக் கால்பாகமே துள்ளி விழுந்த மருமகனுக்குச் சேருகிறது! அந்தக் கால்பாகமும் மருமகன் பட்டிருக்கும் கடன்களுச் சரிபோய்விடுகிறது! கடைசியில் துள்ளி விழுந்ததின் பலனுக ஏதுமில்லாத ஒட்டாண்டியாகித் தனது

தேசத்தின் போராட்டத்திலே மௌனமாய் அமைந்திருக்கவேண்டிய காலங்கள் வருவது சகஜமானல், அத்தகைய ஒருகாலம் இப்பொழுதும் நேரிட்டிருக்கிறது. 'சுதந்திரச்சங்கு'.

இரண்டாவது மனைவியுடனே வேறு வீட்டுக்குக் குடி போகும்படியாய் விடுகிறது! இரண்டாவது மனைவி வந்தவுடனே இளையாள் மோகத்திலே துள்ளிப்போய், பழய ஒழுங்கான குடித்தனத்தைப் பல பிரிவுகளாக்கிக் கெடுத்துத் தாங்களும் அழிந்து சிதறுண்டு போனவர்கள் அநேகர்! ஃ

கைவசம் இல்லாத காலத்திலே சிலர் ஒன்றைக் கேட்டு அது கிடையாதபோது துள்ளிக் கோபித்து எரிந்து விழுகிறார்கள்! "துள்ளித் துள்ளிக் குதித்தாலும் வெள்ளிப் பணமும் கிடையாக் காலத்தில் கிடைக்காது" தானே! என் பாகம் பங்குக்கு வழி செய் யென்றும் என் பாக சொத்தை எனக்குக் கொடுத்து விடு என்றும் சிலர் கேட்டுத் துள்ளுகிறார்கள்! சிலர் தாங்கள் துள்ளி விழுவதைப்போல் பிறரும் துள்ளி விழுவதாக நினைத்துக் கொண்டு, 'ஏனடா துள்ளித்துள்ளித் தொப்பென்று விழுகிறாய்" என்கிறார்கள்! வீட்டுக் கவலையில்லாதவன் துள்ளி விழ முடியுமே தவிர. பெரிய சமுசாரப் பளுவைத் தாங்கி எத்தனையோ கவலைகளில் நிற்பவன் துள்ளிவிழ முடிகிறதா? "துள்ளுகிற மாடு பொதி சுமக்குமா?' என்பதுபோல, வீட்டுக்கு அதிகாரியா யிருப்பவன் துள்ளி விழுந்தால் அந்த சமுசாரம் கட்டு குலையாமல் நிலைக்குமா? எவ்வளவோ கவலை, விசாரம். கடன் பளுவு, மேலே வருவதற்கு எட்டிப் பார்க்கும் செலவுகள் இவற்றை யெல்லாம் தாங்கிக்கொண்டு, முதுகு கொடுத்துச் சுமந்துகொண்டு தெய்வத்தை நம்பியிருப்பவன் துள்ளிவிழ முடியுமா? வீட்டிற்குள்ளிருந்து எத்தனையோ புகார்கள் குடும்பத் தலைவனின் காதுக்கு எட்டுகின்றன! ஒருவரை யொருவர் சண்டையிட்டுக் கொண்டு குடும்பத் தலைவனின்முன்பு வந்து சொல்லுகிறார்கள்! இரு சகோதரர்கள் சண்டையிட்டுக்கொண்டு தந்தையிடம் வருகிறார்கள்! குழந்தைகள் சண்டையிட்டுக்கொண்டு ஓடி வந்து அழுகின்றன! பெரியவர்கள் சிறியவர்களின் சண்டைகளும் குடும்பத்தலைவனிடம் வருகின்றன! இவைகள் எல்லாவற்றுக்கும் சமாதானமும் கண்டிப்பும் செய்து சமரஸப்படுத்த வேண்டி யிருக்கிற குடும்பத்தின் தலைவன் துள்ளிவிழ முடிகிறதா? துள்ளினால் குடும்பம் சரிவர நடக்குமா? எவ்வளவோ அடக்கமாய்ப் பொறுத்துக்கொண்டும் நீள சகித்துக் கொண்டும், பார்த்தும் பாராதவன் போலிருந்துகொண்டும் போகவேண்டிய ஒரு பெரிய பளுவு வீட்டுக்காரனின் தலையில் ஏறியிருக்கையில்—ரூபாய்ரூபாய்களாக எவ்வளவோவாரி அவன் செலவிடவேண்டி யிருக்கையில்—அவன் துள்ளி விழுகிறானென்று எந்தப் பளுவு சுமையுமே தாங்கியறியாத ஒருவன் சொல்வானானால், அதற்காக ஒரு சிரிப்பு சிரித்துத் தலையசைத்து அவன் பேதமைக்கு இரக்கப்பட வேண்டியது தான்!

ஃ

ஹிந்துக்களும் மகம்மதியர்களும் ஒரு ஸ்திரீயின் முகத்தில் இரண்டு கண்கள் போன்றவர்களென்றும், எந்த வகுப்பாருக்கேனும் தீங்கு நேரிடுமானால், ஒரு ஸ்திரீமுகத்தில் ஒரு கண் குருடாகி அவலக்ஷணப்படுவதுபோல், இந்தியா தேசத்தின் பெருமை குறைவுறும் என்றும் காலஞ்சென்ற ஸர், ஸய்யது ஆமித்கான் பகதூர் சொன்னது எக்காலத்தையும்விடத் தற்காலத்து நிலைமைக்குப் பொருந்தும்.

ஒரு பத்திராசிரியர் துள்ள முடிகிறதா? எவ்வளவோ கையைப் பின்னுக்கு இழுத்துப் பேனுவை ஒட்ட வேண்டி யிருக்கிறது! தலைக்குமேல் இருக்கிற சட்டங்களின் கனத்தையெல்லாம் நினைத்துக்கொண்டு ஒவ்வொரு எழுத்தாய் அர்த்தம் பார்த்து எழுதவேண்டி யிருக்கிறது! இவ்வளவுக்குள்ளே பிறர் துள்ளி விழுதலையும் அவர் தன் பேனுவால் அடக்க வேண்டி யிருக்கிறது! வஞ்சகர், மூடர், பொருமைப்பேய்கள், ஆத்திரக்காரர்கள் இவர்களின் அற்பச் செயல்களையெல்லாம், அவர்களின் தூற்றலுக்கும் கோபத்துக்கும் அஞ்சாமல் அவர்களை வெளியிலிழுத்துப் பேசிக் கண்டிக்கவும் வேண்டியிருக்கிறது! புதுப்புத்தி வரும்படி கூடுதரவும் வேண்டியிருக்கிறது! அதற்குத் தகுந்த பொறுப்பிலே தன்னை வைத்துக்கொண்டு சமாளிக்க வேண்டியிருக்கும்போது, ஆசிரியர் தனது அளவு தெரியாமல் துள்ள முடியுமா? அவரைத் துள்ளி விழுகிருரென்று சொல்லுகிறவன்—அவர் நல்லதுக்குத்தான் சொல்லுகிருரென்பதையறியாத-ஸர்வ மூடனும் பொட்டைக் கண்ணனுமாகத் தான் இருக்கவேண்டுமேயல்லாமல் வேறென்ன? இப்படியே ஒரு வியாபாரி தன் கடைக்கு வருகிறவர்களிடமும் வாடிக்கைக்காரர்களிடமும் துள்ளி விழுந்தால் அவன் வியாபாரம் நடக்குமா? ஒரு உத்தியோகஸ்தன் தன் மேலதிகாரியிடத்திலே துள்ளி விழுந்தால் அதன் முடிவு தெரிந்ததுதானே! துள்ளிவிழ முடியாத நிலையில் பெரிய பொறுப்பைக் கட்டிக்கொண்டு, கனத்த பளுவைத் தாங்கியபடி, தெய்வமே இன்று பொழுதை நிம்மதியாய் சமாளித்தாகவேண்டுமே யென்று கவலையில் மூழ்கிக்கிடப்பவர்களைத் 'துள்ளித் தொப்பென்று விழுகிருன்' என்று பிறர் பழிக்கும்போது, ஆண்டவா! இந்தப் புண்படும் சொற்களையும் கேட்கும்படியாய் விதி இருக்கிறதே யென்று மனதுக்குள் நொந்துகொள்ள வேண்டியதுதான்! தனக்கு ஒருவர்மீது ஆத்திரமும் கோபமும் துவேஷமும் இருக்கும்போது, அவர்கள் எவ்வளவு பரிசுத்தமும் அந்தஸ்துமுள்ளவர்களா யிருந்த போதிலும், வாய் நோகாமல் கண்டபடி பேசி, "அவர்கள் துள்ளிவிழுகிருகள்" என்று அதிகப்பிரசங்கித்தனமாய்ச் சொல்லிக்கொள்ளவும் வைக்குமாக்கும்!

ஃ

இன்னெரு வேடிக்கை! ஒருவனுக்கு வஞ்சகம் செய்து அவன் குடிகெடுக்கப் பார்த்துத் துள்ளி விழுந்து, கடைசியில் தாங்கள் செய்த வஞ்சகம் தங்களுக்கே கேடாக முடிந்து, இருக்க இடமும் உண்ண உணவுமில்லாமற்போய், முடிவிலே தாங்கள் வஞ்சித்தவனின் வீட்டிற்கே திரும்பி வந்து அவன் நிழலிலேதங்கி அவனது ஆதரவிலே அவனுடைய அன்னத்தைப் புசித்துக் காலம் தள்ளும்படியானவர்களும் அநேகர்! குறை குடம் தளும்பும்; நிறை குடம் தழும்

(1) சதாப்பிலை (காய்ந்தது), (2) சீரகம், (3) கருஞ்சீரகம், (4) சன்னலவங்கப்பட்டை, (5) அதிமதுரம், (6) ஏலரிசி—இந்த 6-ம் வகைக்கு 1 பலம், மகிழம்விரை 3 பலம், மதன காமப்பூ $1\frac{1}{2}$ பலம், கிராம்பு $\frac{3}{4}$ பலம், கொத்தமல்லி 5 பலம், சீனுகற்கண்டு 10 பலம் இவைகளைத் தனித்தனியாய் இடித்து வஸ்திரகாயம் செய்து யாவும் கலந்து புட்டியில் அடைத்து காலை மாலை வெருகடிப் பிரமாணம் சாப்பிட்டுச் சற்று வெந்நீர் பருகிவந்தால், படபடப்பு, வாய்வு, நெஞ்சில் கட்டு முதலியன தீரும்.


புமா? அற்ப கல்வியுடையோர் துள்ளிவிழுவர்! நிறை கல்வி வாய்ந் தோர் தன்னடக்கத்தில் பணிந்து நிற்பார்கள்! துள்ளி விழுவதிலே பரிசுத்தமான அன்புமயமான துள்ளுதலுமிருக்கின்றது! விஷமக்கலப்பான துள்ளுதலுமிருக்கின்றது! துள்ளிவிழுந்த துரியோதனன் சங்கதியும், துள்ளிவிழச்சக்தியிருந்தும் அடக்கமாய்த் தாழ்மையுடன் நின்ற பஞ்சபாண்டவர்களின் செய்தியும் உலகத்தார் தெரிந்து வைத்ததுதான்! ஆகவே, துள்ளுவதிலும், துள்ளுவதாகப் பிறரை வாய் கூசாமற் சொல்வதிலும் நிதானித்து ஆற அமர யோசித்துப் பார்த்து நற்புத்திபெறவேண்டுமென்று விகடன் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன்! கேட்டால் கேளுங்கள்! விட்டால் விடுங்கள்! சீறிக்கொண்டு உறுமினால் உறுமுங்கள்! உங்கள் பாடு! ராம்! ராம்! சுபம்! சு! சுவாஹா !!

வேலையை முடித்தபின் ஒரு ஆசிரியர நிலை.

"அடுத்த பத்திரிகையின் வேலைகளை ஒருவாறு பூர்த்தி செய்ததும் மிக்க களைத்துப்போனேன். அன்று வெளியில் செல்லவேண்டிய வேலைகளும் இருந்தன. என் களைப்பில் அதற்குச் சக்தி யில்லைபோல் தோன்றிற்று. என்னை மேலும் வருத்தக்கூடாதென்று ஓய்வு கொடுத்து விட்டேன். அப்பொழுது பகல் மூன்று மணி. சற்றுக் கண்ணயர்ந்தாலன்றி என் சிரசில் அதிகரித்த கனம் தீராதென்று தோன்றவே உடனே நித்திரைக்குச் சென்றேன். ஒருமணிநேரம் தூக்கத்தில் கழித்து எழுந்து முகம் கழுவிக்கொண்டேன். உடனே மாலையில் பருகும் டீ என் முன்பு வரவே சுடுகையுடன் அருந்தித் திண்டில் சாய்ந்தேன். இன்பமான காற்று வீசியது. என் ஆயாஸ சிரமம் நீங்கிப் புதியவனானேன்."

ஓர் நற்கருமம் செய்தலென்பது எளிதான காரியமல்ல. அக்கருமத்தைச் செய்பவனது விருப்பம் பரிசுத்தமாயிருக்கவேண்டும். அவனது எண்ணம் நல்லதாயிருக்க வேண்டும். இனி தான் செய்ய நினைத்திருக்கும் கருமத்தைப்பற்றி நன்கு யோசித்து அது நல்லதென்ற முடிவுக்கு அவன் வந்திருக்கவேண்டும். அக்கருமத்தைச் செய்துமுடிக்க அவன் கையாளும் முறைகள் எவர்க்கும் உண்மையில் ஒரு தீங்கும் விளைவிக்காதனவா யிருக்கவேண்டும்.

நடராஜமூர்த்தி யொன்றுண்டென்று வங்காளிகட்குத் தெரியாதாம். வடக்கேயுள்ள சிவாலயங்களில் நடக்கும் பூஜை வேறுவிதமாம். ஆகமவிதிப்படி அங்கு பூஜை இடையாதாம்.



வேலையில்லாத் திண்டாட்டம் தீருவதற்கு மதத்தின் பேரைச் சொல்லிக்கொண்டு தம் மதத்தினருக்கு உழைப்பதாய் வேலை செய்யப் புறப்பட்டால் நல்லவரும்படிவருமாம்!

பிரித்துக் கக்ஷிகள் பேசி விலகி எதிர்த்துக்கொண்டிருக்கிற வரையில் தான் லாபம் கிடைக்குமாம்!

சென்னையிலே பத்திராசிரியர்களின் சங்கம் ஒன்று ஏற்பட்டதைக் கண்டு விகடன் ஹா! அவ்வளவு ஒற்றுமையா என்று சிரிக்கிறானாம்!

பிறர் வீட்டிலே சாப்பாட்டிற்குக் காத்திருப்போர் அவர்களைக் கூப்பிட்டதும் எப்போது அழைப்பார்களோ வென்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களானதால் உடனே போகத் தயாராகி விடுவார்களாம்!

தாங்கள் மிக்க பிரியமாய் சாப்பிடக்கூடிய ஒரு காய் கறியைப் பிறர் பிரியமாய்ச் சாப்பிடுவார்களென்று சமைத்ததாகச் சொல்லிக்கொண்டு, அந்தப் பழியை அவர்கள் தலையில் போட்டு விட்டு ருசியுடன் நன்றாகத் தின்பதில் மாத்திரம் தாங்கள் கலந்து கொள்ளவேண்டுமாம்!

எதையும் வீட்டிற்குள்ளிருந்து எடுத்து வந்து கொடுத்ததாகத் தன் மீது வார்த்தை ஏற்படாமல் பார்த்துக்கொண்டு, மற்றவர்கள் இன்னொருவருக்கு எடுத்து வந்து கொடுக்கும் போது தாங்களும் கூடவேயிருந்து தின்றுக் குலாவ வேண்டுமாம்!

தங்களுக்கு ஆகாத பெண்களை அவலக்ஷணம் பிடித்தவர்களென்று சொல்லிப் பழிக்கவேண்டுமாம்!

அதிக சமர்த்தாக இருந்து எல்லா வேலைகளையும் தாங்களே தாங்கிச் செய்வதாக எவ்வளவுதான் வேஷம் போட்டாலும், அந்த வேஷத்தைத்தான் மற்றவர்கள் முதலில் கண்டு கொள்கிறார்களாம்!

தங்களுக்குக் கிடைக்காத வொன்றைத் தாங்களே வேண்டாமென்று விட்டதாகப் பிறருக்குக் கௌரவமாகச் சொல்லிப் பல்லிளித்துக் கொள்ள வேண்டுமாம்!

தான் ஒருவரைத் தனக்கு அதிகமாக வேண்டிய அந்தரங்க மனுஷ்யராகச் செய்து கொள்ள எண்ணி மயக்க முயலுவதில், அங்கே தான் பகையும் விலகுதலும் திட்டுகளும் காணும்படியாகிறதாம்!

மற்றவர்களைப் பழித்துக் கூறித் தன்னை அதிக யோக்கிய முள்ளவனாக்கிக் கொள்ள வலை வீசும்போது தான், மற்றவர்கள் இவனுடைய நாறிப்போன அயோக்கியதையை வெளியிலெடுத்துக் கொட்டுகிறார்களாம்!

தான் கிளி யென்று நினைத்துக் காதலாகி, அதிக உறவு காட்டிக் கொஞ்சப் போக, அந்தப் பெண் கிளியோ இதில் மயங்காமல் தேளாக இருந்து கொட்டி விடுகிறதாம்!

தன் கபடத்தை மூடிக்கொண்டு குலாவப்போன இடத்தில் அவர்கள் இவனது குணமறிந்து வெட்டிக் கொண்டு தூரப்போய் விடுகிறார்களாம்!

ஒரு திருடன் மற்றொரு திருடனை யோக்கியனாக எந்த சங்கதியிலுமே நம்ப மாட்டானாம்!

இன்னொருவனுடைய சொத்திலே தன் நாக்கைபோட எப்போதும் ஆசை அதிகம் துடிக்குமாம்.

ஒருவரிடம் வெகு பிரியமாகப் பேசப் போவதானது அவர்களைத் தனக்கு வசப்படுத்திக் கொள்ளவாம்!

6-ஆங்கில காதற் கடிதங்கள்.

(204-ம் பக்கத் தொடர்ச்சி.)

3-ம் கடிதம்.

அந்தக் கனவானின் பிரதியுத்தரம்.

பெண்மணியே!

மிகவும் குற்றமுள்ளவர்கள் ஒரு பக்கமிருப்பினும், பிறர்மீது ஒரு தப்பிதம் சொல்ல முற்படுகையில் அதை மிகக் கடினமாக உபயோகிக்கிறார்களே யன்றி, எளிதான குற்றமாகப் பேசிச் சாமான்யமாக அதைக் கருதி எவரும் விட்டுவிடுவதில்லை யென்று நான் எப்போதும் எண்ணி யிருந்ததற்கு உனது கடிதமே இன்று நிச்சயமான ருசுவா யிருக்கின்றது. நான் உண்மையாகச் சொல்லும் இதற்கு நீ ஆச்சரியப்பட வேண்டியதில்லை. அதேதெனனில், சாஸ்திரியைப்போலப் பேசி யிருக்கிறேனென்று அந்த சாஸ்திரிகளின் நூல்களில் என்னைவிட மிக்க நேர்த்தியாய்ப் பழகினவளாய்க் காணுகின்ற நீ என்மேற் குற்றஞ் சொல்லுகிறாய். ஆனால், மாதரசே, காதலைக் குறித்து எழுதும் கடிதத்தைச் சிறப்பாக எழுதுவது ஒரு பெரிய குற்றமா? அதற்குரிய சங்கதிகளெல்லாம் ஒன்றுக்கொன்று ஒவ்வாத சாரமற்றதாக யிருக்க வேண்டுமென்பது நினது கருத்தா? தயவு செய்து சொல்ல நின் பவளவாய் திறவாய்.

ஃ

ஸ்திரீகளில் ஒருத்தியைச் சிரேஷ்டமாக எண்ணி அவள்மீது காதல் கொண்டவன், அவளை யடைதற் பொருட்டு மனுஷ்யத் தன்மையை விட்டு அறிவீனத் தன்மையையா கொள்ளவேண்டும்? அப்படியாகாதென்பாய் என்கிற துணிவே எனக்குண்டு. நான் சொல்லும் விவாக மொழிக்கு இணங்காதிருப்பதற்குரிய விவேகமான அநேக நியாயங்கள் உன் கடிதத்தில் அடங்கி யிருக்கின்றதால், அவைகள் நன்றாகக் கற்றுணர்ந்த தன்மையினு லுண்டானவைகளென்று ஆலோசியாவிட்டால் உள்ளபடி நான் மூடனாயிருக்கவேண்டும். ஆகிலும், அவைகள் லோகாபிராமமாய் (உலக வழக்கமாய்)ச் சொல்லப்படுங் குற்றங்களை மிகவும் தழுவியதாகக் காணுகின்றதே எனக்குப் பெரிய ஆக்ஷேபமாய் இருக்கின்றது.

ஃ

உலகத்தில் மஹா நன்மையான காரியங்களைக் கெட்ட காரியங்களாகக் காட்டுதலும், மஹா யோக்கியமுள்ள மனிதர்கள் பேரிலே நிந்தை பேசுதலும் உண்டென்று உனக்கு நன்றாகத் தெரியுமென நினைக்கிறேன். அன்றியும் இப்படியெல்லாம் அந்தஸ்துடையவர்களையும் கூடக் குறித்துப் பேசுகிறார்களே யொழிய ஒருவரை மாத்திரங் குறித்தல்ல. இந்த விஷப்பேச்சு பரிசுத்தரை முதலாய்க் குற்றவாளிகளாக் கினபோதிலும், விவேகிகள் அதை அதற்குத் தகுந்த நியாயப்படியே கண்

எந்தத் தனிப்பட்ட நபரும் தமது பழைய ஊழியம் அல்லது தியாகத்தைக் கொண்டு ஜனங்களை ஏமாற்றிவிடலாமென்று நினைப்பது பைத்தியக்காரத்தனமாகும்.

டனம் செய்வார்கள். நல்லவர்களுக்கு நன்மையே பலன். இந்தத் திருப்தி யுள்ளவர்கள்,

"Deaf to folly's call,
Attends the music of the
[mind"

"மூடர் சொல்லுக்குச் செவி
கொடாமல்
மனச் சமாதானத்தையே
தேடுவார்கள்."

ஃ

அப்படிப்போல, உன்னைப்போலொத்த மிகுந்த நல்லறிவுடைய ஸ்திரீயானவள் தன் நடக்கையிற் குற்றமான தொன்றுமில்லை யென்று தன் மனதே தனக்கு நல்ல சாட்சியா யிருக்குமாகில்,-கெடுநினைவுகொண்டு பொறாமையினுற் சொல்லப்படுந் தோஷங்களானவை,--தனக்கிருக்கும் மெய்யான மனச் சமாதானத்துக்கு முன்னே என்னத்திற்காகும்? மாற்றாந்தாயாக இருப்பதற்கு நீ சொல்லும் ஆக்ஷேபங்கள் உள்ளபடி விசேஷித்தே (அளவிற்கதிகப் பட்டே) யிருப்பதால், அந்த நூனுதிக்கப் புத்தி (அதிகப் படிப்புப் புத்தி) வீணனதென்று நான் சொல்வது தூஷணை யல்லவென்று நான் நினைக்கிறேன்.

ஃ

நான் தாரமிழந்தபின்பு சுகித்து வாழ நினைத்து முதன் முதலிற் பேசிய பெண் நீ யொருத்தியேதான். இப்படி நினைத்தது சரியல்லாதிராது. முன் சொல்லியபடி உண்மையாகவே சொல்லுகிறேன். ஆகையால், பெண் மணியே! நான் கூறும் மொழியை ஒட்டாரமாகத் தள்ளிவிடும்படியான அவ்வளவு நிஷ்ரேயா யிருப்பாயா? உன்னுடைய நற்குணத்துக்கு அது தகுமென்று நினையேன். ஒரு பெண்ணை விலக்குக் கொள்வது பெருந் தன்மை யுடையோன் புத்திக்கு இழிவானதென்று எனக்குத் தோற்றியபோதிலும், கடவுளின் கிருபையினுல் நமக்குக் குழந்தைகளுண்டானுல், அவர்களுக்குப் போதுமான ஆஸ்தியுமல்லாமல், உன் இஷ்டத்திற்குத் தகுந்த சொத்துக்களும் உனக்கு வைக்க மனதாயிருக்கிறேன். இதற்கு நீ எழுதும் உத்தரவுக்காக ஆவலுடன் காத்திருக்கிறேன்.

இங்ஙனம்,
உண்மையாக உன்மீது
அதிசயிப்பவனுகிய
ஜான்.

இதற்குப் பதில் கடிதம்
அடுத்த
ஸஞ்சிகையில் வரும்.

தன் கணவன் குறித்த ஒரு சங்கதியில் தன் பிடிவாதத்தையே காட்டுவான் என்று அறிந்து கொள்ளுகிற மனைவி தன் எதிர்ப்பை அடக்கிக் கொண்டு பரம சாந்த குணத்தினள் போல் நடிக்கிருள். இந்த பரம சாந்த வகையில் அவனை ஏமாற்றிப் பிறகு தன் வழியில் திருப்ப அவள் நினைவு.

கோர்ட்டில் விதிக்கப்படும் அபராதத்தை ஒருவன் எப்பாடுபட்டாவது செலுத்திவிடவேண்டி யிருப்பதுபோல் எவ்வளவு உயர்ந்த சார்ஜ் விதித்தாலும் எப்படியாவது ரயிலில் பிரயாணம் செய்யவே வேண்டியிருக்கிறது. கேட்ட பணத்தைக் கொடுத்துத்தானுகவேண்டி யிருக்கிறது. தபாற்கட்டண உயர்வுகளுக்கும், இவ்விதமே சிரமப்பட நேருகிறது.

மறதியின் கொடுமை.

மறதியின் கொடுமைகளில் நாம் ஒருவருக்குக் கொடுத்த வாக்கை மறந்து தவறி விடுவதும் ஒன்றாம். ஒருவரிடமிருந்து ஒன்றைப் பெற்று வந்து, நமது காரியமானபின்பும் அதைத் திருப்பித் தராதிருந்துவிடுகிறோம். ஆனால், அதைக் கொடுத்தவரிடமே அதற்குள் இரண்டு மூன்று தடவை சென்றுவிட்டு வந்திருக்கிறோம். அப்படிச் சென்றபோதே அவரிடமிருந்து பெற்றதையும் கொண்டுபோய்க் கொடுத்திருக்கலாகாதா? அதை அந்த சமயம் மறந்துவிடுகிறோம். வீட்டுக்கு வந்தபிறகோ, மற்றொரு சந்தர்ப்பத்திலோ நினைவு தோன்றுகிறது. இந்த மறதியால் அந்த வஸ்துவைத் திருப்பிக்கொடுக்க நாளாய்விடுகின்றது.

மறதியால் நாணயமும் கெடுகின்றது. நாளை நிச்சயமாகப் பணம் வருமென்றும், வந்தவுடனே கொடுத்துவிடுவதாகவும் கூறி ஒருவரிடம் பத்து ரூபாய் பெறுகிறோம். பணம் வந்ததும் உடனேகொண்டுபோய்க் கொடுத்தால் நமது நாணயத்தை அது உறுதிப்படுத்தும். பல வேலைகளின் தொல்லையில் அதை மறந்துவிட்டுப் பிறகு ரூபாய் பத்தையும் கொடுத்துத் திரும்புகிறோமாயினும், அதற்குள் இரண்டொரு நாள் அதிகப்பட்டு, முன்பு சொன்ன நாணயப்படி மறுதினமே தந்துவிடத் தவறிப் போகிறோம்.

ஒருவரை அலக்ஷியம் செய்ய நினைக்கிற துவேஷ புத்தியின்போது அவரது நற்குணங்களையும், பழய அன்புகளையும், அவரது தூய்மையான உள்ளத்தையும் மறந்துவிட்டுக் கொடியவர்களாகிறோம். இதனினும் கடின சித்தம் வேறுண்டா? கடவுளையும் தர்ம நியாய புத்தியையுங்கூட நாம் சிலசமயங்களில் மறந்துவிடுகிறோமே! ஆ! மறதியின் கொடுமை மா பெரிது.

நினைப்பதொன்று, நிகழ்வதொன்று.

ஒருவன் தான் மிக்க அன்பு பூண்டுள்ள ஓரிடத்திற்குப் புதனன்று சந்திப்பதாகக் கடிதம் வரைகின்றான். புதன்கிழமை நெருங்குவதற்கு இரண்டொளிருக்கையில், புதனன்று வரவேண்டாமென்றும், வெள்ளிக்கிழமை வருமாறும், பதில் கடிதம் வருகின்றது. அவ்விதமே வெள்ளியன்று புறப்பட நினைக்கிறான். செவ்வாய் இரவில் ஏழெட்டு தரம் வாந்தியும், அதற்கும் மேலாக வயிற்றுப்போக்குமாகிப் படுக்கையில் விழ, இவன் செல்ல நினைத்த வெள்ளிக்கிழமையும் வருகின்றது. அன்று கால் கைகளையும் ஆட்டுவதற்கு சக்தியற்று, நாலைந்து தினங்கள் கழிந்ததின்மேல், பலரைச் சந்திக்கப் புறப்பட்டுக் கடைசியில் முன்பு சந்திக்கத் தவறிவிட்ட அன்பினரைக் காண்பதெனத் தீர்மானித்துக்கொள்கிறான். அவ்விதமே பலரையும் பார்த்துவிட்டு மற்றோரிடம் சென்று, அங்கிருந்து தான் குறித்த இடம் செல்ல நினைக்கையில் எவ்விதமோ இரவு ஒன்பது மணியாகிவிட, இனி தான் அன்பரின் வீடு சேர்வதற்குள் பத்து மணியாகிவிடுமாதலின் நாளை செல்வோம் என்று அவ்விடமே இருந்துவிடுகிறான். மறுதினம் புறப்படுகையில் இடையே பல வேலைகள் எதிர்ப்பட்டு பகல் மணி பன்னிரண்டாகிவிடுகிறது. இந்நேரத்தில் அன்பரில்லம் புகுந்து புசிப்புக்குத் தொந்தரை தரலாகாதென்று தான் இறங்கியுள்ள இடத்துக்குப் போய்விடுகிறான். அதற்கு மறுநாள் தன் ஊருக்குப் பலரோடுகூடப் பிரயாணமாய்விடுவதால், கடைசியில் அந்த அன்பரின் வீட்டிற்குச் சென்றுவர முடியாமலே போய்விடுகிறது. மனிதன் நினைப்பதொன்று, நிகழ்வதொன்று.



இன்று கூடிய நமது கடையில் "விசுவாசம்" என்பது ஒரு தனிச்சரக்கா, அல்லது ஜாதிக்காயின்மீது ஜாதிபத்திரிஒட்டி வளர்வதுபோல வேறொன்றோடு சேர்ந்தேதான் அது இருக்குமா? என்று தொந்திச்சுப்பு கேட்டார். "ஒரு பெண் நாளைக்கு இட்டிலி சுடுவதற்கென்று இன்றைக்கு மாவு அரைக்கிறாள். அதற்குப் பிறகு அமாவாசைப் பலகாரத்துக்காக வேறே மாவு அரைக்கிறாள். அவ்வளவும் அரைத்து விட்டு, "நான் எவ்வளவு உழைத்தாலும் உங்களுக்கு விசுவாசமில்லை" என்று தன் கணவனைப் பார்த்துச் சொல்லுகிறாள். அதற்குக் கணவன் விசுவாசமென்பது ஒரு தனிப்பட்ட வஸ்துவில்லை. ஒரு சங்கதியோடு ஒட்டியே அது நிற்கும். நீ இவ்வளவு பாடுபடுகிறேனென்றால், அது உன் குடும்பத்தின் மீதும், உன் குழந்தைகள் கணவன் இவர்கள் மீதுமுள்ள உன் விசுவாசத்துக்காக உழைக்கிறாய் என்று பொருள்படும். உனது கடமையாகிய குடும்பத்தின் வேலைகளை நீ செய்கிறாய். அவ்விதமே, நானும் உன் மீதும், குழந்தைகள் முதலியவர்கள் மீதும் விசுவாசம் வைத்து பாடுபட்டுப்பணம் தேடிவந்து உங்களை ஸம்ரக்ஷிக்கிறேன். என்னை நம்பிய குடும்பத்தை நான்காப்பாற்றுகிறேன். இவ்விதம் செய்வது எனது கடமை; அவ்விதம் நீ உழைப்பது உனது கடமை இருவரும் சேர்ந்து தத்தம் கடமைகளைச் செய்து முடிப்பதின் மூலமாகத் தங்களின் விசுவாசத்தை வெளியிட்டுக்கொள்ளுகிறார்கள். விசுவாசம் என்பது இவ்வாறு ஒரு சங்கதியோடு, ஒரு கடமையைச் செய்து முடிப்பதோடு ஒட்டி நிற்குமேயன்றி, அது தனியாக, ஒரு மிட்டாய்ப் பொட்டணமாக நில்லாது. கரும்புடன் சாறும்போல் விசுவாசமானது ஒரு செய்கையுடன் சேர்ந்திருப்பதேயன்றி கரும்புச்சக்கை வேறு, சாறு வேறாகத் தூரத்தூர இராது என்கிறான். இப்படி இந்தக் கணவன் கூறுவது சரிதானா?" என்று வினவினார்.

ஃ

அல்லாபிச்சை பதில் சொல்ல எழுந்தார். "விசுவாசம் என்பது ஒரு செய்கையின் மூலமாகத் தோன்றி மனதிலே மறைந்து நிற்பதாகும். தன் குமாரன், தன் மனைவி, தனது தாய், தமக்கை என்பது போன்ற தன்னுடைய என்று நினைக்கும் எண்ணங்களால் அபிமானம் ஏற்பட்டு விசுவாசம் என்பது உதய

சிலர் வெகு வாஞ்சையுடன் குறித்த ஒருவருக்குக் கடிதம் எழுதுகிறார்கள். அந்த வாஞ்சையை மெய்யென்று நம்பி உடனே அத்யந்த அன்புடன் பதில் தந்தாலோ அதற்கு விடையே வருவதில்லை! அதற்குள் வாஞ்சை மாறி மறைந்து விட்டது போலும்!

மாகின்றது. அந்த விசுவாசத்தால் அவரவர்க்குச் செய்யவேண்டிய காரியங்களை ஆவலுடன் செய்யவைக்கின்றது. அந்த விசுவாசத்தால் அவர்கள் மீது பிரீதியா யிருக்கத் தூண்டுகிறது. தன்தந்தை தாய்என்ற விசுவாசத்தால் குழந்தை ஓடிவந்து அணைத்துக் கொள்கிறது. ஒருவன் நமக்கு ஒரு பெரிய நன்மையைச் செய்கிருன்; நமது ஆபத்துக் காலத்தில் அருகிலிருந்து பல உதவிகளைப் புரிந்து நீங்காத் துணையாயிருக்கிருன், அவனது மறத்தற்கரிய உபகாரங்களுக்காக அவன் மீது பரம விசுவாசம் வைக்கின்ருேம். இவ்விதம் விசுவாசம் கொண்டதற்கு அவனது உபகாரங்கள் காரணமாகிறது. இவ்விதமே ஒவ்வொரு காரணத்தைப்பற்றிக்கொண்டே விசுவாசம் என்பது தோற்றமாகும். எஜமான விசுவாசம் என்ருல், தனது குடும்ப ஸம்ரக்ஷணைக்கு வேண்டிய பணத்தைச் சம்பளம்மூலமாக அவன் தந்துகாப்பதால், அதன் மூலமாக அந்த எஜமானனிடத்து விசுவாச முண்டாகிறது. தமது தங்கை தமக்கையின் குழந்தைகளென்று பிரியமாய்ச் சேர்த்து வைத்துக் கொள்ளுகிருர்கள். அதற்கு அந்தக் குழந்தைகள் இவர்களது தங்கை தமக்கைகளுக்குப் பிறந்தவர்களா யிருந்ததே காரணம். மற்றவர்களுக்குப் பிறந்த குழந்தைகளாயிருந்தால் இவ்வாருன விசுவாசம் உணர்த்த மனது ஒருப்படாது. எத்தனையோ நகரங்களில் தான் வசித்திருந்த போதிலும், தான் பிறந்த ஊரினிடத்து இயற்கையாகவே ஒருவனுக்கு விசுவாசம் தோன்றிக் கொள்ளும். அவ்வித விசுவாசம் மற்ருேர் ஊரின் மீது அவனுக்கு உண்டாகாது. தனது காரியங்களை யெல்லாம் கவனித்து உதவித் தன்னை யொருவர் காப்பாற்றுகிறதா யிருந்தால், அவரது தயாளத்துவத்திற்காக அவர் மீது தானுகவே விசுவாசம் எழுகின்றது. அந்த விசுவாசம் அவருக்கு உட்பட்டு நடந்துகொள்ள வைக்கிறது. பரஸ்பரம் ஒருவருக்கொருவர் பிரீதி பாராட்டுவதும், உள்ளடங்கி நிற்பதும் விசுவாசத்தின் காரணமாக நடக்கும் செய்கைகள்தான். அந்த விசுவாசம் தோன்றுவதற்கு ஒரு காரணம், சம்பந்தம் ஏதாவது ஒன்றிருந்தாலன்றி உண்டாகாது. விசுவாசம் தனிப்பட்ட ஒரு சரக்கல்லதான்" என்ருர்.

ஃ

ஆமவடைப் பண்டாரம் கூறியதாவது:—"விசுவாசம் என்பது ஒன்றின் காரணமாகத் தோன்றுமென்பதையும், காரணமற்று உண்டாவதல்லவென்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். ஒரு ஆணும் பெண்ணும் சந்திக்கிருர்கள். முதல் சந்திப்பிலேயே ஒருவர்மீதொருவர் பிரீதி கொள்கிருர்கள். அந்தப் பிரீதிக்குக் காரணம் இன்னதென்று தெரியவில்லை. காமத்தாலோ காதலாலோ இவர்கள் வருந்தித் துரெண்ணத்துடன் ஒருவரையொருவர் விரும்பியதாகவும் காணவில்லை. கடைசியில் சிறுவயதிலேயே பிரிந்துபோன ஒரே தாயின் வயிற்றுக் குழந்தைகளென்று பிறகு கண்டுகொண்டு முன்னைவிட அதிக விசுவாசமாகிருர்கள். இவ்வி

ஸ்ரீரங்கத்தில் ஒரு பிராமணரல்லாதார் கடையில் மட்பானையிலுள்ள ஜலத்தை ஒரு டம்ளரில் ஊற்றி, சிறிது சர்பத் சேர்த்து அத்துடன் ஐஸ் போட்டுக் கலக்கித் தர, சில பிராமணர்களும் அதை அருந்துகிருர்கள். சர்பத்தும் ஐஸ்ஸும் சேர்ந்துவிட்டால் சூத்திரன் தொட்ட ஜலத்தின் தோஷம் போய்விடுகிறதாம்!

தம். தெளிந்தோ, தெளியாமலோ, பூர்வஜென்ம சம்பந்தமிருந்து அதனால் தூண்டப்பட்டோ விசுவாசமென்பது ஜனிக்கின்றது. உத்தமர்களுடைய விசுவாசம் எந்தக் காலத்திலும் கெடாது. தமது நன்றியைப் பிறர் மறந்தபோதிலுங்கூட விசுவாசமே காண்பித்து மன்னிப்பார்கள். ஆசை அறுபதுநாள், மோகம் முப்பதுநாள் என்பதாகச் சிலகாலம் விசுவாசமாயிருந்து, பிறகு அந்த விசுவாசத்தை மறந்து எண்ணாமலே போய்விடுகிறவர்கள் மத்திம வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஒரு காரியத்திற்காக விசுவாசம் பாராட்டி அது தீர்ந்தவுடனே மறப்பவர்களும், எவ்வளவோ உதவிகளைச் செய்தவர்கள் ஒரு சகாயத்தைச் செய்ய மறுத்தால், அதற்காகக் கோபித்து பழய விசுவாசத்தைக் கைவிடுகிறவர்களும் அதம வகுப்பைச் சார்ந்தவர்களாவர். விசுவாசம் இருப்பதுபோலவே கபடம் செய்பவர்களும், எவ்வளவோ விசுவாசத்துடன் நடந்து உதவிகள் புரிந்திருப்போருக்குத் துரோகம் செய்து பகைத்தும் பல கெடுதிகள்புரிந்தும் தூர்த்தராவோர் அதமாதமர்களென்றும்; விசுவாசம் கெட்டவர்களே இப்போது அதிக"மென்றும் கூறினர்.

ஃ

"இயற்கையாய் எழுந்த விசுவாசமும், அந்த விசுவாசத்தால்ஒருவரை மேன்மையாக நினைக்கிற மதிப்புச் சிலாக்கியங்களும் மிகப் பாராட்டுதற்குரியனவாகும். ஆனால் கோட்சொல்லுகளாலும், பிறர் மனத்தைக் கலைப்போரது வஞ்சகமான சூட்சிகளாலும் இந்த விசுவாசமானது கெட்டுப்போவதுமுண்டு. தானாக விசுவாசம் கொள்ளாமல், இன்னொரு மனிதருக்கு வேண்டியவரென்று கொள்ளும் விசுவாசமானது அந்த ஒரு மனிதர் வேண்டாதவராகும்போது விட்டுப் போகிறது. சிலர் ஒருகாலத்தில் எவ்வளவோ விசுவாசமாயிருந்து எல்லாம் செய்கிறார்கள். பின்போ அவர்கள் விசுவாசமற்ற தன்மையுடன் முற்றிலும் அன்னியராகிவிடுகிறார்கள். இது அவரவர்களது மனப்போக்குகளின் பேதங்கட்கேற்ப நேர்வது. இவை யாவும் கீழ்த்தரமான வகுப்பைச் சேர்ந்தவை" என்று மோர்க்குழம்புத் தோழர் கூறினர். இத்துடன் நமது கடையும் பூர்த்திபெற்றது.

பஹதூர் போன்வண்டு செட்டியார்.

அந்த சங்கதியைப் பேச ஆரம்பிப்பின் அதிலிருந்து ஒரு பெரும் சண்டை நேருமென்று தெரிகிறது. ஆனால், எத்தனை நாளைக்குத்தான் அந்த சங்கதியைப்பற்றிப் பேசாமல் இருப்பது? எவ்விதம் மௌனமாய் சகித்து நிற்பது?

ஒருவர் யோக்கியமாக (அன்பாக) நடந்துகொள்ளவில்லை யென்று சொல்லப்படுகையில், அதற்குப்பின்பு அவர்களிடத்தில் மதிப்புடையவர்களாக மற்றவர்கள் இருக்க முடியாது. அப்படிப்பட்ட மதிப்பு கெடும் நிலைமை எற்பட்டு விடும்போது அவர்களிடம் முன்பு வைத்த பற்றுதலுக்கு உடனே க்ஷீணதிசை ஆரம்பமாகிவிடுகிறது. அவரது நற் பெயரும் இனி பாழாம்.

சூடாயிருக்கிற அன்னம் பக்ஷணங்கள் முதலியவற்றைப் புசித்துவிட்டுக் குளிர்ந்த ஜலத்தைப் பருகினால் சிலரது பற்கள் கூசுகின்றனவாம்.

வண்டுகளின் விசித்திர வாழ்க்கை.

இந்த விசித்திரமான உலகத்தில் நாற்புறமும் சுற்றிப் பார்க்கும் போது, இவ்வுலகமெல்லாம் யாருக்காகப் படைக்கப் பட்டதென்று நீங்கள் எப்பொழுதாவது யோசித்ததுண்டா? இவை யாவும் நம்முடைய நன்மைக்காகவே படைக்கப் பட்டனவென்று எண்ணுகிறீர்களோ? இந்த ஈச்வர சிருஷ்டியில் மன்னுயிர்கள் மிகவும் சொற்பம். இப்பூமியில் அவர்கள் வசித்திருக்கு மிடமும் மிகவும் சொற்பமே. மனிதர்கள் எவ்வளவோ உபயோகப்படுத்தியும், இன்னும் மனிதர்களின் கைக்கு அகப்படாத பூமிகள் எண்ணிக்கையற்று இருக்கின்றன. மனிதர் சிறிதும் உபயோகித்துக் கொள்ள மாட்டாத மலைகளுக்குக் கணக்கு உண்டா? சிறிதும் மனிதர் கண்ணுக்குத் தெரியாத எவ்வளவு பிரதேசங்கள் சமுத்திரங்களிலிருக்கின்றன! இப்படி மனிதர்கள் வாஸம் செய்யாமலும், மற்றெவ்விதத்திலும் தமக்கு உபயோகப் படுத்திக்கொள்ளாமலும் இருக்கும் பொழுது, அப்படிப்பட்ட இப்பூமி முழுவதும் மனிதர்களுக்காகவே படைக்கப்பட்டதென்று நாம் எப்படிச் சொல்லலாம்?

ஃ

அவ்விடங்களிலெல்லாம் நாம் வாசம் பண்ணமற் போனபோதிலும், அவ்விடங்கள் முழுதும் வாசம் பண்ணப் பட்டிருக்கின்றன. அவ்விடங்கள் நமக்கு அவசியமில்லாமற் போன போதிலும், ஈச்வரனால் சிருஷ்டிக்கப்பட்ட கோடானுகோடி பிராணிகளுக்கு அவசியமாயிருக்கின்றன. கடவுளால் படைக்கப்பட்ட அநேகமாயிரம் காட்டு மிருகங்களுக்கும் வாசஸ்தானம் வேண்டுமல்லவா? சில ஆப்பிரிக்கா கண்டத்துக் கொடிய காந்தாரங்களில் வசிக்கின்றன. சில பருவதப் பிராந்தங்களில் வசிக்கின்றன. சில ஆசியாக் கண்டத்துக் காடுகளில் வாழுகின்றன. சில உத்தர மகா சமுத்திரத்தை யடுத்த பனி பூமிகளில் வசிக்கின்றன. இவற்றையெல்லாம் சேர்த்துப் பார்த்தாலும், இம்மனிதர்களாலும் மிருகங்களாலும் வசிக்கப்படாத இடங்கள் இப்பூமியில் பின்னும் விசேஷமா யிருக்கின்றன. அவ்விடங்களிலும் அநேகமாயிரம் ஜீவன்கள் வசிக்கின்றன; அவை பூச்சிகளாம்.

ஃ

ஈ—தேனீ—வண்டு—குளவி முதலிய பூச்சிகளைப் பற்றி உங்களுக்குத் தெரியுமன்றோ? அவற்றையும் கடவுள் ஆதரவோடு போஷிக்கின்றார். நம்மைப் போலவே அவையும் சுகம் அனுபவித்துக்கொண்டு வாழவேண்டுமென்று கருதியே பகவான் படைத்திருக்கின்றார். அவைகளுக்கும் வீடுகளுண்டு; குடும்பங்களுமுண்டு. நம்முடைய பெற்றோர் நமக்குவேண்டிய உணவு தேடுவதுபோலவே, அவையும் அவற்றின் குஞ்சு குட்டிகளுக்கு

மனம் படியப் பெறுவதற்குச் செய்யும் அப்பியாசத்திற்கே "படிப்பு" என்று பெயராம்.

உணவு தேட வழியுடையவையா யிருக்கின்றன. அவையும் வீடு கட்டிக் கொள்கின்றன. கஷ்ட காலம் வருமெனக் கண்டு முன்னதாகவே அதற்குவேண்டிய பொருள் தேடிக் கொள்கின்றன. நம்முடைய சிறுவர்களைப் போலவே அவை ஒன்றுக்கொன்று நேசிக்கின்றன; கலகப் பட்டுச் சண்டை போடுகின்றன. ஆயினும் அவை நம்மைப் பார்க்கிலும் மிகச் சிறியவையாயும், துர்ப்பலமானவைகளாயு மிருப்பதால், நாம் அவற்றை அதிகமாய் அலக்ஷியம் செய்து, அவை காலின் கீழே கிடந்தாலும் மிதித்துக்கொண்டு நடந்து போகிறோம். அவற்றினிடத்திலுள்ள பெருமைகளை அறிந்திருந்தால் அப்படிச் செய்யத் துணியோமல்லவா?

ஃ

உதாரணமாக, வண்டைப்பற்றி விசாரிப்போம். அதன் நிறம் அனைவரும் பார்த்து அதிசயிக்கும்படி எத்தனை பளபளப்பாயிருக்கின்றது? அதன் வயிற்றுப் புறமாய்த் திருப்பிப் பார்ப்போமானால், அங்கு அது வெகு சிறந்த கவசமொன்று அணிந்து கொண்டிருக்கிற தென்பது தெளிவாய்த் தெரியவரும். அது சாதாரணமாய்ப் பார்வைக்கு நீல நிறமாய்த் தீசைபோலவே தோற்றினும், மேற்புறத்துத் தோலைப் பார்க்கிலும் மிகவும் சிறந்தது. அதன் கால்களைப் போலச் சிறந்த கால் நம்முள் எவர்க்குமில்லை. அப்படி அதற்கு ஆறுகால்களுண்டு. அவற்றோடு முன்புறத்தில் மிக்க பலமுள்ளதாகிய மீசைகளிருக்கின்றன. கால்களிருந்தாலும் அது பறக்கவும் கூடும். இவ்விரண்டு சாமர்த்தியமும் உள்ளதாயிருப்பதால், நம்மைப் பார்க்கிலும் அதற்கு உதவி அதிகம். அதன் கண்கள் மிகவும் அற்புதமானவை. பூதக்கண்ணாடியைக் கொண்டு பார்த்தாலன்றி அவற்றிலுள்ள அதிசயங்கள் நமக்குப் புலப்படா. அதற்குச் சாதாரணமாயுள்ள கண்களே யன்றி தலையின் பின்புறத்திலும் மிகச் சிறிய கண்களுண்டு. முதலில் இந்தப் பூச்சி ஒரு சிறு புழுவாயிருக்கும். கால் மிகவும் குட்டையாதலால், அப்போது நடக்க மாட்டாது. விலாப்புறத்தால் இழுத்துக்கொண்டு மெல்ல மெல்ல நகரும். மிகவும் இருண்ட இடமான மரப்பொந்தில் மரத்தையே புசித்துக் கொண்டு இதுவரையில் வசித்திருந்த இவ்வண்டு இப்பொழுது எப்படிப் பட்டதாயிருக்கிறது பாருங்கள்.

ஃ

வண்டுகளுள் பல வகையுண்டு. ஒரு ஜாதி வண்டுக்குத் தன்னைச் சத்துரு ஒன்றும் எதிர்க்கக் கூடாமல் காத்துக் கொள்ளத்தக்க ஒரு வகை விசித்திரமான போர்கருவி இருக்கின்றது. தன்னை எதிர்த்து வரும் வண்டுகள் அருகாமையில் வருமளவும் இந்தச் சிறுவண்டு காத்திருந்து, அண்டையில் வந்தவுடனே அது பயந்தோடிப்போம்படி அதன் மூஞ்சியில் துப்பாக்கியால் சுடுவதுபோலச்சுடும். அந்தச் சுடும் கருவி எப்படிப்பட்ட தெனில், அந்த வண்டின் வயிற்றுக்

சிறந்த கல்வி கேள்விகளும், நீதி நல்லொழுக்கங்களும், மற்றும் பல பெருங்குணங்களும், உதாரபுத்தியும் உடையவர்களாய் விளங்கும்படி நமது சிறுமிகளை நாம் பயிற்றுவிக்கவேண்டும். வீட்டில் சிறுமிகளிடம் வேலை வாங்கப்படுகிறதே தவிர போதிய கவனிப்பில்லை. படாசாலையின் சங்கதியோ பெரிய பெண்ணானவுடன் நின்றுபோய்விடுகிறது. இது உள்நிலை. வெளியிலோ பெண் கல்வியைப்பற்றி விஸ்தாரமான வாய்ப்பந்தல்கள்.

ளுள் ஒருவகைத் திரவப்பொருளோடு கூடிய பை ஒன்று இருக்கிறது. சுடும்போது அது வெடித்துச் சிறிது சத்தமும் புகையுமாய் வெளி வரும். அப்படிச் சுடும்போது அந்த வண்டை நாம் நமதுகையில் வைத்துக்கொண்டிருப்போமானுல், அது வெடித்து வருகிற ஆவியால் நம்முடைய கை கறுத்துப்போக நாம் காண்போம்.

ஃ

ஆயினும், அப்படி அது சுடுவதனுல் நமக்கு யாதொரு கெடுதியுமுண்டாகாது. அந்தத் துப்பாக்கி வெடியோசை கேட்டவுடனே பெரிய வண்டு மிகவும் பயந்து தான் நீட்டிய மீசைகளை அப்படியே பின்னுக்கு வாங்கிக்கொள்ளும். அந்தப் பெரிய வண்டுக்கு இவ்விதமான துப்பாக்கிகள் கிடையாவாதலால், தன் சத்துரு செய்கிற செய்கை இன்னதென்று தெரியாமல், அது அப்படியே பயந்து போகின்றது. அந்தப் பயம் தெளிந்து அது மறுபடியும் எதிர்க்க முயலுவதற்கு முன்னமே சிறுவண்டு வெகுதூரம் ஓடிப் போய்விடும்.

ஃ

மற்றொரு வகை வண்டுகளின் செய்கையைக் கேட்டால் பின்னும் வெகு விசித்திரமாயிருக்கும். அந்த வண்டைப் புதைவண்டு என்கிருர்கள். ஏனெனில், அது பறவை, தவளை, எலி, உணவு இவைகளையெல்லாம் பூமிக்குள் கொண்டு போய்ப் புதைத்து வைப்பதனுல், அதற்கு அந்தப் பெயர் வழங்குகின்றது. இதனுல் அந்த வண்டு மிகப் பெரியதோ எனில், அப்படியில்லை. அது ஒரே அங்குலம் தான் நீண்டிருக்கும். எவ்வளவு நாழிகையானுலும் விடாமுயற்சியுடன் உழைக்கும் திறமையுடைத்தாயிருப்பதால் அது அவ்வளவு பெரிய ஜந்துக்களையும் பூமிக்குள் கொண்டுபோய்ப் புதைத்து வைக்கின்றது. தன் கஷ்டகாலத்தில் உணவு குறைவில்லாமல் வேண்டுமென்றே அது இவ்விதமாக ஜந்துக்களைக் கொண்டுபோய்ப் புதைத்து வைக்கின்றது. இப்படி ஆஸ்தியாகக் கொண்டு சேர்த்த பொருள்களின்மேலேயே பெண் வண்டு முட்டையிடுகிறதாதலால், அம்முட்டைகளெல்லாம் புழுவானவுடனே, அந்தப் புழுக்களுக்கு உணவுக்குக் குறைவென்ன?

ஃ

இந்த வண்டுகள் தரை சிறிதும் தோண்டக்கூடாமல் மிகவும் கெட்டியான ஓரிடத்தில் செத்த பறவை ஒன்று விழுந்திருக்கக் கண்டால், தரை சுலபமாய்த் தோண்டக்கூடிய மற்றோரிடத்திற்கு அந்தப் பிணத்தை இழுத்துக்கொண்டுபோம்! கொண்டு போனபின்பு ஆண்வண்டு அதைப் புதைக்கும்படி பள்ளம் வெட்ட ஆரம்பித்து, அந்தப் பூச்சி இருக்குமிடத்திற்கு அரையங்குலம் அப்பால் அதைச் சுற்றிப் பள்ளம் கல்லும். (தோண்டும்.) பின்பு அப்படியே கொஞ்சம் கொஞ்சமாய் அந்தப் பிணத்தின் கீழுள்ள மண்ணையெல்லாம் அறுத்து அப்புறப்படுத்தி

பிறரது வீட்டில் விருந்தினராய்த் தங்கச் செல்வோர் அந்த வீட்டினரைவிட அதிக அந்தஸ்துள்ளவர்களாகக் காண்பித்துக் கொள்வதே அதிகம். உண்மையாகவே அந்தஸ்துள்ளவர்கள் எவ்வளவோ தாழ்மையுடன் நடந்து கொள்கின்றனர்.

அதைத் திடீரென்று பள்ளத்தில் தள்ளிவிடும். அவ்வண்ணம் மூன்று மணிநேரம் வேலை செய்து, பின்பு அந்த வண்டு வெளியே வந்து ஒரு மணி நேரம் சும்மா இளைப்பாறியிருக்கும்.

ஃ

இளைப்பாறின பிறகு அந்தப் பள்ளம் அப்பறவை புதையப் போதுமா, போதாதாவென்று அதன் இறகைப்பிடித்து இழுத்துப் பரீக்ஷை பார்க்கும். போதாதெனத் தோன்றினால், அந்தப் பள்ளத்தைப் பின்னும் ஆழமாகக் கல்ல ஆரம்பிக்கும். மூன்றுமணிநேரம் வேலை செய்ததானல், மறுபடியும் வெளியே வந்து செத்த பிணம்போலச் சிறிதும் அசையாமல் ஒருமணி நேரம் அயர்ந்திருக்கும். திரும்பியும்போய் வேலை செய்யும். அந்தப் பள்ளம் அது புதையப் போதுமானதென்று மனதிற்குத் திருப்தியாய்ப்போன பிறகு, அந்தப் பறவையை இப்புறமும் அப்புறமும் இழுத்துப்பார்த்து, மத்தியில் செம்மையாய்ப் பொருத்தி, அதன்மேல் மண்ணைத் தள்ளிப் புதைத்துக் கெட்டி செய்துவிடும். இதெல்லாமாயின பிறகு, அந்தப் பறவையின்மேல் மூடிய மண்ணில் ஒரு சிறு வளை தோண்டிக்கொண்டு, அதில் அந்த வண்டு தன் பெண்டாட்டியோடு(!) கூடச் சந்தோஷமாக வசித்திருக்கும். பெண் வண்டு முட்டையிட்டவுடனே அம்முட்டைகளை அப்படியே விட்டுவிட்டு அவை இதேவிதமாகவே உணவு தேடிப் பிழைக்க மற்றோரிடத்திற்குப் போய் விடும். தன் குழந்தைக்கென்று இந்த வண்டு ஆஸ்தி சேர்த்து வைத்துப் போவது வெகு! அற்புதம்!

ஃ

இந்த வண்டினுடைய கதை எவ்வளவு விசித்திரமா யிருக்கின்றது! இது வாஸ்தவமாக நடக்கின்ற செய்தியே. இவ்வளவு வேலையும் இந்த வண்டு தன் தலையாலேயேதான் செய்து முடிக்கும். பள்ளம் தோண்டுவதற்கும், அதில் பறவை எலி தவளை முதலியவைகளைக் கொண்டுபோய்ப் புதைப்பதற்கும் இந்த வண்டுக்கு முக்கியமாயுள்ள கருவி தலையொன்றுதான். இவ்வாறு செத்துப்போன பறவைகளைப் பூமிக்குள் புதைத்து விட்டு அவற்றின் துர்க்கந்தம் வெளிவர வொட்டாமற் செய்து நமது சுகாதாரத்தைக் காப்பாற்றுகிற நிமித்தம் நாம் இவற்றினிடத்தில் மிக்க பிரீதி யுடையவர்களாயிருக்கக் கடவோம். வருஷா வருஷம் எத்தனை ஆயிரம் கோடி ஜீவன்கள் இப்பூமியில் இறக்கின்றன? ஆயினும், நாம் வெளிகளில் ஸஞ்சரிக்கும்பொழுது பார்க்க அருவருப்பாயாவது, துர்கந்தம் வீசிக்கொண்டாவது ஒரு செத்த ஜீவனவது நம்முடைய கண்ணுக்குப் புலப்படுகிறதா? இல்லை. இப்படி இப்பூமியைச் சுத்தி செய்து நமக்கு நன்மை விளைவிப்பதற்காக நாம் இவற்றினிடத்தில் மிகவும் நன்றி யுடையவராக வேண்டும்.

தமிழ் எழுத்துக்களைப் பாலர்களுக்குப் போதிக்கும் சிறு புஸ்தகத்துக்கு அதன் ஆசிரியர் "நூலாதாரம்" என்று பெயரிட்டது பெரிதும் வியப்பே. பின்னிட்டு வாசிக்கப்புகும் நூல்களுக்கு வேண்டிய அறிவையும் அக்ஷர ஞானத்தையும் இச்சிறுநூல் புகட்டுவதால், நூல்களுக்கெல்லாம் இச்சிறுநூல் ஆதாரமாயிற்றுபோலும். நூலாதாரத்தைப் பாடசாலையில் படித்தவர்களுக்கு இப்பொழுது ஐம்பது வயதிருக்கலாம்!

வானத்தில் ஸஞ்சாரம்.

ஆகாய விமானத்திலேறிக் கொண்டு பூமியிலிருந்து ஏறக்குறைய 6000-அடி உயரத்துக்குமேல் ஆகாயத்தில் 46-மைல் தூரம் ஸஞ்சரித்த ஒருவர் பின்வருமாறு கூறுகிறார். அவ்வுயரத்திலிருந்து தூரதிருஷ்டிக் கண்ணாடியின் மூலமாயப் பார்க்கும் பொழுது தரையிலுள்ள பெரிய நகரங்களெல்லாம் சிறுபுள்ளிகள்போலக் காணப்பட்டனவாம். விமானத்திலிருந்து இறங்கும்பொழுது அதைக் கண்டு காக்கை முதலிய பறவைகள் மிகவும் பயந்து அப்புறம் ஓடிப்போகின்றனவாம். மேகமண்டலத்திற்கு மேல் வானத்தில் செல்லும்பொழுது சிறிதும் சந்தடியில்லாமல் நிச்சப்தமாயிருக்கிறதாம். அவ்விடத்தில் சிறிய கடியாரம் அடிக்கின்ற டிக் டிக் என்ற சத்தங்கூடத் தெளிவாய் காதுக்குக் கேட்கின்றதாம். ஒரு சிறு துரும்பை அசைத்தாலுங்கூட ஓசை திடுக்கிடும்படியா யிருக்குமாம். அங்கே ஒரு நிமிஷத்துக்கு ஒரு மைல் வீதம் அதிவேகமாய் யாத்திரை செய்யும்போதும், இருந்த இடம்விட்டு அசைவதாகக்கூடச் சிறிதும் தோன்றவில்லையாம். பூமியிலிருப்பதைவிட ஆகாயத்திலிருப்பது அதிக இன்பமாயிருக்கிறதாம். ஆனால் உயரப் போகப்போக மனிதர் சுவாசிக்கக் கூடிய வாயுமுற்றிலும் நீங்கிவிடுகிறதென்றும், ஊருக்குச் செல்பவன் கட்டுச்சாதம் கொண்டுபோவதுபோல், தான் சுவாசிக்கவேண்டிய வாயுவையும்கூடக் கொண்டு சொல்லவேண்டியிருக்கிறதென்றும் கூறுகிறார்.

கோபங்கொண்ட நண்பர்.

ஒருவருக்குத் தன் நண்பரின்மீது மிக்க கோபம். அந்த நண்பர் இருக்கும் ஊருக்குச் செல்ல நேர்ந்தபோது அந்த நண்பரிடம் தான் கோபமாயிருப்பதாகக் காண்பித்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணினர். நேராக நண்பரின் வீட்டுக்கே சென்றார். நண்பர் தெருத்திண்ணையில் உட்கார்ந்திருந்ததைக் கண்டும் பேசாமல் மடமடவென்று வீட்டிற்குட் சென்றார். அங்கிருந்த நண்பரின் மனைவியிடம் தனக்குப் பசிக்கிறதென்றுகூற, அந்த அம்மையும் அன்போடு அன்னம் பரிமாறப் புசித்துக்கொண்டிருந்தார். வெளியிலிருந்த நண்பர் தன்னுடன் பேசாமல் கோபமாய் உட்சென்ற நேசர் என்ன செய்கிருரென்று அறிய உள்ளே வந்தார். தனது நேசர் புசித்துக்கொண்டிருப்பதையும், தமது மனைவி அவருக்கு உபசரித்தவாறிருப்பதையும் நோக்கி மிக்க ஆநந்தத்துடன், என் மீது கோபமானாலும், என் மனைவிமீது கோபமில்லாமல் பாத்தியதையுடன் உள்ளே வந்து கேட்டுப் புசிப்பது காண எனக்கு வெகு பரவசமா யிருக்கிறதென்று கூறிவெளித் திண்ணைக்குச்சென்றார். நேசரும் புசித்துவிட்டு எழுந்துவந்து, வயிற்றுக்குள் சாதம் போனதும் பழய கோபம் பறந்துவிட்டதென்று கூறி நண்பரைத் தழுவிக்கொண்டார். அதற்கு நண்பர் எவ்வளவு கோபமானாலும், மனத்துள் ஆழ்ந்த அன்பு இருந்தால் பிரிகிறதென்பது ஒருபோதும் முடியவே முடியாது; ரயிலிலிருந்து நேராக என் இல்லத்திற்கு வந்து வலியக் கேட்டுப் புசித்தது அன்பின் பலவகையான இன்சுவைகளிலே ஒன்றாகும் என்றார். நட்பின் ருசி அனுபவித்தவர்கட்கே விளங்கும். நட்பு என்பது குறித்த ஒரு சிலர் மீதே (சில காலம்?) தோன்றுவதாம்.

திருப்பதி பிரார்த்தனை.

அம்பத்தூர் ஸ்டேஷனுக்கடுத்த திருமுல்லைவாயில் என்ற கிராமத்தில், திருவேங்கட நாய்க்கர் என்பவர் வசித்துவந்தார். அவருடைய மனைவியின் நாமதேயம் தில்லைநாயகி அம்மாள். இவர்களுக்குத் திருமணம் முடிந்து பத்து வருஷங்கள் ஆயிற்றெனினும், ஒரு செல்வக் குழவி யில்லாக் குறையி லாழ்ந்திருந்தனர். திருவேங்கட நாய்க்கரின் பெற்றோர்கள், தன் குமாரனுக்குப் புத்திர சந்தானம் உண்டாகவில்லையே என்று விசனமுற்றிருந்தனர். இப்படி யிருக்கையில் ஒருநாள் சனிக்கிழமைதினம் வீதியில், கோவிந்தா! கோவிந்தா!! என்று வெள்ளிக் கம்பியில் தாள் குத்திக்கொண்டும், கையில் துளசி தட்டை ஏந்திக்கொண்டும் திருப்பதிக்குப் போகிறவர்கள் ஊர் சுற்றிக்கொண்டு வந்து கொண்டிருந்தனர். அதைப் பார்த்த திருவேங்கட நாயக்கர் அங்கிருப்பவரைப் பார்த்து, இதென்ன? இவர்கள் இப்படிப் போகிறார்கள்? இதன் விவரமென்ன? என்று கேட்டார். அதற்கு அவர் இது திருவேங்கடத்தான் பிரார்த்தனை; நமக்குள் குறைகள் ஏதாகிலும் இருந்தால் பிரார்த்தனை செய்துகொண்டு இப்படித்தான் ஏழுமலைக்குப் போகிற வழக்கம் என்றார். இதைக் கேட்டதும், நால்வரும் தங்களுக்குள் ஒவ்வொரு பிரார்த்தனைகள் செய்து கொண்டார்கள்.

ஃ

அவைகள் என்னவெனில், நாய்ககரின் தகப்பனார், கோவிந்தா! என் மைந்தனுக்கு ஒரு மகவு அனுக்கிரஹிக்க வேணும். சுவாமி நான் உடனே மஞ்சள் உடுத்தி, தாள்குத்தி, ஊர் சுற்றிக்கொண்டு உன் சன்னதிக்கு வருகிறேனென்று சொல்லிக் கொண்டார். திருவேங்கட நாய்க்கரின் தாயாரோ, என் அப்பனே! ஏழுமலையானே! என் பிள்ளை வயிற்றில் ஒரு பூவோ பிஞ்சோ காய்த்ததானால் நான் உன் திருமலைக்கு வந்து, ஒரு செம்பு நிறைய வெள்ளிக் காசுகளை உன் உண்டியில் போடுகிறேனென்று பிரார்த்தித்துக்கொண்டாள். பிறகு திருவேங்கடம் ஓ! வெங்கடேசப் பெருமாளே! எனக்கு பிள்ளை கலிதீர்த்தால், பிள்ளையைப்போல் தங்கத்தால் செய்து உன் திருவடியில் சமர்ப்பிக்கிறேனென்று பக்தி வினயத்துடன் வேண்டிக் கொண்டார். தில்லைநாயகி அம்மாள் செய்து கொண்ட பிரார்த்தனையோ வெகு அற்புதமானது; அதையும் சொல்லுகிறேன் அவசரப்படாமல் கேளுங்கள். ஓ! கோவிந்தப் பெருமாளே! என் மலடு நீங்க ஒரு பிள்ளை பிறந்தால், உன்னுடைய தேர்க்காலில்

சிறுமிகளின் மூளைக்கு வாழ்க்கையின் ரகசிய விஷயங்கள் போய்ச் சேர்ந்து நிரம்பும் அவ்வளவு வேகத்தில் சிறுவர்களின் மூளையில் பாய சந்தர்ப்பங்கள் ஏற்படுவதில்லை. சிறுமியிடம் தாயைப்போல், சிறுவனிடம் தந்தை அந்தரங்கமான வற்றில் கலந்து பேசி நடந்து கொள்வதுமில்லை.

போட்டுவிடுகிறேனென்று சொல்லிக் கொண்டாள்.

ஃ

இப்படியும் ஒரு பிரார்த்தனை உண்டோ என்று உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கும். ஆனால் தில்லை நாயகி பின்னால் வருவதைக் கவனிக்காமல், தற்போது அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் தன்னை மலடி என்ற வசைச் சொல் நீங்கினால் போதுமென்று வெகு அவசரமாய்ப் பிரார்த்தனை செய்து கொண்டாள். இவர்கள் ஒருவர் செய்துகொண்டது ஒருவருக்குத் தெரியாமல் மனதிலேயே வைத்துக் கொண்டார்கள். பார்த்தார் பெருமாள்! ஆஹா! இதென்ன? அவர்கள் மூவர் பிரார்த்தனைகள் செய்யத் தகுந்ததே. பிள்ளை பெற்றுக்கொள்பவள் சொன்னதைப் போல் செய்கிறாளா பார்க்கலாமென்று அதே மாதத்தில் குறி நின்று பத்து மாதம் சென்று ஒரு சற்புத்திரனைப் பெறும்படி அனுக்கிரகம் செய்தார். அக்குழவியோ கோடி சூர்யப் பிரகாசமாயிருந்தது. வெங்கடேசன் என்ற நாமகரணம் சூட்டினார்கள். புரோகிதரை அழைத்துவந்து ஜாதக முதலியன கணித்தார்கள். வெகு சம்பிரமமாக லட்டு வழங்கினார்கள். தானதர்மம் முதலியன செய்து, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள்.

ஃ

மூவர் செய்த பிரார்த்தனைகளையும் மறந்துவிட்டனர். தில்லைநாயகம் தன் பிரார்த்தனையை நினைப்பாள். பிள்ளையைப் பார்ப்பாள். ஐயோ! என் மூடத்தனம் என்னே! என் அழகிய குழந்தையை எப்படித் தேர்க்காலில் போடுவேன் என்று துக்கிப்பாள்; பிறகு ஹூம் நாம் சொல்லிக் கொண்டது யாருக்குத் தெரியப்போகிறது. பார்த்துக் கொள்ளலாம் என்று சிறிது தைரியமடைவாள். இப்படி யிருக்கையில், வருடம் ஐந்து சென்றன. ஒருநாள் அந்தக் குழந்தைக்குத் திடீரென்று வயிற்றுநோய் வந்து, துடிதுடித்து அழுகிறான். பெரிய பெரிய டாக்டர்களைத் தருவித்துப் பார்த்தார்கள். நோய் தீர்ந்தபாடில்லை; மந்திரம், தந்திரங்கள் செய்து பார்த்தார்கள்; அதிலும் தீரவில்லை. குழந்தை அழுவதைப் பார்த்து மனந் தாளாமல் பெற்றோர்களும் அழுகிறார்கள். வீட்டில் ஒரே குழப்பமாய்விட்டது. தள்ளாத ஒருகிழவர் திடுதிடென்று உள்ளே வந்தார். என்ன இங்கேகுழப்பம்என்று கேட்க, பையன் வயிற்று வலியால் துடிக்கிறானென, எங்கே நான் பார்க்கட்டும் என்றார். பிள்ளையைத் தூக்கி வந்து காண்பித்தனர். பிறகு பெரியவர், திருமலைப் பிரார்த்தனை ஏதாவது உண்டா என்று கேட்டார். அப்போது அம்மாளுக்கு அடிவயிற்றில் பக்கென்றது. மற்ற மூவரும் ஆமாம்! ஆமாம்! ஆமாம்! மறந்தே போய் விட்டோம் என்று தங்கள் பிரார்த்தனைகளை வாய் விட்டுச் சொல்லி, ஏழு மலையானே! நாங்கள் அப்படியே செய்து விடுகிறோம் பிள்ளையின் பாதையைத் தீர்த்து விட வேணும் சுவாமி என்று கப்பணம் கட்டினார்கள். உடனே நோய் பட்டென்று நின்றுவிட்டது. கிழச்சாமியார் மாயமாய் மறைந்து விட்டார். தில்லை நாயகம். அப்போதும் தன்

நேரில் ஆகிற காரியம் கடிதங்கள் மூலம் ஆவதில்லை. கடிதங்களின் மூலம் ஆகிற காரியம் நேரிற் செல்லின் நடப்பதில்லை. இது அந்தந்த இடங்களுக்குத் தகுந்தாற் போலாம்.

பிரார்த்தனையை வெளியில் சொன்னால் வெட்கக்கேடு என்று சொல்லவில்லை.

ஃ

புரட்டாசி மாதம் பிறந்ததும் திருமலைக்குப் போக ஏற்பாடு செய்தார் திருவேங்கடநாய்க்கர். இதைக் கண்ட தில்லைநாயகம், இப்போது உற்சவ காலமாகையால் அதிக கலாட்டாவாயிருக்கும். வருகிறமாதம் போகலாம் என்றாள். குழந்தை பட்டபாடென்ன; திருவேங்கடத்தானே நாம் மறந்து விட்ட பிரார்த்தனைகளை கவனப்படுத்தி விட்டு மாயமாய் மறைந்தாரே: இன்னுமா தாமதிக்கிறது—என்று அடுத்த சனிக்கிழமை தளிகை போட்டு ஊர் சுற்றிக் கொண்டு, அவரவர் பிரார்த்தனைக்கு வேண்டியவைகளை எடுத்துக் கொண்டு, கோவிந்தா! கோவிந்தா!! என்று திருமலைக்குப் புறப்பட்டு விட்டனர். மறுநாளைக்கு ரத உற்சவமாகையால் அது கழிந்த பிறகு மலைமேல் போகலாமென்று மனதில் நினைத்து தில்லை நாயகம் இன்றைக்கு மலை ஏறவேண்டாம், 2-நாள் பொறுத்து ஏறலாம், எனக்கு மாதவிடாய் வருகிற நாளென்று தடுத்தாள். இதைக்கேட்ட நாய்க்கர் இவ்வளவு தூரம் வந்தும் ரத உற்சவம் பார்க்காமலா போவது? கூடாது இன்றே போகலாம் வாருங்களென்று மலை ஏறி விட்டனர். மறுநாள் காலை பையனுக்கு முடிகொடுத்து, செய்யவேண்டிய பிரார்த்தனைகளையும் செய்து விட்டு, ரதம் ஓடும் வீதியண்டை போனார்கள்.

ஃ

தில்லைநாயகத்திற்கு அடிவயிற்றில் நெருப்பு கொட்டி விட்டதுபோல் தவிக்கிறாள். குழந்தையை யாரிடத்திலும் கொடுக்காமல் தன்னிடுப்பிலேயே இடுக்கி வைத்துக் கொண்டும் பார்ப்பதும் பெருமூச்சு விடுவதுமாயிருந்தாள். உடனே போதும் பார்த்தது வாருங்கள் கீழ் திருப்பதிக்குப் போய் விடலாம் என்றாள். என்ன இவ்வளவு அவசரப்படுகிறாய் சாவதானமாய் போகலாமே, என்று கடிந்துரைத்தார். இப்படி பேசிக் கொண்டிருக்கையில். ஸ்ரீநிவாசப் பெருமாள் கவனித்தார்; அம்மாள் பிரார்த்தனை இன்னும் வெளிவரவில்லை. இன்னும் சோதிக்கலாமென்று கடகடவென்று வந்து கொண்டிருந்த ரதம், இவர்கள் நின்றிருந்த இடத்திற்கு வந்ததும் பட்டென்று நின்று விடச் செய்தார். ஆயக்கால் போட்டார்கள் என்னென்னமே செய்து பார்த்தார்கள். தேர் கடுகளவும் நகரவில்லை.

ஃ

என்னமோ குற்றம் குறையிருக்கிறதென்று கோயில் தர்மகர்த்தா, அங்கிருந்தவர்களையெல்லாம். பிரார்த்தனை யாராகிலும் செய்யாமல் விட்டு விட்டீர்களா என்ன? என்று ஒவ்வொருவராய்க் கேட்டுக்கொண்டு வரும்போது, தில்லைநாயகம் பகவானை நினைத்து உருகுகிறாள். எல்லாரும் எங்கள் பிரார்த்தனை முடிந்தது முடிந்தது என்றார்கள். அப்போதும் தில்லை நாயகம் மௌனமாயிருந்து விட்டாள். பிறகு ஒருவர்மேல் திருமலையான் பிரசன்னமாய் வந்து, கோவிந்தா! கோவிந்தா!! என்று குதிக்கிறார். ஜனங்கள் எல்லாரும் சுவாமி வந்து விட்டார் என்று ஆரவாரித்தனர், யாவரையும் நீக்கி ஒருவர் முன் வந்து, கோவிந்தா! தேர் ஏன் நின்று விட்டது, எங்களுக்கு தெரியச் சொல்லும் சுவாமி என்று இறைஞ்சி கேட்டனர். அப்போது சுவாமி தில்லைநாயகத்தைச் சுட்டிக்

காட்டி, இந்தம்மாள் தனக்கு பிள்ளை பிறந்தால் தேர்க்காலில் போடுவதாய் பிரார்த்தனை செய்து கொண்டாளடா அதை ஏண்டா செய்யவில்லை, தேர் காலில் பிள்ளையைப் போட்டால் தாண்டா தேர் நகரும், என்று சொல்லி விட்டு சுவாமி மலை யேறி விட்டது.

ஃ

இதைக்கேட்ட அனைவரும் ஆஹா! ஹா!! என்று ஆரவாரித்தனர். இப்படியும் ஒரு பிரார்த்தனை உண்டோ என்பார் சிலர். சொல்லத் தெரிந்ததே, செய்யத் தெரிய வில்லையா என்பார் சிலர். இப்படி குழப்பமாயிருக்கையில், போடு பிள்ளையை என்கிறார் கோவிலார். என் செய்வாள் பாபம் பிள்ளையைப் பார்க்கிறாள் அழுகிறாள். பிறகு ஏழு மலையான் பேரில் பாரத்தைப் போட்டு, நான் குழந்தையைப் பிரிந்து உயிர் வாழமாட்டேன். என் உயிர் முந்தி போகவேண்டும் என்று இவள் சக்கரத்தின் கீழ் முதலில் படுத்துக் கொண்டு, பிள்ளையைத் தனக்குப் பக்கத்தில் படுக்கவைத்தாள். பார்த்தார் திருவேங்கட நாய்க்கர்! என் பெண் சாதி பிள்ளைபோன பிறகு இல்வுலகில் நானிருந்தென்ன, என்று குழந்தை பக்கத்தில் படுத்துக்கொண்டார். பிறகு கிழவனும் கிழவியும், அவர்கள்போய்நாங்கள்என்னத்துக்கு என்று அவர்களும் படுத்துக்கொண்டார்கள். இவர்களை வேண்டாமென யார் தடுத்தும் கேட்கவில்லை இழுங்கள் ரதத்தை என்றனர் ஜனங்கள். ஆஹா! இது என்ன ஆச்சரியம்! என்று கண் சிமிட்டாமல் நோக்குகின்றனர். பார்த்தார் திருமலைபிரான். ஆஹா! இதென்ன ஒரு குழந்தைக்காக நால்வரும் உயிர் விடச சித்தமாயிருக்கின்றார்களே! போகட்டும் என்று மனமிரங்கி யாருக்கும் ஒரு தீங்கும் நேரிடாவண்ணம் அனுக்கிரஹம் செய்தார். ரதம் தாண்டி விட்டது. குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது. ஆனால் அந்தப் பிரார்த்தனை பொய்யாகாதபடி பிள்ளையின் முதுகில் சக்கரத்தின் அடையாளம் சூடு போட்டது போல் பட்டையாயிருந்தது. யாவரும் சந்தோஷமாய்க் கோவிந்தனைத் துதித்துக் கொண்டாடிக்கொண்டு புறப்பட்டு வீடுபோய்ச் சேர்ந்தனர். சுபம்.

R D. கோமளவல்லி அம்மாள்.

1881—ம்வூ டிசம்பர்மீ 31–ம்வ காலை 7 மணிக்கு சென்னைப் பக்கத்தில் பூகம்பம் உண்டாகி மூன்று நிமிஷநேரம் வரை நீடித்திருந்ததாம். மேஜை நாறகாலி முதலிய வீட்டுச்சாமான்களும், ஸ்தம்பங்களும் கதவுகளும் கலகலவென்று ஆடினவாம். நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தவர்கள் முதலில் தம்முடம்பு ஆடும்போது தன்மை ஆராவது விளையாட்டாய் ஆட்டுகிறார்களோவென்று ஆச்சரியப்பட்டு, எழுந்தோடி வீட்டிலுள்ள மற்றவர்களைக் கேட்க, அவர்கள் தம்முடம்பும் அவ்விதமே நடுக்கமுற்றதெனச் சொல்லக் கேட்டுத்தெருவிலே போய்ப்பார்க்க, அங்கும் இப்படியே பல பேர் அவரவர் வீட்டினின்றும் ஓடிவந்து தாம் கண்ட அதிசயத்தைச் சொல்ல, ஒருவர்க்கொருவர்பேசி வியப்புற்றார்களாம். பழய வீடுகளும் சுவர்களும் பல இடிந்து விழுந்தனவாம். சில மேலமாடங்களில் சுவர்கள் வெடிப்புற்றனவாம் மேஜைகள் மேலிருந்த கண்ணாடிபுட்டி முதலியவை ஆடி ஒன்றோடொன்று இடித்து விழுந்தனவாம். இங்கு நாம் கூறியிருப்பது ஒரு பழய பத்திரிகையின் விவரிப்பாகும்.

வீட்டு போஜனத்தின் சுகம்

வீட்டில் எனக்குப் பரிமாறப்படும் போஜனம் ஏதோ இலவசமாய்ப் புண்ணியத்துக்குக் கிடைப்பதாகவே எண்ணுகிறேன். காலை வேளையில் பசி தீர என்னருகே வைக்கப்படும் சிற்றுண்டிகளைப் பார்க்கும்போது என் வாயில் ஜலம் ஊறுகின்றது. மிக்க ஆவலுடனும் பசியுடனும் உண்ணத் தொடங்குகின்றேன். யாரப்பா இந்தக் காலை வேளையில் சுடச்சுட இவ்வளவு பிரியமாய் வைக்கப்போகிறவர்கள்? எவ்வளவு தின்றாலும் மேலும் மேலும் கொண்டுவந்து வைத்துத் தொந்தரை செய்ய சொந்த மனுஷர்கள் இருப்பது பாக்கியமல்லவா?

மத்தியானவேளைப் புசிப்போ காலைப் புசிப்பைவிட இன்னும் அதிகமான பசியுடன் கூடியது. இலை எப்போது போடப்படுமோ என்று காத்திருந்து ஆவலுடனும் புசிக்கச் செய்கின்றது. சாதமும் குழம்பும் காய்கறிகளும் எவ்வளவோ ருசியுடன் இருக்கின்றன. இன்னும் கொஞ்சம் என்று அளவுக்குமேல் வைத்து உபசரிக்கும்போது மகத்தான திருப்தியுடனே உண்டு எழுந்திருக்கிறேன்.

பின்பு மாலைச் சிற்றுண்டியும் இரவு போஜனமும் களைத்து விழுந்தவனைத் தூக்கி நிறுத்துவதுபோல் புதிய பலனும் சிரமபரிகாரமும் தருகின்றன. இத்தனை வேளைகளுக்கும் ஆகாரம் கிடைப்பதைப் பெரிய அதிர்ஷ்டமாகவும விலையின்றிக் கிடைப்பதாகவும் எண்ணுகிறேனே தவிர, நான் உழைத்துத் தேடிவந்த பணத்துக்கு நடப்பதாக எண்ணவேயில்லை. பணம் இருந்துவிட்டால் மட்டும் போதுமா? சமைக்க, அன்புடன் உண்பிக்க மனுஷ்ய சகாயமும் கடவுளின் ஆசியும் வேண்டாமா?

மூங்கிலின் உபயோகம்.

மூங்கில் உஷ்ண தேசத்துப்பயிர். தரையிலே வணங்கிப் படர்கின்ற புல்லைப்போலவே உள்ளே குழலாகி, இடையிடையே கணுச்சுளுடன்நீண்டு கூர்மையான இலைகள் உள்ளது. மூங்கில் புல் ஜாதியைச் சேர்ந்தது. அதைப் பெரிய புல்மரம் எனலாம். ஒரு மூங்கிலிலிருந்து ஆயிரம் பதினாயிரம் கம்பிகள் உற்பத்தியாகும். முதலில் ஒரு மூங்கிலிருந்த இடம் சில நாளையில் ஒரு பெரிய புதராகிவிடும். போல் மூங்கில் நன்றாய்ப் பருத்து அதிக உயரம் வளரும். கெட்டி மூங்கில் அத்தனை பருமனும் பருப்பதில்லை. அவ்வளவு உயரமும் உயர்வதில்லை. தென் அமெரிக்காவில் சோளம், கரும்பு இவைகளுக்கு இரண்டாவதாக மூங்கிற் பயிரைக் கருதுவர்.

மூங்கிற் புதர் குரங்குகளுக்கு சவுக்கியமான வாசஸ்தானம். மூங்கிற் குருத்து குரங்குகளுக்கு இனிப்பான ஆகாரம். முற்றிய மூங்கிற் கணுக்கள், யானை மத்தகம் முதலிய இடங்களில் முத்துக்கள் அகப்படுமென்பது முன்னோர் மொழி. சீனு ஜப்பான் தேசங்களில் பெரிய மூங்கிலைத் துணுக்குகளாக்கி ஜலபாத்திரமாயும், அளக்கும் படிகளாகவும் செய்துகொள்வர். சீன தேசத்தார் மூங்கிற் குருத்தினின்றும் ஒருவகையான மெல்லிய காகிதம் செய்வர்.

மூங்கிலிலைக்குக் குடற்குலை, வயிற்று வலி, ரத்தப்பிடிப்பு முதலிய நோய்கள் நீங்கும். மூங்கிலரிசி பாயஸம் பலகாரம் முதலியவை செய்வதற்கு உபயோகமாகும்; ரத்தபித்த ரோகம், விபரீத சுரம், நேத்திர நோய் இவைகளை நீக்கும்.

இல்வாழ்வில் மகளிரின் பணிவு.

(224-ம் பக்கத் தொடர்ச்சி.)

எவ்வளவு வேலையிலும் கொஞ்சம் ஒழிவு காலம் தேடிக்கொண்டு சற்று நேரம் மனோ நிம்மதியாயிருக்க வேண்டும். களைப்பு தீர்ந்தால் முன்னிலும் இரட்டிப்பான சக்தி உண்டாகும். ஒழிவு காலமென்பது நாமே ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமேயன்றி. அது சுறுசுறுப்புள்ள நம்மைத்தேடிவராது.

ஃ

ஒழிவு கால மில்லா விட்டால், தேகத்தில் சிரமமுண்டாவதோடு சரீரத்தில் சோம்பலும் குடிகொள்ளும். அலுப்பினால் சிடுசிடுப்பும் கோபமும் அதிகரிக்கும். ஒவ்வொன்றுக்கும் பிரத்தியேக காலங்களை ஏற்படுத்தி விடுவோமானால், ஒரு வேலையில் சோம்பல் வருவதற்கு முன்னமே மற்றொரு வேலைக்குப் போய் விடுவோம். அதனால் எல்லாம் குறைவின்றி நடக்கும். பார்ப்பவருக்கும் அதிக அழகாயிருக்கும். நமக்கும் சந்தோஷமும் சரீரசுகமும் தரும். நீங்கள் தையல் வேலையிம் தேறியிருப்பது அவசியமானது. ஹார்மோனியப்பெட்டியை விட, ஒரு தையல் யந்திரம் உங்களிடம் கட்டாயம் இருக்கவேண்டும். அதில் நீங்கள் தேர்ந்திருப்பது குடும்பத்திற்கு ஒரு லாபவழி. ஒழிவு காலத்தில் அயல்வீடுகட்குச்சென்றால், அங்கு அதிக நேரமிருப்பது உயர்ந்த குடும்ப ஸ்திரீகளுக்கு மரியாதையாயிராது. எத்தனை ஆப்த சிநேகிதையாயிருந்தாலும் ஒரு நாளைக்கு ஒரு தடவைக்குமேல் அங்கு போகக் கூடாது. அங்கு ஒருமணி இரண்டு மணிக்கு மேலிருப்பதும் அழகல்ல.

ஃ

சிநேகிதைகளிடத்தில் பேசும்பொழுதும் நல்ல விஷயங்களைப் பேசுவது மாத்திரம் முக்கியமல்ல. அதிலும் முக்கியமானது மற்றொன்றுண்டு அஃதென்னெனில், எது வரையில் வெளியில்மட்டும் பேசலாமோ, அதுவரையிலுந்தான் பேசவேண்டும். உங்கள் மனதிலுள்ளவற்றை யெல்லாம் வெளியிடக்கூடாது. உங்கள் பர்த்தாவின், நோய், பலஹீனம், லாபம், நஷ்டம், சயன விஷயம், மற்றும் பல அந்தரங்கங்கள், கடன் இவை போன்ற எதையும் முடி வைத்து விடுவதே குடும்ப கௌரவமாகும். இதை மீறி நடந்தால் உங்களுக்கு சங்கடங்கள் வந்து நேரிடும். பல்லியைப்போல் சுவற்றில் ஒட்டிக்கொண்டு 'ஒட்டு' கேட்கும் துஷ்டைகளும் துராத்மாக்களும் சிலருண்டு. நீங்கள் சொல்லும்போது அவற்றை அவர்கள் கேட்டு மனதில் வைத்

வஞ்சித்த துரோகி தன் செயல் மறந்திருப்பார்களெனக் கருதி மறுபடியும் குலாவ வருகிறான். ஆனால், அவனை நம்பிப் புண்பட்டவர்களோ அவன் உறவைவிடப் பகையே மேலெனவும், அவ்விதம் பகைத்திருந்தால் தான் அவன் நெருங்காமலிருப்பானெனவும் எண்ணிவிடுகிறார்கள்.

திருந்து, சமயம் வாய்த்தபோது சொல்லுதற்கரிதான தீமைகளைச் செய்வார்கள். ஆகையால், இந்த விஷயத்தில் அதிக ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டும்.

ஃ

ஒழிவு காலத்தில் புத்தியில்லாத ஸ்திரீகள் மிதமிஞ்சி அதிக துரிதமாய் ஊர்வம்புகளைப்பேசத் தொடங்கி, தங்கள் சொற்போக்குக்கு வசப்பட்டவர்களாகி வாயில் வந்ததைப்பேசிவிட்டு, பேசின வார்த்தைகள்முன்பின் பொருந்தும்படி விஷயதோரணைகாட்டஉள்ளதை ஒளித்தும் இல்லதை வருவித்தும் பேசி, கடைசியில், தாங்கள் உண்மையை விட்டு விலகி இத்தனைதூரம் ஓடிவந்தோமென்பதையும் உணரவல்லமையற்றவராகின்றனர். முக்கியமாய், அயலாரது குடும்ப ரகசியங்களையறியப் பிரயத்தனப்பட்டு, அவைகளைப் பொய்யாகவோ மெய்யாகவோ அறிந்துகொண்டு, அவற்றுடன் இன்னும் அநேக பொய்களைக் கலந்து, இதரருடன் தூஷிபமாயும் நிஷ்டூரமாயும் பேசுவார்கள். இப்படி ஊராரின் குடும்பங்களைப்பற்றி வாயில் வந்தபடி பிதற்றுவது கொடியதாகும். இவ்விஷயம் அற்பமானதன்று. ஒரு தரம் இறைத்துவிட்ட பேச்சை மீண்டும் பொறுக்கி எடுக்கக் கூடுமோ? வாய்விட்டுப் பேசிய பேச்சு மறுபடியும் நமக்கு ஸ்வாதீனமாகாது. மேலும், பேசுகிறவர்களுக்கும் பேச்சின் கொடுமையும் தெரிவதில்லை. கூரியவாள்போல் மனதை அறுக்கத்தக்க சொற்கள் அநேகமுண்டு. ஆயுள் உள்ளவரையிலும் ஒருவருக்கு மாறாத மனவருத்தமுண்டாகும்படியான சொற்களும் அநேகம் உள. பேச்சிலேயே பிரீதியுடையோர் பகையாளிகளாகின்றனர். அவர்களின் யோக்கிதையும் அயோக்கியதையாகின்றது. குடும்பங்களும் கலகப்பட்டுச் சின்னாபின்னமாகின்றனர். ஆலோசனையின்றி வீணாகப் பிதற்றும் வம்பளப்புப்பேச்சுகளானாலும், அவைகளால் விளையும் தீங்கு மாத்திரம் மட்டானதென்று. ஆதலின், இத்தகைய கூட்டங்களில் சேராமல் ஒழிவுகாலத்தை நல் விஷயத்தில் பயன்படுத்தவேண்டும்.

ஃ

வரவுக்குள் அடங்கி வாழ்வதும், ஒரு பணமாவது மிச்சப்படும்படியாகச் செட்டும் சிக்கனமுமாக நடப்பதும் யாவற்றிலும் பெரிய விஷயமாகும். நோன்பு விரதங்களை அநுசரித்தல், தெய்வபக்தி முதலியவைகளும் சிறந்தோங்கவேண்டும், எவரையும்மனஸ்பூர்வமாய்உபசரித்தலான நற்குணம் எல்லா மேன்மையும் உண்டுபண்ணும். பகவத் சரித்திரங்களிலும் புராணேதிகாசங்களிலும் பிரீதிகொள்ளவேண்டும். இதுகாறும் கூறிய விஷயங்களைப்பெண்மணிகள் மனதில் பதியவைத்துப்பணிவுடன் நடப்பார்களானால், ஸ்வர்க்கத்திலும் மேலான இல்வாழ்க்கைச்சுகம் கிடைக்குமென்பதற்குச் சந்தேக மில்லை. குடித்தனத்தில் பழகியே யாவும் கற்றுக்கொள்ளவேண்டும்.

முற்றிற்று.

அந்தியகாலத்தில் விரோதம் தேடிக்கொண்டு தனியே கிடந்து நைவார் சிலர். அவர்களிடம் அகப்பட்டது பறிக்க இன்சொல் இயம்பிச் சூழ்ந்திருப்பார் பலர். அன்னோரையே உண்மையான மனிதர்களாகக்கொண்டு மயங்குவோர் இவர்! ஒருவரை யொருவர் ஏமாற்றவே உலகம் முயல்கின்றது.

பெண்ணும் புண்ணும்.

(176-ம் பக்கத் தொடர்ச்சி.)

16. இல்லின்கண் போந்தே இனிய் வகை செய்வாள் நற்பெண்ணே
போல்லாது பேசி புலன்கெட் டிருப்பவள் புண்ணே.

17. வாயிற் படியகலா வம்பளக்கா வாழ்பவள் நற் பெண்ணே
நாயினுங் கேடாகி நாலுபேர் கண்ணிருப்பாள் புண்ணே.

18. கடைத்தலையி லாடவர்கள் காண இருக்காதாள் நற் பெண்ணே
அடக்கமிலா தேவெளியு லாவி அலைபவள் புண்ணே.

19. வாழ்மனைப் பண்டத்தை மாற்றிப் பணமோளியாள் நற்பெண்ணே
பாழ்பட யாவையும் விற்றே பலதின்பாள் புண்ணே.

20. அன்னைபோல் அன்பாய் அருந்துணை யானவள் நற்பெண்ணே
என்ன புகலினும் ஏறுமாறாய் நிற்பவள் புண்ணே.

21. உண்ணுகிற காலை யுபசரித்துண் பிப்பவள் நற்பெண்ணே
எண்ணிற் கலகத்தால் உண்ணு தெழச்செய்வாள் புண்ணே.

22. கஞ்சி குடிப்பினுங் கன்னல் மொழிதுவள் நற்பெண்ணே
மிஞ்சிய வாழ்வினும் நஞ்சே மொழிதுவள் புண்ணே.

23. செட்டுக் குடித்தனத்தில் செய்து வருபவள் நற்பெண்ணே
வட்டியில் மூழ்கி வகைகெட வைப்பவள் புண்ணே.

24. வரவுக்கு ளான வகைசெலவு செய்பவள் நற்பெண்ணே
தருவ தெல்லாம் போக்கித் தயங்கிக் கிடப்பவள் புண்ணே.

25. எத்தனை கோஞ்சமும் ஏற்றதே என்பவள் நற்பெண்ணே
அத்தனை வாழ்வை அசட்டைகள் செய்பவள் புண்ணே.

26. வீடும் பல போருளும் வித்தரித்து வாழ்பவள் நற்பெண்ணே
கேடும் பகையுங் கடனும் தருபவள் புண்ணே.

27. பர்த்தாவே தெய்வமென்று பார்ப்பவள் நற்பெண்ணே
கர்த்தாவே இந்தக் கசடனுக்கேன் யானேன்பாள் புண்ணே.

28: துன்பமே செய்யினும் தன்கணவன் போற்றுவள் நற்பெண்ணே
அன்புறுத லின்றி அயலில் பழிப்புரைப்பாள் புண்ணே.

29. கணவன் குறிப்பறிந்து கண்ணியமாய் வாழ்பவள் நற்பெண்ணே
தினமோரு சண்டைக்குச் சல்லடம் கட்டுபவள் புண்ணே.

மூங்கிலின் வேர் மெல்லியதா யிருக்கின்றதாயினும், மிகவும் உறுதி யானது. மூங்கிற் குருத்து பூமியினின்று கிளம்பும்போது மிகக் கூர்மை யான ஈட்டிபோலப் பூமியைப் பிளந்துகொண்டு புறப்படும்.

30. என்சொலினுந் தன்கணவன் ஏற்றதாக் கொள்ளுவாள் நற்பெண்ணே
நன்சொலினுங் குற்றமே நாயகன்பாற் நாட்டுவாள் புண்ணே.

31. துன்பம் வருகினும் தூமணியாய்த் தோன்றுபவள் நற்பெண்ணே
இன்பம் பெருகினும் இன்னலே செய்பவள் புண்ணே.

32. விருந்தோம்பி யில்லம் விளங்கிடச் செய்பவள் நற்பெண்ணே
பெருந்தொந்தி ஒன்றே பெரியதாய்க் கொள்பவள் புண்ணே.

33. வருவிருந்து காத்துநின்று வந்தவிருந் துண்பிப்பாள் நற்பெண்ணே
விருந்தும் உபசரிப்பும் வீணேவீண் என்பவள் புண்ணே

34. நன்மக்கள் தாயாகி நாடுபுகழ் தாங்குபவள் நற்பெண்ணே
புன்மக்கள் பெற்று புவிக்கோர் சுமையானாள் புண்ணே.

மு. துரைப் பிள்ளை.

உன்னைப்போல் நான் இருக்க முடியவில்லை.

உன் போக்கே ஒருவிதம்! எவருக்கும் நீ நலமே செய்கிறாய். உன்னை அலக்ஷியம் செய்தவர்களையும் நீ வாழ்த்துகிறாய். உன்னை அற்பனென்று கருதியவரிடத்திலும் நீ அன்பான எண்ணமே வைக்கிறாய். உன்னை விரோதித்தவர்க்கு உத்தியோகம் கிடைத்துவிட்டதெனக் கூறினால், ஒருகாசு சம்பளமாயினும் சரி வேலைக்குப்போவதே ஒழுங்கான தன்மையில சித்தத்தை உயர்த்துமென்று தத்துவம் பேசி வாழ்த்துகிறாயே தவிர, உன்னை விரோதித்தவருக்கு உத்தியோகம் வந்துவிட்டதா என்று பொறாமைப்படக் காணோம்! எவர் குற்றத்தையும் மன்னித்துவிட்டு எங்கோ சிறு நற்குணமிருப்பின் அதையே நீ எடுத்துக்கொண்டு அவருக்குப் பெரிய மதிப்பு தந்துவிடுகிறாய். ஒருவரைப் பற்றிய நீங்காத தன்மைகளை நீ கவனியாமல் அவரையும் நீ பெருமைப்படுத்திப்பேசி எங்கும் அன்பாகவே நடந்து கொள்கிறாய். எல்லோருக்கும் க்ஷேமத்தையும் நல்வாழ்மையுமே ஒண்ணுகிறாய். உன்னைப்போல நடக்க என்னால் முடியவில்லை. எனக்கு ஆத்திர சுபாவமே அதிகம். பிறர் குற்றத்தை மன்னித்தலோ மறத்தலோ எனக்கு முடியாது.

அழகிய வதனத்திலும், உயர்ந்த லக்ஷ்யத்திலுமே நமது விடுதலைப் பத்திரமிருக்கிறது.



என் காதலி கனகாங்கி.

நல்ல கோடைக் காலம்; வெய்யிலின் கொடுமை அதிகம்; மணியோ சுமார் மூன்றிருக்கலாம். நானிருந்த சிற்றூர் அனலிடை யிருப்பதற்கொப்பத் தோன்றிற்று. தெருக்களில் போக்கு வரவு அரிது. ஊருக்குக் கீழ்ப்புறத்தில் நீண்ட மலைத் தொடர். மேற்குத் திசையிலோ, பரந்த வெளி நிலம். அதன் பின்னே சிறிய குன்றுகள். மலைத் தொடரும் குன்றுகளும் வெய்யிலின் கொடுமையை அந்நேரத்தில் மிகைப்படுத்தின. என் வீட்டிற்குக் கிழக்கே அரை மைல் தூரத்தில் நங்நீர் ஆறு ஒன்று மலைத் தொடரின் மருங்கிலே சலசல வென்று பாறைகளைத் தழுவிச் சென்றுகொண்டிருந்தது.

ஃ

வெம்மையைத் தணிக்க அத்தண்ணீர் அருகிற் சென்றேன். என்னைத்தவிர வேறு பிராணியை அங்குக் கண்டேனில்லை. ஆற்றின் சப்தமன்றி வேறெவ்வொலியும் அங்கு எனக்குக் கேட்கவில்லை. ஆற்று நீரை உற்று நோக்கினேன். நீரின் அழகு என் கண்களைக் கவர்ந்தது. ஆற்றின் கரையோரமே அங்நீரின் ஓட்டத்தைப் பின்பற்றி மெல்ல நடங்தேன். எதிரே நீண்டு வளர்ந்த ஒரு பாறையைச்சுற்றி நீர் சென்றது. அப்பாறையைத் தாண்ட அதன்மீதேறினேன். அதன் பக்கலில் துல்லிய நீரில் தூயதோர் பெண்ணுருவைக் கண்டேன். சிந்தை அழிந்தேன்.

ஃ

அம்மடமங்கை தன்னந்தனியே தீம்புனலாடிக் கொண்டிருந்தாள். துணியும் மணியும் பாறைமீதிருந்தன. மேலாடையின்றி நீரிற்றுள்ளி விளையாடிய அத்தூய நற்பாவை சட்டென்று ஒரு கணத்தில் என்னைக் கண்டுவிட்டாள். கீச்சென்று ஒரு கூச்சற்போட்டு தண்ணீரில் மறைந்தாள். உடனே தலையை மேலே தூக்கி, தன் உடலை மறைத்துக் கொண்டு, நடப்பதும் நீந்துவதுமாகச் சென்று, அடுத்திருந்த பாறையின் பின்னே மறைந்துகொண்டாள். அப்பாறையோ தன்னைக் கடந்துசெல்லக் கூடா வண்ணம் அமைந்திருந்தது. எங்ஙனமாயினும் அவ்விள நங்கை வெளியில் வந்தே தீரவேண்டுமென்ற

சிலருடைய அன்பற்ற தன்மையைத் தெரிந்துகொள்ளும்போது வருத்தப்படுவதற்குப் பதிலாக, ஐயோ! அன்பின் சுவையைப் பருகுவதற்கு இவர்களுக்குப் பிராப்தமில்லையேயென்று துக்கிக்கும்படியாகிறது. அத்துடன் விரோதமில்லாதிருக்க அதிக ஜாக்கிரதையுடன் நடக்க வேண்டியதாயுமிருக்கிறது.

திடங் கொண்டு அப்பாறையி னருகே உட்கார்ந்துகொண்டேன்.

ஃ

சில நாழிகைகள் கடந்தன. கரிய கூந்தலடர்ந்த தன் தலையை அக் காரிகை மெல்ல நீட்டி என்னை நோக்கினுள். ஆத்திரக்குரலுடன் "போம் ஐயா தூரம்!" என்று அதட்டிச் சொன்னுள். நான் வாய் திறவாது அங்கேயே நின்றேன். "உமக்கிது அழகில்லை" எனக் கூறி அம் மாதரசி பாறையின்கண் மறைந்து விட்டாள்.

ஃ

இன்னுஞ் சில நாழிகைகள் ஆயின. மெல்ல மெல்ல மஞ்சுநிறக் குஞ்சும், பிறை நுதலும், வாள் விழியும் ஒவ்வொன்ருகத் தோன்றின. புருவம் நெற்றியிலேற கடுஞ் சினங் கொண்டு "நீர் அங்கிருக்குமட்டும் இவ்விடத்தை விட்டு விலகேன்" என்று பகர்ந்தாள் அப்பெண். அவள் மொழிந்த மொழியில் பதிந்துகிடந்த உறுதியை என் மனத்தே உன்னினேன். அவ்விடத்தை விட்டுப் பெயர்ந்தேன். நெஞ்சம் அவள்பால் செல்ல, கொஞ்சம் திரும்பிப் பார்த்தேன். போதிய தொலைவில் நான் சென்றதை யறிந்த அம்மான்விழியாள் தன் மறைவிடம் விட்டுவெளிப் போந்து பாறையின் மீதிருந்த தன் ஆடையாபரணங்களை அழகுக் கழகு செய்வாள்போல் அணிந்துகொண்டிருந்தாள்.

ஃ

ஒரு பொழுது போயிற்று. அடுத்த நாள் நான் மீண்டும் அத்தனித்த விடத்தில், அவ்வெய்யில் வேளையிற் சென்றேன். அவ்வாரணங்கு துணையேதுமின்றி, இவ்வமயம் வெற்றுடம்போடில்லாது, வெள்ளைக் கலையுடுத்தி அப்பளிங்கு போன்ற நீரில் பாங்காய் விளையாடிக்கொண்டிருந்தாள். பார்த்துவிட்டாள் என்னை! ஒரு புன்னகை புரிந்தாள்! பின் தன்னழகிய வெண்பற்கள் எல்லாம் தோன்ற ஒரு சிரிப்புசிரித்தாள். ஒரு யுவதியின் புன்னகை நம்மை வெறுக்கவில்லையென்று காட்டும் முக்கிய அடையாளமன்ருே? நானும் என் சிரிப்பையுணர்த்தினேன். பிறகு பேசத் தொடங்கினேம்.

ஃ

ஒரு வாரம் கடந்தது. இருவரும் இணை பிரியாக் காதலரானேம்.

"இப்பாறையும் புனலும் நமக்குப் பழையன. நீர் இன்றிரவு என் இல்லத்திற்கு எழுந்தருள வேண்டும்" என்று கூறினுள் ஒருநாள் அக்கூர் மதியாள். "வேண்டாம் உன்னை வளர்த்துவரும் அவ்வுத்தமன் நம்மைக் கண்டுவிட்டால் என் செய்வது?" என்று மறுத்தேன். "நீர் வராதொழியின் என் வாழ்வும் ஒழியும்" என்று பிணங்கித் தன் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். "உன் விருப்பத்துக் கிணங்கினேன்" என்றேன். புன்முறுவல் செய்து, இன்முகங் காட்டி, முன்னே நடந்தாள்.

ஃ

"அவன் சொன்னதை நீ நம்பாதே. அவன் இருவரையும் பிரிக்கப் பார்ப்பதற்காக உனக்கு மிகவும் வேண்டியவன்போல் பேசுகிருன். வெகு உண்மையுள்ளவன்போல் தன்னைக் காட்டிக்கொள்கிருன். அதில் நீ ஏமாறி விடாதே."

நாழிகை நாற்பதிருக்கும். உள் முற்றத்தில், தண்ணிலவில், தென்னற் காற்றில், பஞ்சணையில், அத் தேன்மொழியாள் என்னோடு கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்தாள். புறத்தே ஒலியொன்று கேட்டது. "படுக்கையின் பக்கலில் பதுங்கியிருங்கள் இதோ வருகிறேன்" என்று பகர்ந்தாள் அப் பண்புடைப் பாவை. அவள் சொற்படிச்செய்தேன். ஏதோ வொன்றை எடுத்துவந்து படுக்கையில் மறைத்து, கடுகச் சென்று கதவைத் திறந்தாள். தன்னை வளர்க்கும் தந்தை வந்தான். "என் சீமான் கொடுத்த சீட்டை எடுத்துச்செல்ல மறந்துவிட்டேன்" என்று சொல்லிக்கொண்டே தலையணையின் கீழிருந்த தாளொன்றைக் கையிற்பற்றி, "குழந்தாய் நீ பத்திரமாயிரு" என்று பகர்ந்து வெளியே ஏகினன். மறைவிடம் நீங்கி மற்றிடம் வந்தேன். அம்மங்கை என் மருங்கே வந்து அமர்ந்தாள். "கண்ணே! அக்கானவன் என்னைக் கண்டிருந்தால் என் கதி என்ன?" என்று வினவினேன். "உமக்கொரு தீங்கு உற்றதாயின் உடனே என்னின்னுயிர் உம்மிணைபடிகளில் சேர்ந்திருக்குமன்றோ!" என்று பகர்ந்து, படுக்கைமீதிருந்த போர்வையை நீக்கி மின்னுங் கத்தியொன்றை என் கண்முன்னே காட்டினாள் என் காதலி கனகாங்கி. அக்கத்தி எதற்கென்றேன். உமக்குத் துன்பம் என் தந்தையால் நேருமாயின், அக்கணமே என்றன் ஆவியைப்போக்கிக்கொள்ள என்றாள் அக்கிளிமொழியாள். இதை மறைந்து நின்று கேட்ட அக்கட்டழகியின் தந்தை எங்கள்முன் தோன்றவே இருவரும் பிரமித்துவிட்டோம். 'சரி சரி, காதல் உள்ளம் நன்கு பொருந்திற்று. நான் காதலரைப் பிரிக்கும் கசடனல்லேன். கடிமணம் புணர்ந்து காதல் வளர்த்து இல்லறநெறியில் இனிது வீற்றிருந்திடுக' என்று வாழ்த்தினர் அவர். பின்னர் எங்கள் திருமணமும் கூடியது. நாங்கள் இருவரும் களித்துக் கூடினோம். கண்டதுங் கொண்ட காதலின் முடிவு இது.

ரா. தேசிகன், புதுவை.

பிறர் பிழை பொறுத்தல்.

அற்ப விஷயத்தைச் சிலர் பிரமாதப்படுத்துகையிலும், ஒருவனது உள்ளத்து ஆசைக்குப் பங்கம் வருகையிலும், மிக்க கேடுகெட்ட விதமாய்ச் சிலர் நடந்துகொள்ளுகையிலும், திடுக்கிடத்தக்கதான ஒரு கொடிய அலக்ஷியத்தை ஒருவன் காட்டுகையிலும் எத்தகையோருக்கும் சித்தம் குழம்பிப் போய்விடும். சிலர் வெறுக்கத்தக்க விதமாய் அன்பிலிருந்தும் விலகிவர். எவ்வளவோ பிரீதிமிகுந்து பேசிக் குலாவியவன் திடீரென்று பகைத்து தூரப்போய் வேற்று மனிதனாகிவிடுகிறான். இவ்விததருணங்களில் மனம் பொறுத்துச் சகித்தலே—பெரிய சாமர்த்தியமாகும். பிறரை மன்னிப்பதற்குத் தக்கவாறு தேவகுணமும் மிகுதிப்படும்.

வருத்தத்தில் பயிலுதல்.

இப்பூலோகவாழ்வென்பது பெரும்பாலும் மலைமேலேறிச் செய்யும் சண்டைபோலாம். அதில் வருத்தமின்றி வெல்வதென்பது சாத்தியமில்லை கஷ்டம் இல்லாவிடில் காரியசித்தியில்லை. வருந்தி அலைந்து பெறத்தக்க பயன் ஏதும் இல்லாவிடில், அருந்தொழில் ஒன்றும் இராது. கஷ்டமானது மனவலியற்றவர்களுக்குத் திகில் உண்டாக்கினாலும் உண்டாக்கும். மனவுறுதியும் வீரியமும் உள்ளவர்களுக்கோ முயற்சி செய்யத் தூண்டுகோலாகும். இடையூறு எவ்வளவு நேரினும் கவனியார். மனிதர்களுடைய விர்த்திக்கு இடையூறாக நேரும் பிரதிபந்தங்களைப் பெரும்பாலும் நெறி திறம்பா நல்லொழுக்கத்தாலும், உண்மையான ஆஸ்தையாலும், பிரவிர்த்தியாலும், கடைப்பிடியாலும், எல்லாவற்றிலும் மேலாய்க் கஷ்டத்தை மேற்கொண்டு துன்பத்திற்கு அஞ்சாமல் ஆண்மையோடு எதிர்த்து நிற்கும் திடசித்தத்தோடுங்கூடிய சங்கற்பத்தினாலும் வெல்லலாகுமென உலகத்தில் காணும் அனுபவங்கள்யாவும் தெளிவாய் விளக்கும்.

ஃ

கஷ்டத்தில் உழல்வதாகிய பாடசாலையானது ஒருவனைப்போல ஊரார்ருக்கெல்லாம் உலக நீதிகளைப் பயிற்றும் உத்தம பாடசாலையாம். கஷ்டத்தின் வரலாறாவது இதுவரையில் மனிதர் சாதித்த அருந்தொழில், பெருந்தொழில், நற்றொழில் இவைகளின் வரலாறே தவிர, மற்றொன்றுமல்ல. சீதளம் அதிகரித்த வடதேசத்தார்க்கு அங்குள்ள நீரின் இயற்கையும் நிலத்தின் இயற்கையும் எவ்வளவும் சுகமேயல்ல அவை வேளைக்கு ஒரு கோலமாக மாறக்கூடும். ஆதியில் அத்தேசத்து நிலம், பயிர் பச்சை ஒன்றும் முளைக்காத பாழ் நிலமாயிருந்தது. அத்தகைய நிலத்தை விளையும்படி செய்து அவர்கள் சுகம் பெறுவதற்கு எத்தனை பாடுபட்டு வருந்தியிருப்பார்களோ? இது சொல்வது அரிது.

ஃ

கஷ்டம் உள்ள இடம் தோறும் ஜெயித்தாலும் தோற்றாலும், அவனவன் தானே வருந்தி வெளிவரவேண்டும். ஒருவன் கஷ்டத்திற்குச் சலிக்காமல் எதிர் நின்று போராடுவானால், அவனது பலமும் சக்தியும் நன்றாய்ப் பண்படும். புத்தி சாமர்த்தியமும் நன்றாய்ச் சிக்ஷிக்கப்பட்டு விர்த்திகொள்ளும். விரைந்து மலையேறப் பயில்வோனுக்கு எளிதில் ஓட வல்லமை யுண்டாவதுபோல், கஷ்டத்துக்குப் பின்வாங்காதிருப்பவனுக்குப் பின்பு முயற்சிசெய்ய மனதில் உற்சாகம் பிறக்கும். சித்தி பெறச் செல்லும் மார்க்கம் மலையேறறம் போலச் செங்குத்தாயிருந்தாலும் இருக்கும். அதன் சிகரம் சேர மனங்கொணடு எறுவோன் தன் மன

பேதித்த புத்திக்கு எவ்வளவு பேதிமருந்து தந்தாலும் குணம் கொடுக்காது—திருந்தாது.

வலிமை முழுவதும் செலுத்தி மூச்சுப்பிடித்து ஏறவேண்டும். நேரும் தடைகளெல்லாம் கைகலந்து மல்லாடியே நிவிர்த்திசெய்யத் தக்கவையாகுமென்றும், அச்சம்விட்டு அந்த மல்லாட்டத்தைப் பிடித்து எதிர்த்தால் அது பிறகு பட்டுப்போலக் கைக்கு மிருதுவா யிருக்குமென்றும், எடுத்த காரியத்தை முடிக்காது விடுவதில்லையென்னும் மன வுறுதியே கருதித் தொடங்கிய கருமத்தை முடிக்க எவ்வளவும் தவறாத பெருந் துணையாகு மென்றும் இவைகளை எவனும் அனுபவத்தால் விரைவில் அறிந்து கொள்வான். இவ்வாறே, கஷ்டத்தை வெல்லும் சித்த நிர்ணயத்திற்கு எதிரில் எவ்வகைக் கஷ்டங்களும் வலிய நிலை குலைந்து ஒதுங்கிவிடும். திற்கு ஈடாகும். சாத்தியப் எனும் கழனிக்கு வேலி வளைந்து, ஒன்றையும் செய்யவும் எத்தனிக்கவும் விடாமல் தடுப்பவைகள் பெரும்பாலும் வீரியமின்மையும் மனத்தளர்வும், முணுமுணென்று சொல்லும் முள்ளுக்குச் சமானமாகிய சந்தேகங்களுமேயாம். முன்பின் பாராமல் உடனே அதனோடு விடாமல் மல்லாடவேண்டும். விடாமுயற்சிக்கு எதுவும் எளிதாகும். மேலுமேலும் எத்தனிக்க வலிமையும் வீரமும் உண்டாகும். இவ்வாறே புத்தியையும் நெறியையும் பூர்த்தியாய்த் திருத்திக் களை தெளியப் பண்படுத்தினால், அவை இவ்வகைச் சிக்ஷை இல்லாதவர்களுக்குக் கிடைத்தற்கரிய சிறப்போடும் தீரத்தோடும் சுதந்தரத்தோடும் இயலவல்லவைகளாம்.

ஃ

தொழில் செய்ய முயல்வோமானால் மெத்தவும் சாதிக்கலாம். எத்தனிக்கிற வரையில், தான் சாதிக்கக் கூடியது இன்னதென்பது எவர்க்கும் தெரியாது. ஒரு தொழிலைச் செய்யும்படி நிர்ப்பந்தமாய் நேருகிற வரையில் ஒருவரும் ஒன்றும் செய்ய முயல்வதில்லை. மனவுறுதி யழிந்த வாலிபன் ஒருவன் "நான் இன்னின்ன காரியங்களைச் செய்ய மாட்டுவேனானல்" என்று சொல்லிப் பெருமூச்சுவிடுவான். விருப்பம் மாத்திரம் இருந்தாலும் ஒன்றும் முடியாது. விருப்பம் முதிர்ந்து, மனவுறுதியாகி, அது எத்தனமாய்க் கனியவேண்டும். மனவலிமையோடு எத்தனிக்கும் ஒரு எத்தனம் ஆயிரம் விருப்பத்திற்கு ஈடாகும். (see right column start)

ஃ

நாம் கற்றறிந்து கொள்ளும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கஷ்டத்தை வெல்ல வல்லதாம். முதலில் ஒன்றை வெல்வோமானால், அதனாலாய வெற்றி மற்றவைகளை வெல்லத் துணையாகும். வழங்கா தொழிந்த பாஷை முதலியவைகளையும், கணித நூலைச் சேர்ந்த ரேகை கோணம் இவைகளின் சம்பந்த முதலியவைகளையும் கற்பது மேற்பார்வையில் அத்தனை உபயோகமானவைகளல்லவெனத் தோன்றினும், தோன்றுமாயினும், ஆழ்ந்து பார்க்குமளவில், அவை மிகவும் உபயோகமானவைகளெனத் தெளிவாகும். ஆயின், அவைகளுக்கு விசேஷமாய் அருமை உண்டாவது அத்தனையும் அவைகளால் அறியப்

அவர்களின் கடிதங்களோ விசுவாசப் பிரியத்துடனும் மயக்குகின்றன. அவர்களின் நடவடிக்கைகளோ முற்றிலும் சுயநலமாய் அகப்பட்டதைக் கொள்ளை கொண்டுபோவதிலேயே கண்ணாய், விசுவாசங்கெட்ட தன்மையாயுள்ளன. நேரிலேயே வந்து நான் என்ன விசுவாசங்கெட்டவனா என்று எதிர்த்துப்பேசத் தொடங்குகிறார்கள்.

பெறும் அறிவினிமித்தமல்ல, அவைகள் நமக்குச் செய்விக்கும் நல்ல பயிற்சியின் நிமித்தமேயாம். இக் கல்விகளைக் கசடறக்கற்று வல்லமை உண்டானால், அது நமக்குள்ள முயலும் திறமையை வெளிப்படுத்திக் கருத்துச் செலுத்தும் திராணியைப் பண்படுத்தும். முயற்சி இல்லாவிடில் அந்தத் திராணி பயிற்சியின்றி வெளிவராதடக்கமாயிருந்து சுருங்கிவிடும். இவ்வாறே ஒன்று ஒன்றுக்கு வழிகாட்ட, அது மற்றொன்றுக்கு வழியாக, ஜீவன் உள்ளளவும் இந்தக் கிரமம் ஒழியாது நடந்தேறும். பிராணனும் பயிற்சியும் முடியும்பொழுதே கஷ்டத்தோடு கைகலந்து போராடும் போராட்டமும் முடியும். ஆனால், அதைரியத்துக்கு இடம் கொடுத்து வந்தவன் எவனும் கஷ்டத்தை ஒரு பொழுதும் வென்றதில்லை. கணித வித்தையின் மூலாதாரங்களைக் கற்றுத் தெளிய முயன்றும் தெளிவு பிறக்கவில்லை யென்று முறையிட்ட வித்தியார்த்தியைப் பார்த்து ஒருவர் "அப்பா, விடாமுயற்சியாய்ப் படித்துக் கொண்டுவா; வரவர அதனிடத்தில் அபிலாஷையும் ஊக்கமும் அதிகமாகும்" எனப் புத்தி புகட்டினார்.

அமெரிக்காவில் பிரசங்கம் செய்பவராயிருந்த ஹென்றிக்லே என்பவர் பின்வருமாறு கூறுகிறார்:— "நான் காரியசித்தி பெற்றதற்குக் காரணம், முக்கியமாய் ஒன்று; இருபத்தேழு வயது தொடங்கி வெகு வருஷகாலம் சரித்திர புஸ்தகம், சாஸ்திர புஸ்தகம் எதானாலும் சரி, நித்தமும் வாசித்து, அதன் உள்ளுறை பொருளைக் குறித்துப் பேசிக் கொண்டு வந்தேன். முற்சிந்தனையின்றி இம்முயற்சி செய்தது சில வேளை வயற் காட்டில், சில வேளை வனத்தில், பெரும்பாலும் வெகு தூரத்திலுள்ளயாதாயினும் ஒருகளஞ்சிய வீட்டிலாம். அங்கு என்பிரசங்கம் கேட்கு சபையார் அங்குள்ள குதிரைகளும் விருக்ஷங்களுமாம். வித்தை அனைத்தினும் அரிய இவ்வித்தையை இளமையில் அப்பியசித்து வந்ததனாலேயே, என்னை மேலுமேலும் முயற்சிசெய்யத் தூண்டி, எனது பிற்கால நிலையின் அமைதியைச் சாங்கோபாங்கமாய் உருப்படுத்துவதற்கு மூலாதாரமான முக்கிய ஏதுக்கள் எனக்கு உண்டாயின" என மொழிந்தார். ஆதலின், வருத்தத்தைச் சிந்திக்காமல் முயன்று பயிலுதல் வேண்டும்.

செயற்கையறிவு என்பது மனிதர்க்கு மாத்திரமேயல்ல. அததின் நிலைமைக் கேற்றபடி எல்லாப் பிராணிகளுக்கும் போதுமான அறிவு யுக்தி ஆலோசனைகளை கடவுள் இயற்கையாகவே அளித்திருப்பதோடுகூட, பழக்கினால் செயற்கை யறிவும் எல்லாப் பிராணிகளுக்கும் உண்டாகும்படி அனுக்கிரகித்திருக்கிறார். ஆராய்ந்து பார்க்கையில், இயற்கையறிவில் மன்னுயிர்களை விடப் பறவை விலங்கு முதலிய பிராணிகளே சிறந்திருக்கின்றன. ஆதலின் கடவுளால் படைக்கப்பட்ட இப்பிரபஞ்சத்திலுள்ள எப்பொருளையும் நாம் அற்பமென்று இகழாமல், அவ்வவற்றிலுள்ள அதிசயங்களைக் கண்டுகொண்டாடக்கடவோம்.

நியாயமான இரண்டணா கூலிக்குப் பதில் ஒருவன் மூன்றணா கேட்கும்போது அவனுடைய யோக்கியதையும் அத்துடனே வெளிப்படுகிறது.

நாகானந்தம்

(24-ம் பக்கத் தொடர்ச்சி.)

V

அதைக்கேட்ட கருடன் "ஆ! நான் என்ன செய்தேன்? மேருமலையிலும், மந்தர பர்வதத்தின் குகைகளிலும், மகேந்திராசலத்திலும், கைலாசமலையின் கற்களிலும், மலயமலையிலும், எல்லா திசைகளிலும் சாரணர்களால் பாடப்பட்ட கீர்த்தியையுடைய ஜீமூதவாகனனையா நான் கொன்றேன்! ஐயோ! நான் பெரிய பாதகத்துக்கு ஆளானேன். ஆ! கருணா நிதியாகிய இப்பெரியவன் என்னுடைய ஆகாரமாகிய பாம்புகளைக் காக்கும் பொருட்டுத் தன் சரீரத்தை எனக்குப் பலியாகக் கொடுத்தான். இவனைக் கொல்வதைவிட வேறு மாபாதகம் பூமியிலுண்டோ? இப்பாபத்துக்குத் தீயில் விழுந்து இறப்பதே ஏற்ற பிராயச்சித்தமாகும். சரி, அதோ யாரோ மூவர் கையில் நெருப்பையேந்தி இவ்விடத்தை நோக்கி வருகின்றனர்." என்றான்.

ஃ

சங்கசூடன் ஜீமூதவாகனனைப் பார்த்து "ஜீமூதவாகன! உன்னுடைய பெற்றோர்கள் உன்னைக் காண வருகின்றனர்." என்றனன். இராஜகுமாரன் "சங்கசூட! அப்படியானால் என்னுடலை நன்றாய்த் துணியால் மூடிவிடு. இல்லாவிடில் என் காயங்களைக் கண்டவுடனே என் அன்னை உயிர் துறப்பாள்." என்றுகூற, சங்கசூடன் அவனுடலைத் துணியால் போர்த்து விட்டான்.

ஃ

ஜீமூதவாகனனைக்கண்ட ஜீமூதகேது "நவமணியிலும் அரிய குணவணியாகிய என் கண்மணியே! தன்னைச் சேர்ந்தவனெனவும், அயலானெனவும் சிறிதும் பேதமின்றி, நம்மைப்போல் அயலோரைக் காப்போர் அநேகர் இருக்கின்றனரென்பதையும் நினைக்காமல், பாம்புகளைக் கருடனுடைய வாயிலிருந்து காப்பாற்றி நீ உயிர் துறக்கின்றாய். அதன் காரணமாக உன் பெற்றோர்களும், மனைவியும் இன்று இறக்கப் போவதால் இக்குலமே அழிந்து விட்டது." எனப் புலம்பினான்.

ஃ

அதைக்கேட்ட கருடன் "இவனே ஜீமூதவாகனனுடைய தகப்பனாயிருக்கவேண்டும். இக்கிழவி அவனுடைய தாய்போலும். கண்ணீர் விட்டழும் இவ்விள மங்கை அவனுடைய மனைவியாயிருக்கலாம். இவர்

"உதிரபித்தந் தீர்க்கு மோங்குசுரத் திற்கு மதிரவரு கண்ணோயதற்கும்—புதிதாகக் கஞ்சிசெய லாகுங் கருதிற் சிற்றுண்டியுமாஞ் செஞ்சிலம்பார் மூங்கி லரிசி."

களுடைய துக்கத்தைப் பார்த்தால் இங்கு என்னல் இருக்கவும் கூட வில்லை இச் சமுத்திரத்தில் வட வாக்னியில் விழுந்துப் பிராணனை விடுவதே நலம்.'' என நினைத்தான்.

ஃ

இவ்வாறு நினைத்த கருடன் ஜீமூதவாகனனை நோக்கி "நற்புத்தி வாய்ந்த பெரியவனே! இப்போது நான் செய்த மாபாதகத்திலிருந்து விடுபடும் வகையைத் தயவு செய்து எனக்குக் கூறவேண்டும்." எனக் கை கூப்பிக் கேட்டான்.

ஃ

ஜீமூதவாகனன் "நான் சொல் வதைக் கேள். இன்று முதல் ஒரு நாளும் ஜீவஹிம்ஸை செய்யாதே. இன்று வரையில் நீ செய்த ஜீவஹிம் ஸைக்காக அனுதாபப்படு. எல்லா பிராணிகளுக்கும் அபயம் தந்து புண்ணியத்தைச் சம்பாதிக்கும் வகை யைத்தேடு இக் கடலில் ஒரு உப்புத் துண்டை எறிவதால் அது எப்படி பயன் படாதோ, அப்படியே ஜீவ ஹிம்ஸை செய்பவனுடைய புண்ணிய மும் அவனுக்கு என்றைக்கும் பயன் படாமற் போகும்." என்றான்.

ஃ

கருடன் "அறியாமையாகிய படுக் கையிற் தூங்கிய என்னை இன்று நீ எழுப்பினய். இப்பொழுதே நான் பிராணிகளை இம்சிப்பதை விடுத் தேன். இன்று முதல் நாகங்கள் இக்கடலில் யாதொரு பயமுமின்றி சுகமாக ஸஞ்சரிக்கட்டும். கால் வரை யில் நீண்டு அடர்ந்த மேகங்களைப் போல் கருத்த கூந்தல்களையுடைய நாகஸ்திரீகள் தங்கள் கபோலங்களில் இளம் வெயிலைப்போல் சிவந்த சிந் தூரத்தை யிட்டுக்கொண்டு, யாதொரு இடுக்கணுமின்றி. சந்தனக் காடுகளில் உன்னுடைய கீர்த்தியைப் பாடுவார் களாக." என்றான்.

ஃ

இவ்வாறு பேசியபின் சிறிது நேரத்துக்கெல்லாம் ஜீமூதவாகனனு டைய உடலில் மரணவேதனை யுண் டாயிற்று. அவனுடைய மரணம் சமீபித்து விட்டது போலிருந்தது.

ஃ

ஜீமூதகேது "குழந்தாய்! கடைசி யில் இவ்வாறு செய்தாயே! ஐயோ! நீ எங்கு சென்றாய்? நான் கேட்கும் கேள்விக்கும் பதிலுரைக்க மாட் டாயோ! நீ இறந்த பின்பு தைரிய மும், வணக்கமும், பொறுமையும் ஸத்தியமும், தயையும் உன்னை விட்டு எங்கு செல்லும்? உன்னை யிழந்த பூமியே இன்று சூனியமாகக் காண் கிறது." எனப் புலம்பினன்.

ஃ

மலயவதி "ஆ நாத! என்னைத் துறந்து நீர் எங்கு சென்றீர்? நாத னிறந்ததைக் கண்டும் என் பிராணன் இன்னும் போகவில்லையே!" எனக் கண்ணீர்விட்டுக் கதறினள்.

ஃ

ஜீமூதகேதுவின் மனைவியாகிய கிழவி "ஐயோ! காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்! பிள்ளாய்! குழந் தாய்! பெரியோரிடத்தில் வணக்க முள்ள ஜீமூதவாகன! என்னை விட்டு எங்கேகினய்? லோக பாலர்களே! அமிருதத்தைப் பொழிந்தாவது என்

வெகு தூரத்திலிருக்கிறவனின்மீது கோபங்கொண்டு என்ன செய் கிறது? சுவரில் முட்டிக்கொண்டால் தனக்குத்தான் காயமாகும்.

மகளைப் பிழைப்பிக்க மாட்டீர்களா வென்று அழுதாள்.

(மற்றதில் முடிவு.)
K. S. ஸ்ரீநிவாசாசாரியார்.

என் பிரிய இரவல் புஸ்தகமே போய்வருகிருயா?

என் கண்ணே! மணியே! எனக்குப் புது அறிவு தந்த பொக்கிஷமே! நான் ஆசை வைத்த அலேந்து தேடிய அன்பான புத்தகமே! உன்னை என் அன்பர் எனக்கு இரவலாக கொடுத்தார். உன்னை நான் அடையப்பெற்ற இந்தப் பதினெரு நாட்களாக உன்னைப் படித்து ருசித்தபடியே இருந்தேன். உன்னிடமிருந்த அமிர்தங்களை வாரிவாரிப் பருகினேன்: உன்னிலே யிருந்த பல நல்விஷயங்களை ஒரு தனித்தப் புஸ்தகத்திலே எழுதி வைத்துக்கொள்ள இந்த பதினெரு நாளாக முயன்று ஏதோ கொஞ்சம் முக்கியமான வற்றை யெல்லாம் எழுதிக்கொண்டேன். உன்னை முழுதுமே எழுதி வைத்துக்கொள்ள ஆசை. நீயோ பெரிய புஸ்தகமாக இருக்கிருய். அவ்வளவும் பூரணமாக எழுதிக்கொள்ள எப்படி முடியும்? ஆகவே, என் சக்திக்கு மீறியவரையில் இரவு பகல் கண்விழித்துப் படித்தும் எழுதியும் மனப்பாடம் செய்துகொண்டும் ஒருவித திருப்தியை ஏற்றேன். இதிலே பதினெருநாளாய்விட்டதால் உன்னை இரவல் தந்தவர் மறுபடியும் பெற்றுப்போக வந்திருக்கிருர். அவர் இத்தனை நாள்வரையில் உன்னை என்னிடம் இருக்கவைத்த கருணை மகா பெரிது. என் புஸ்தகமே! கண்ணே! நீ விலேக்கும் இப்போது அகப்படமாட்டாய்! உன்னைப் பிரியவேண்டிய நேரமும் வந்துவிட்டது; உன்னோடு இந்தப் பதினெரு நாட்களாகப் பழகின என் உள்ளம் இப்போது நீ என்னை விட்டுப் போய்விடுவதைப் பார்த்துத் தவிக்கிறது! என்ன செய்யலாம்! இரவல் புஸ்தகமே! உன்னை ஒரு தமக்கையாக நினைத்து உனக்கு முத்தம் கொடுத்து உன் புருஷன் வீட்டுக்கு அனுப்பிவைப்பதுபோல உன்னை அனுப்பிவைக்கிறேன். இந்தா என் முத்தம் பெற்றுக்கொள். இரவல் புஸ்தகமே போய்வருகிருயா! ஞானச்சுடரே! போய் வா சுகமாயிரு. உனக்கும் உன்னை இரவல் தந்தவருக்கும் என் பிரேமபூர்வமான வந்தனங்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். [இது இரவல் பெற்ற ஒரு அரிய நூலைத் திருப்பித் தந்தபோது அந்தப் புஸ்தகத்தைப் பார்த்து அதைப் படித்தவர் அன்புடன் கூறியதாகும்.]

சென்றமாதம்

மகாத்மாவின் மீது வேடிகுண்டு:-

"பாவம் ஒருபக்கம், பழியொரு பக்கம்" என்பது போல, புனுவில் எவனே ஒரு பாதகன் மகாத்மாவின் மீது வெடிகுண்டு எறிந்து அகப்படாது தப்பித்துக்கொண்டான். மகாத்மாவும் இவ்விபத்திலிருந்து பிழைத்தது கடவுளின் கருணைதான். மகாத்மாவுக்கு நேர்ந்த விபத்தில் அவரை வெறுக்கும் சநாதனிகளிற் பலர் ஸந்தோஷித்திருப்பார்கள்; சிலர் துக்கித்துமிருப்பார்கள். எல்லா சநாதனிகளுமே இந்த விபத்துக்கு வருந்தினார்களென்பது சுத்தப் புளுகு; அது வெறும் உபசார வார்த்தை தான்.

ஃ

காங்கிரஸின் முயற்சிகள்:—

"கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டதுபோல" இருந்த இருட்காலம் நீங்கி, இப்பொழுது காங்கிரஸ் மகாசபைக்கு நற்பெயர் உண்டாயிருக்கிறது. அதன்மீதிருந்த தடைகளெல்லாம் விலகிப்போயின. காங்கிரஸ் பொன்விழா கொண்டாடவும் யோசிக்கிறார்கள். காங்கிரஸ் கூட்டவும் காரியங்கள் நடக்கின்றன. காங்கிரஸின் பெயரைச் சொல்லிக் கொண்டு சட்டசபையேறிக் கௌரவம் பெறவும் புறப்பட்டிருக்கிறார்கள். ஸ்வராஜ்யம் கிடைப்பது சுலபத்தில்லை யென்று தெரிந்துவிட்ட பிறகு, சும்மா விழுந்துகிடப்பதை விட, ஏதேனும் பேசியபடி கிடப்பது நல்லதென்று நினைக்க ஆரம்பித்ததும் அந்த மட்டுக்குச் சரிதான்.

ஃ

புதிய முறையில் போஸ்டல் ஆர்டர்:—

"புதியதிலும் ஓட்டை உண்டு, பழயதிலும் நல்லதுண்டு." பத்துரூபா வரை மணியாடர் அனுப்ப இரண்டணா சட்டணம் தரவேண்டியிருப்பதுடன், மணியாடர் கூப்பனிலும் அதிக சங்கதிகள் எழுத இடமில்லாதிருப்பதை நிவர்த்திக்க ஒரு புது ஏற்பாட்டை யோசித்துள்ளார். ஐந்து ரூபாய்க்கு உட்பட்ட தொகைக்கு ஒரு அணா கட்டணம் செலுத்தி தபாலாபீசில் ஒரு போஸ்டல் ஆர்டர் ரசீதை வாங்கிக்கொண்டால், அதைக் கவருக்குள் வேண்டியவரை எழுதிய கடிதத்தோடும் வைத்து அனுப்பிக்கொள்வது சௌகரியமா யிருக்குமென்கிறார்கள். இந்தக் கவர் தபாலில் தவறிவிட்டால் என்ன செய்வது? தபாலாபீஸ் தூரமாயிருக்கும் கிராமத்தினர் தங்களுக்கு வந்த போஸ்டல் ஆர்டரை மாற்றத் தபாலாபீசுக்குப் போவது வெகு கஷ்டம். மணியாடரைப்போல பத்திரமும் சௌகரியமுமாக இது ஆகாது. மணியாடர் கூப்ப

உழைத்துத்தேடி வீட்டிற்குக் கொண்டுவந்து போடுகிறவன் புசிப்பதற்கு சற்று நேரமாய்விட்டாலும் கோபிப்பதில்லை ஆனால், உட்கார்ந்து தின்னும் மகான்களுக்குத்தான் சற்று தாமதமாய் விட்டாலும் கனத்த கோபம் புறப்பட்டுக்கொள்ளுகிறது.

னில் இருபக்கமும் எழுதினுல் அதிக சங்கதிகள் அடங்கும். இந்த ஏற்பாட்டைவிட, மணியாடர் கூபனைச் சற்று பெரிதாக்குவது மேலாகும். மணியாடர் கட்டணம் ஐந்து ரூபாய்க்கு ஒரு அணு ஆக்குவது இன்னும் மேலான மேலாக இருக்கும்.

ஃ

இரவில் சுமங்கலி, காலையில் அமங்கலி:—

"மனைவியாய்ப் படுத்தாள், விதவையாய் எழுந்தாள்" என்று ஒரு புதிய பழமொழி புறப்பட்டிருக்கிறது. மதுரையில் 30-வயதுள்ள ஆதி திராவிடப் பெண்ணொருத்தி இரவில் தன் கணவனுடன் உறங்கச் சென்றவள் காலையில் கண்விழித்து எழுந்தபோது, தன் கணவன் வீட்டுக்கூறையில் கயிற்ருல் கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டு தொங்குவதைக் கண்டாள். உடனே கயிற்றை அறுத்தும் அதற்குமுன்பே உயிர் போய்விட்டது. வயிற்றுவலி தாளாமல் இப்படி இறக்க நேர்ந்ததாம். பெண்ணின் துக்கம் பெரிய கண்ராவியே! ஆபத்து என்பது திடீரென்று வருகிறது. அதைச் சகிக்கக் கடவுளிடம் அலற வேண்டியிருக்கிறது. பெண் பெரியவளானுள் என்று சந்தோஷப்படுகையில், அவள் புருஷன் மரித்துப்போனுன் என்று தந்தி வருகிறது! மண அணி அணிந்த மகளீர் ஆங்கே பிண அணி அணிய நேர்வதும் விதியின் பிழையே.

ஃ

உத்தியோக நியமனங்கள்:—

"உள்ளதும் போச்சு நொள்ளைக் கண்ணுய்" என்பார்கள். ஹிந்து ஸமூகத்தாருக்கு இப்போது உத்தியோகம் கிடைப்பது வெகு கஷ்டமாயிருக்க, இன்னும் அதற்கு அதிக சோதனை ஏற்பட்டுவிட்டது. கவர்ன்மெண்டார் உத்தியோக நியமனங்களில் முஸ்லிம்களுக்கு 25 பங்கும், இதர மைனுரிட்டி சமூகத்தினருக்கு $8\frac{10}{30}$ பங்கும் ஏற்படுத்தி ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் முஸ்லிம்கள் 22-பங்காக இருந்துவர, அவர்களுக்கு 25-ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதால், இனி உத்தியோகங்களில் முஸ்லிம்களே அதிகமாக நியமனம் பெறும்படியாகும். ஹிந்துக்கள் இதுகாறும் உத்தியோக பதவிகளில் விளங்கியது இனி குறையத் தொடங்கலாம். ஆகவே, ஹிந்துக்கள் தங்களது மக்களின் பிற்கால ஜீவியம் எவ்வாறென்பதைக் குறித்துக் கவலையுடன் யோசிக்க வேண்டியவர்களாயுள்ளார். படிப்பை உத்தியோக ஆசையுடன் படிக்காமல், அறிவு விர்த்திக்கென்றே படிக்க வேண்டுமென்ற புதிய புத்திமதியும் இப்போது புறப்பட்டிருக்கிறது. வியாபாரத் தேர்ச்சிதான் வயிறு வாடாதிருக்க இனி வழி தரும் என்ருல், எந்த வியாபாரம் செய்வதென்றும் எதுவுமே தோன்றவில்லையே ஈசா! என்றும் ஏங்கித் தடுமாறுகிருர்கள்!

ஃ

புகைக்கூண்டில் ஏறி, ஆகாயத்தில் நெடுந்தூரம் சென்று, பின் அங்கிருந்து ஒருவிதமான குடையைப் பிடித்துக்கொண்டு, அந்தக் குடைவாயுமண்டலத்தில் அமிழ்ந்து மெதுவாகப் பூமியை நோக்கிவர, தானும் அக்குடையுடன் பூமிக்கு வந்திறங்குகிற வேடிக்கையைக் காட்டும் காட்சி 40-வருஷங்களுக்கு முன்பு டிக்கட்டுகள் வைத்துக் காட்டப்பட்டது. இப்போது அந்தக் காட்சி மோட்டாரின் முன்பு இரட்டைமாட்டுவண்டிக்குச் சமமாகி விட்டது அக்காட்சியும் மறைந்தது. ஒவ்வொரு காலத்திலே ஒவ்வொன்று.

மறுபடியும் உபவாஸம்:—

"மொழி தவருதவன் வழி தவருதவன்" என்பார்கள். மகாத்மா ஒரு வார்த்தை கூறிவிடின் அதுவே முடிவு. அதை மாற்ற எவராலும் இயலாது. ஹரிஜன யாத்திரையில் தாம் தெரிந்தோ தெரியாமலோ செய்த குற்றங் குறைகளுக்கு ஒரு பரிகாரமாகவும், தமது ஆஜ்மீர் விஜயத்தில் பிறரால் தலையில் கனத்த காயம்பட்ட பண்டிதலால் நாத்தின் பொருட்டாகவும் மகாத்மா ஆகஸ்டு மாதம் 7-ம் தேதி முதல் ஒருவாரம் வரை உபவாசமிருக்கத் தீர்மானித்துள்ளார். மகாத்மாஜீக்கு பகவான் வேண்டிய சக்தியைக் கொடுப்பாராக. ஒவ்வொரு உபவாசத்திலும் மகாத்மாவுக்கு சக்தி அதிகமாகிறது.

ஃ

மகாத்மாவின் மனைவியார்:—

"மனதைப்போலிருக்கும் மங்கிலியம்" என்பதாக, மகாத்மா தமது மனைவியைப்பற்றிப் பின் வருமாறு கூறினார்:—"இவ்வித (உபவாசம் போன்ற) காரியங்களிலே அவள் எனக்கு எவ்வித தொந்தரவும் கொடுப்பதில்லை. என்னோடு இதைப்பற்றி வாதாடுவதுமில்லை. இது என் நல்லதிர்ஷ்டமாகும். அவளுக்கு வருத்தமிருந்தாலும் என் வழியே நான்போக அவள் அநுமதித்து விடுவாள். ஆகவே அவள் எனது மனைவியாகவிருந்தாலும் தைரிய மிக்கப் பெண்களில் அவள் ஒருத்தி எனத் திட்டமாகச் சொல்வேன்" பார்த்தாவுக்கேற்ற பதிவிரதை.

ஃ

"அமிர்தகுணபோதினி" ஆபீஸில் களவு:—

"உளவின்றி களவு போகாது" என்பது உண்மை. ஜூலை மாதம் 2-ம் தேதி இரவில் ஆபீஸைச் சேர்ந்த ராமகிருஷ்ணரெட்டி என்பவன் ஆபீஸின் பின்பக்கத்துக் கதவு வழியாய் உள் நுழைந்து மேஜைக்குள்ளிருந்த ரூ. 4849—12—0ஐயும் திருடிக்கொண்டு செல்லுகையில் வியாசர்பாடியில் போலீஸார் சந்தேகித்துக் கைது செய்தனர். இது முதல் குற்றமென்று 2-மாத கடுங்காவல் விதிக்கப்பட்டான். கெட்ட காலத்திற்குத் தகுந்த கெடுபுத்தி.

பழங்காலத்தில் 1875-ம் வருஷமுதல் நடைபெற்ற மாதஸஞ்சிகையான ஜனவிநோதினிப் பத்திரிகையிலிருந்த விஷயங்களெல்லாம் மூன்றும் வகுப்பு தொடங்கி மேல் வகுப்புகள் பலவற்றிற்கும் பாட புஸ்தகங்களாக அமைந்துவிட்டன. மாணவர்கள் ஜனவிநோதினியைப் படிப்பதாக உணராமலே தங்களின் பள்ளிப் பாடங்களைப் படிப்பதாக எண்ணினர். நாளைக்கும் ஜனவிநோதினிப் பத்திரிகைக்கு ஒரு தனியான மதிப்பு இருந்து வருகிறது. இந்தப் பாட புஸ்தகங்கட்குப் பிறகே பள்ளிப் பாட புஸ்தகங்களை எழுதப் புது ஆசிரியர்கள் தோன்றினர்.

முன்பு சென்னைக்குக் கவர்னராக வந்தவர்களில் மூவர் சென்னையிலேயே காலஞ்சென்றிருக்கிறார்கள். முதலில் ஸர். ஹென்றி வார்ட்டு என்பவர் வாந்திபேதியால் மரித்தார். இரண்டாவது லார்ட் ஹோபார்ட் பிரபு சுரங்கண்டு இறந்தார். மூன்றுவதாக கனம் ஆதம் பிரபு உதகமண்டலத்தில் பக்கசூலை கண்டு 24-5-1881-ல் காலமானார்.

வாசனை யறியும் சக்தி.

உலகத்திலுள்ள பொருள்களின் வாசனைகளை நன்றாய் உணர்ந்து, துர்க்கந்தமுள்ள பொருள்களை விலக்கிச் சுகந்தமுள்ள பொருள்களைக் கிரகித்துக்கொள்வதற்கு முதற் காரணமா யிருக்கின்ற இந்திரியமே கிராணேந்திரியமாம். தேகதத்துவ சாஸ்திரத்தில் கிராணேந்திரிய நாடியே முதன்மையாகச் சொல்லப் பட்டிருக்கிறது. ஆயினும், வாசனை யறிவதான நாசியானது கண் காதுகளுக்கு இணையாகமாட்டா. கிராணேந்திரியம் கெட்டு வாசனையறியும் சக்தி போய் விடினும், மனிதர்களைப் பொறுத்தவரையில் யாதொரு இழிவும் உண்டாகாமல், நடக்கவேண்டிய காரியங்கள் எப்போதும்போலவே நடந்துவரும். ஜல தோஷத்தால் வாஸனை தெரியாதபோது ருசியுணர்வதற்கு இல்லாதுபோன குறைதவிர மற்றவைகள் சாதாரணமாக நடந்தபடியுள்ளன.

ஃ

நீக்ரோ ஜாதியாருடைய நாசி மிகவும் பெரிது. அதற்கேற்ப அவர்களுக்கு வாசனை அறியும் சக்தியும் அதிகம். கிராணேந்திரியம் போஜன காலங்களிலேயே முக்கியமாய்ப் பிரயோஜனப்படுகிறது. புசிக்கும்பொழுது போஜனத்தின் பரிமளத்தை யுணர்வது கிராணேந்திரியத்தின் பெருமையே யன்றி ரசனேந்திரியத்தாலல்ல. ரசனேந்திரியத்துக்குத் தித்திப்பு-புளிப்பு-உப்பு-காரம் முதலிய சுவைகளை அறியும் திறமையே யொழிய மணத்தை உணரும் திறமை யில்லை

ஃ

கிராணேந்திரியமில்லாத பக்ஷத்தில் பதார்த்தங்களின் குணாகுணங்களைக் கண்டுகொள்ளும் திறமை எவர்க்கும் இராதாதலின், அழுகி நாற்றமெடுத்த பலவகைப் பண்டங்கள், மச்சம், மாமிசம் முதலியவற்றைப் புசிக்க உடன்பட்டு அதுநிமித்தமாய்ப் பல நோய்களைத் தேடிக்கொள்வோம். போஜனத்தையும் வயிற்றுப்பசி தீர்வதற்குமட்டும் புசித்துத் தொலைக்கும்படி நேரும். வாசனையறியும் திறமை யழிந்துபோமாயின், பலவகைத்தோட்டப் பயிர்களும் பயனற்றவையாகிவிடும். மல்லிகை, முல்லை, ரோஜா முதலிய பல பூஞ்செடிகளும் கண்களிப்பதற்காகவல்ல; முக்கியமாய் மோந்து மகிழ்வதற்காகவே படைக்கப்பட்டிருக்கின்றன.

ஃ

மனிதர்களைத் தவிர மற்ற ஜீவன்களுக்கும் கிராணேந்திரியம் பிராணபதமாயிருக்கின்றது. முன் ஜாக்கிரதை யுடையவற்றுள் முதன்மையா யிருக்கின்ற எறும்புகளுக்கு முதற்றுணையானது வாசனை யறியும் சக்தியான கிராணேந்திரியம் ஒன்றுதான். வயிற்றுக்கு இரைதேடுவது மாத்திரமேயல்ல; அவை செய்கின்ற ஸகலமான காரியங்களுக்கும் கிராணேந்திரியமே வழிகாட்டியா யிருக்கின்றது. தும்பியில் அமைந்திருக்கின்ற இந்தக் கிராணேந்திரியத்தாலேதான் எறும்புகள் சத்துரு

மித்திரர்களை அறிந்து கொள்கின்றன. வேலை செய்யவேண்டிய வழியையும் அறிகின்றன. சில கட்டை யெறும்புகளைத்தவிர, மற்ற எல்லா எறும்புகளுக்கும் கண்ணே கிடையாதாகையால், அவை இவ்வுலகம் முழுமையும் அதற்குரிய வாசனையின் வேற்றுமையைக்கொண்டே பொருள்களின் பேதத்தைக் கண்டு கொள்கின்றன.

ஃ

நீர்வாழ் ஜந்துக்களுள் சிலவற்றிற்கு நேத்திரமே வழி காட்டியாயிருக்கின்றதாயினும், கிராணேந்திரியமே பலவற்றிற்கும் பிரதானமாயிருக்கின்றது. பறவைகளுக்கு அத்தனையாக வாசனை பிரதானமன்று; பார்வையே பிரதானமானது. எலிகளுக்குக் கிராணேந்திரியமே முக்கியம்; நேத்திரம் அத்தனை சிறந்ததன்று. இலை தழைகளைப் புசிக்கின்ற மிருகங்கள் பூச்சிகள் முதலியவைகளெல்லாம் அநேகமாய்த் தமக்குள்ள வாசனை யறியும் திறமையைக் கொண்டுதான், விஷத் தன்மையுள்ள தழைகளை விலக்கித் தமது தேகத்துக்குப் புஷ்டி யுண்டாக்கவல்ல நல்ல புல் பூண்டுகளையே பகுத்தறிந்து புசிக்கத் திறமையுடையவையாயிருக்கின்றன. ஒரு அபாயமுமின்றி அவற்றைக் காக்கின்றதும், அபாயத்தை முன்னரே அறிவிக்க உதவுவதும் அந்தக் கிராணேந்திரிய மென்றே சொல்லவேண்டும்.

ஃ

தாம் கிரகிக்க வேண்டியவை இவை யென்பதும், விலக்கவேண்டியவை இவை யென்பதும் பிராணிகளுக்கு நன்றாய்ப் புலப்படுமாறு அந்தந்தப் பொருளின் குணம் இத்தன்மைய தென்பதை எல்லாப் பிராணிகளுக்கும் கிராணேந்திரியமே அறிவிக்கின்றது. தேக வலிமையின்றி வேகமாய் ஓடும் திறமையையே தமக்கு முதற்றுணையாகக் கொண்டிருக்கின்ற மான், முயல், நரி முதலிய மிருகங்களுக்குச் சத்துரு முதலியவற்றால் அபாயம் நேரிடப்போகிற செய்தியை முன்னதாய்த் தெரிவித்துத் தப்பித்துக் கொண்டு ஓடிப்போக அவகாசம் உண்டாகும்படி செய்கின்றது கிராணேந்திரியமே. மாமிசத்தைப் புசிக்கின்ற கொடிய மிருகங்களுக்குத் தம் இரையைக் கள்ளத்தனமாய்க் கண்டுபிடித்து, அவற்றிற்குத் தெரியாமல் திடீரென்று அவற்றின்மேல் பாய்ந்து பிடித்துக்கொள்ளத்தக்க திறமையையுண்டாக்குவதும் கிராணேந்திரியமேயாம். நாய்களுக்குக் கிராணேந்திரியம் அழிந்துபோகுமானால், பின்பு அவை நாய்களே அல்லவாம். ஏனெனில், நாய்களின் முதற்குணம் நன்றியும் எஜமானனிடத்தில் ஒப்புயர்வில்லாத அபிமானமுமல்லவா? கிராணேந்திரியம் அழிந்துபோனால், அதனோடு இந்த நற்குணங்களும் கெட்டு அழிந்துபோகின்றன. இவன் எஜமானன் என்பதும், இவன் அயலான் என்பதும் நாய்கள் அறிந்துகொள்வது அததற்குரிய வாசனையைக்கொண்டுதான். வாசனையறியும் திறமையற்ற நாய்களை எவ்வளவு அருமையாகப் போற்றி வளர்த்தும் அவை அபிமானமில்லாமற் போனதற்குப் பல திருஷ்டாந்தங்களுண்டு.

பிறருடைய மதிப்பைத் தாங்கள் குறைவாக நினைத்துக் கொண்டு அலக்ஷியம் செய்தாலும், அந்தப் பிறருக்குள்ள மதிப்பு முன்னையினும் அதிகமாக இருப்பதை இவர்கள் காணும்படியாகிறது.

மாயமாய்ப்போன மங்கை.

பால விவாகம்

சாரதாச் சட்டம்.

(159-வது பக்கத் தொடர்ச்சி.)

ஒரு பெண்மணி எழுதியது.

பஞ்சநதம்:—என்ன அக்கா என்னமோ ராமாயணம் எல்லாம் படிக்கிறாய்; நானென்ன சொல்லிவிட்டேன்? இதுக்காகப் பிரமாதமாய் பேசறயே.

சிவகாமி:—இல்லேடப்பா நாஞ் சொல்லறது ராமாயணம் பாரதமாத்தானிருக்கும்; போகப் போகத்தான் தெரியும்; கிடக்கு வாயை அடக்கப்பா.

இவ்விதம் தன் அக்காள் தன்னை அதட்டினது அவனுக்கு நடுக்கம் கொண்டு விட்டது. பாவம் வாயை மூடிக்கொண்டு மெல்ல வெளியே சென்று விட்டான்.

சிவகாமி அம்மாள் மேஜையண்டை சென்று புஷ்பப் பொட்டணத்தை யவிழ்த்து, பாரு இவனுக்கு எத்தனை நாளைக்குத்தான் சொல்வது இவ்வளவு பூ எதுக்கு? அப்படித்தான் வாங்கவேணுமானால் நாங்கள் வாங்கி வைக்கிறோம். இவளுக்கேன் பாடு தினம் என்ன பூவேண்டியிருக்கு? வீட்டில் நான் ஒருத்தி வாழாமலிருப்பது தெரியாதா? இவளுக்கென்ன ஸந்தோஷமும் கொண்டாட்டமும் குட்டிச்சுவராப் போச்சு! புத்தி என்னன்னாலும் இவளுக்குத்தான் என்ன வாழ்வு இத்தனை ஒழுங்கா கண்ணைப்பார் வண்டயம் போலே ஓடம்பெத்தாள் பார் மொழு முழுன்னு மொழுக்கு வர்த்தியாட்டமா கிடக்கட்டும் இனிமேல் இந்த வேளைய தண்ணிவிட்ட சோறு போட்டுச்சாக டிக்கிறேன். இவள் செத்தாளானால் அம்பிக்கி இன்னம் ஆயிரம் ரூபாய் வரதக்ஷிணை வாங்கலாம் என்று முணு முணுத்துக் கொண்டே. பூவை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள் அப்பொழுதுதான் ரயிலிலிருந்து வந்த சம்மந்தியம்மாளாகிய ரங்கநாயகியம்மாள் வண்டிவிட்டு இறங்கி உள் நுழைந்தாள். அவளைக் கண்டதும் வாருங்கள் என்ற சொல்கூட சிவகாமியம்மாள் வாயில் வராமல் தலையைத் தோளின்மீது இடித்துக்கொண்டு உள்ளே சென்றாள். ஜான

கியோ தன் தாய் வருவதைக் கதவிடுக்கால் கண்டு கொண்டாள். கண்டு கொண்டுதானென்ன? அவளுடன் தன் தாயைக் கூடிக்குலாவ முடியுமா? அல்லும்பகலும் தாயின்பேரில் எண்ணம்; தாயைக் கண்டவுடன் ஒரு புறம் ஸந்தோஷம்; ஒருபுறம் ஏதோ திகில். ஆகையால் தாயைக் கண்டவுடன் இன்னும் நன்றாகக் கதவின் மூலையில் புகுந்து கொண்டாள். அவளுடன் தன் செல்வக் குழந்தையாய் வளர்க்கப் பட்ட பெண்ணைக்காண எவ்வளவு கஷ்டப்பட்டு வந்தவளோ பாவம்! சிவகாமி அம்மாள் தன்னைக்கண்டு கூட ஒருவார்த்தை வாவென்று கூப்பிடாமல் அசட்டையாய் உள் சென்றிடவே அந்தம்மாள் தேகம் குன்றிவிட்டது. உள் நுழையக் கூடக்காலில்லை. ஆனாலும் பெண்ணைக் கொடுத்தாயோ கண்ணைக் கொடுத்தாயோ என்றபடி கூடத்தில் மாந் தோலின்மீது விபூதி ருத்திராக்ஷதாரியாய் ஜபம் செய்து உத்திரா க்ஷத்தை உருட்டிக்கொண்டிருந்த கிழவியாகிய பஞ்சநதம் தாயாரிடம் சென்று சம்மந்தியம்மா க்ஷேமந்தானா என்று தான் கொண்டு வந்த பக்ஷணம் பலாதிகளை எல்லாம் எடுத்து வைத்துத்தானும் உட்கார்ந்து கொண்டாள். கண் தெரியாமல் ஜபத்திலிருக்கும் அந்தக் கிழவி யாரு தெரியவில்லையே ஆ! என்று தன் பொக்கை வாயைத் திறந்தாள். அதற்குள் அக்கிழவியின் பெண் சிவகாமி வந்து அதென்ன யாருன்னு கேக்கரே எல்லாம் உன் சம்மந்திதான் வந் திருக்கா வேறயாருக்கு கூப்பிடாத வீட்டுலே சுவாதீனம் உக்கார.

இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் சம்மந்தியம்மாள் ரங்கநாய கிக்கு வந்த கோபம் கணக்கு வழக்கில்லாமலிருந்தது. இருந்தும் என்ன செய்வது? வந்து இன்னும் தன் பெண்ணைக்கூடப் பார்க்க வில்லை. ஆகையால் சாந்தமாகவே அம்மா என் பெண்ணைப் பார்க்க என்னை யார் கூப்பிடவேணும் பெண்ணைப் பெற்றவர்கள் அந்தப் பெண்மேலுள்ள வாஞ்சையால் அழைத்தாலும் அழைக்காவிட்டா லும் வந்து பார்ப்பது ஸகஜந்தானே. எங்கேயம்மா ஜானகி பார்க்க ரொம்ப ஆசையாய் வந்தேன்.

சிவகாமி:—நன்னாத்தானிருக்கு. உங்க ஜானகியை என்ன நாங்க ஒளிச்சா வச்சிருக்கோம்! இங்கேதானிருப்பள் போய்ப்பாருமே என்று மிகவும் சினந்து சொன்னாள். தாயாகிய துளஸியம் மாக் கிழவிக்கோ இவர்கள் ஒருவருக்கும் பதில்சொல்லத் தெரி யாமல் எங்கேயடி பெண்ணே! உன்னைக்காண இத்தனம்

வாக்குவாதம் நடக்க நீ எங்கே பூந்துகுண்டிருக்கே? அம்மாவைக் கண்டதும் அடக்க ஒடுக்கம் வந்தூட்டதாக்கும். தினம் நாட்டியக் குதிரையாட்டமா இதுக்கும் அதுக்குமா ஓடுவா; எங்கே வா உங்கம்மாளுக்கு உன்னைப் பார்க்கணுமாம் என்றாள். இத்தனை வார்த்தைகளையும் மூச்சு விடக்கூடப் பயந்து ஒடுங்கி நின்ற ஜானகி கேட்டவுடன் மெதுவாக நடந்துவந்து அங்குள்ள மூவருக்கும் நமஸ்காரம் செய்துவிட்டுக் குனிந்த தலை கூட நிமிராமல் உள்ளே சென்று மின்னல்போல் மறைந்தாள். ஆகா! தாயார் பெண் சென்ற உள்பக்கத்தைவிட்டுச் சற்று நேரம் கண்ணையும் மனதையும் திருப்பாமலிருந்தாள். பிறகு தன்னினைவு கொண்டவளாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டாள். அச்சமயத்தில் பூர்ண சந்திரனே உதித்தாற்போல் கட்டழகமைந்த ஒரு பெண்மணி வந்து நின்றாள். அவளைக் கண்டவுடன சிவகாமியம்மாள் மிகுந்த பரபரப்பாயெழுந்து வா அம்மா நீலாம்பா! எது அத்தி பூத்தாப்போல் இருக்கு உக்காரு! உக்காரு! நிர்க்கலாமோ நீ! என்று மிக்க உபசாரம் செய்தாள். அவளுடைய உபசாரத்திற்கு மிகவும் ஸந்தோஷங் கொண்டவள்போல அபிநயித்த அப்பெண்மணி அவள் போட்ட ஆஸனத்தில் அமர்ந்தாள். அதற்குள் அவள் தாயாகிய கிழவி குழந்தே நீலாவாம்பா! ஏதுடியம்மா அத்திபூத்தாப் போலே அபுரூபமா வந்தே! குழந்தை ஸௌக்கியமா?

நீலா:—ஆமாம் பாட்டி குழந்தைக்கு இன்று ஆயுஷ்ஹோமம் என்றும் ஜானகியை அனுப்பும்படிக்கும் நான் எத்தனைதடவை சொல்லியனுப்பியும் ஏன் நீங்கள் அனுப்பவேயில்லை. ரொம்ப வீடு தூரமா? இந்த உயர மெத்தைச் சாளரத்தில் கூட அனுப்பும் படி சற்றுமுன் உங்களைக் கூப்பிட்டேன்; நீங்கள் ஏதோ பேச்சு மும்முரத்தில் இருந்துவிட்டீர்கள். நேரில் வந்து அழைத்துப் போகலாமென்றேதான் வந்தேன். எங்கே ஜானகி? என்றாள்.

உடனே சிவகாமியம்மாள் ஜானு சீப்பு எடுத்துண்டு வா அம்மா தலை பின்னிவிடுகிறேன் என்று மிகவும் அருமையாகச் சொல்ல, ஜானகி சீப்பெடுத்துக்கொண்டுவந்து பின்னிக்கொள்ள உட்கார்ந்தாள்.

நீலா:—ஏன் ஜானகி அதிக இளைப்பாயிருக்கிறாள்?

சிவகாமி:—அய்யோ! அதை யேன் கேட்கிருய்! நீலா, அது சோறே தின்கிறதில்லே. அஸாத்தியத்துக்குட்படுத்தறது. நாங்க ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணுக இருக்க இருக்க எங்க பாவம் இப்படியாறது. அவளெச் சொல்லக் குத்தமில்லே யென்று மிகவும் ஒழுங்காகப் பதில் சொன்னுள்.

ஆகா! எப்பேர்ப்பட்ட வஞ்சக நெஞ்சம்! என்ன பேச்சு! அவ்வளவும்மாபாவம்! என்னேக்கண்டால் விஷத்துக்குச்சமானமாயிருப்பதென்ன, ஒண்ணுக நான் இவர்களுக்குத் தோணுவதாகச் சொன்ன வார்த்தை என் நெஞ்சைப் பிளக்கிறது. என்ன ஸாகஸம்? நான் ஒழிந்துவிட்டால் இவர்கள் மிகவும் ஸந்தோஷப்படுவார்கள். என் பேதை அம்மாள்தான் தவிப்பாள்; அவள் தவிப்புக்காகத்தான் இங்கு ஒரு கிணறுகூட யில்லே. விழுந்து இறந்துபோவேனு என்னமோ? என்னே லக்ஷியம் செய்து நீலாம்பாள் எத்தனே தடவைக் கூப்பிட்டும் இவர்களுக்கு என்னே அனுப்ப இஷ்டமில்லே. அவள். இந்த வீட்டுக்கு இந்த லக்ஷ்மியாள் நடுவில் வரவுந் தகுமா மகா லக்ஷ்மி போன்றவள் கோடீச்வரன் மகள் லக்ஷாதிகாரியின் மனேவி, அவள் செல்வ அரசி. நான் பிறந்ததற்குபயோகம் பூமிக்கு பாரம். என் மாமியாருக்கும் நாத்தனருக்கும் பிடிக்காத சுமை. ஈசா! என் காலம் என்று விடியுமோ என்று எண்ணமிடவும் தலேவாரிப் பின்ன எரிச்சலோடு பூவைத் தலேயில் கொஞ்சம் வைத்துவிட்டு எழுந்தாள். பிறகு எல்லாரையும் நீலா தன் வீடு வரும்படி அழைக்க சம்மந்தியம்மாளும் ஜானகியும் போகும்படி உத்தரவேற்பட்டதின்பேரில் மிகுந்த சந்தோஷத்தோடு ஜானகியும் அவள் தாயும் நீலாவுடன் அவர்கள் பங்களாவுக்குச் சென்றனர். அன்று அப்பங்களா முழுவதும் அலங்கரிக்கப்பட்டுப் பிறந்தநாள் கொண்டாட்டம் வெகு ஆடம்பரமாக ஆயிற்று. ஸாயங்காலம் டீபனுக்கும் ராத்திரி சாப்பாட்டுக்கும் அநேகம் கண்ணியமுள்ள பெண்களும் உத்தியோகஸ்தர்களும் வரவேற்கப்பட்டனர்.

நீலா பிரபுவாகிய மகாதேவையரின் புத்திரி என்பதைப் பார்த்தவர்கள் கண்டுகொள்ள முடியாது. மாந்தோப்பில் குதித்து விளேயாடிய நீலாவா இவள்? ஆம் அவள்தான்! என்ன அழகு! என்ன காந்தி! கடைந்தெடுத்த தங்கப் பதுமை போல் திடகாத்திரமாக விளங்குகிருள். (தொடரும்.)

" அமிர்த குணபோதினி "

பவஸூத்திய ஆடி மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்	தமிழ்	வாரம்	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை.
சி	16	1	திங்	சது-6-31, பூர-48-57, பூரம். ஸ்கந்த பஞ்சமி.
அ-சி	17	ஜூலைமீ 5—28 2	செவ்	பஞ்-11-9, உத்-54-15, கரிநாள், குமாரஷஷ்டி.
ம-சி	18	3	புத	ஷஷ்-14-22, ஹஸ்-57-58, ஷஷ்டி விரதம்.
சி-அ	19	4	வியா	ஸப்-15-56, சித்-59-56, மித்ர வைவஸ்வத ஸப்தமி.
சி	20	5	வெ	அஷ்-15-37, ஸ்வா-60-0, பக்ஷிராஜர், சுந்தரமூர்த்தி
அ-சி	21	6	சனி	நவ-13-22. ஸ்வா-0-1, உப-58-11, சாக விரதம்.
ம	22	7	ஞா	தச-9-13. அநு-54-39,
சி	23	8	திங்	ஏகா-3-22, உப-52-44 கேட்-49-37, க்ஷீராப்திபூஜா
அ-சி	24	9	செவ்	திர-47-53, மூல-43-27, ஜயாபாத்ர விரதம்.
அ	25	10	புத	சசி-38-43, பூரா-36-29, பவித்ராரோபனம்.
சி	26	11	வியா	○ 29-16, உரா-29-6, வியாஸ பூஜா, கஜேந்திர [மோக்ஷம்.
ம-சி	27	12	வெ	பிர-19-50, ஸ்ரீவ-21-48, அசூன்யசயன விரதம்.
சி-அ	28	13	சனி	துவி-11-0. அவி-15-3, சனிப்பிரதோஷம்
சி	29	14	ஞா	திரி-2-58, உப-53-5, சத 9-10, கிணறுவெட்ட
சி	30	15	திங்	பஞ்-50-44, பூட்-4-29, ஷஷ்டி.
அ-சி	31	16	செவ்	ஷஷ்-47-4, உட்-1-22, திதிகள்.
உ-ம	1	17	புத	ஸப்-45-18. ரே-0-2, அஷ்டமி.
அ-சி	2	18	வியா	அஷ்-45-26, அசு-0-30 நவமி, காவேரி பெருக்கு.
சி	ஆகஸ்டுமீ 3	19	வெ	நவ-47-24, பர-2 53, ஆடி கிருத்திரை திருத்தணி [தெப்பம்
அ	4	20	சனி	தச-50-56. கிரு-6-56. கரிநாள்.
சி	5	21	ஞா	ஏகா-55-47, ரோ-12-25, ஸ்மார்த்த ஏகாதசி.
அ-சி	6	22	திங்	துவா-60-0, மிரு-19-2, வைஷ்ணவ ஏகாதசி.
ம-சி	7	23	செவ்	துவா-1-30, ஆரு-26-26, பிரதோஷம்.
சி	8	24	புத	திர-7-49, புந-34-14, சிவராத்திரி.
அ-சி	9	25	வியா	சசி-14-19, பூச-42-5, சேது ஸ்ஞனம்.
ம	10	26	வெ	● 20-46, ஆயி-49-41, அதிதி, ஆடி அமாவாசை.
அ-சி	11	27	சனி	பிர-26-40, மக-5647, ஸ்ரீரவணசுத்தம்.
சி	12	28	ஞா	துவி-31-54, பூர-60-0, திருவாடிப்பூரம் ஸ்ரீ ஆண் [டாள் திருக்கல்யாணம்.
சி	13	29	திங்	திரி-36-16, பூர-3-7, மதுஸ்வரரமேசுவரஅம்பாள்
அ-சி	14	30	செவ்	சது-39-32, உத்-8-3, பஞ்சமி.
ம-சி	15	31	புத	பஞ்-41-31, ஹஸ்-12-46, கருட-நாக-பஞ்சமி,

			குஜசு புத
சனி	15உ-உதயத்திற்கு ராசி		ரவி கே
ராகு			
		.	குரு

Printed & Published by the Proprietor E. M. Gopalakrishna Kone; At the Amirtha Gunabodhini Press, 158-A, Broadway, Madras.